

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | மே 01, 2014 | புரட்சி 13 | முழக்கம் 16 | விலை: ரூ.3.00

# 7 தமிழர் விடுதலைக்கான உரிமைக் குரலை தொடர்ந்து முன்னெடுப்போம்!

முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழர்களை விடுதலை செய்யும் முடிவை தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தபோது கரைபுரண்ட உற்சாகம் - உச்சநீதிமன்றம் - இந்த வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றுவதாக அறிவித்தபோது தலைகீழாக மாற்றி ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் தந்திருக்கிறது.

5 பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு இந்த வழக்கு தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டிய 7 சட்டப் பிரச்சினைகளை முன் வைத்துள்ளது, தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான அமர்வு. சட்டங்களின் நுணுக்கங்கள் விவாதங்கள் எப்படி இருந்தாலும், ஒரு சாமான்யனின் பார்வையில் நீதி மறுக்கப்படுகிறது என்ற வேதனைதான் மிஞ்சுகிறது. ராஜிவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, தண்டிக்கப்பட்ட இவர்கள், 23 ஆண்டுகாலம் சிறையில் கழித்துவிட்டார்கள். மரண தண்டனையைக் குறைக்கக் கோரி கருணை மனு தாக்கல் செய்யப்பட்டு, அது 11 ஆண்டுகாலம் அது கிடப்பில் போடப்பட்டது. அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையான உயிர் வாழும் உரிமைக்கு எதிரானது இந்தக் கால தாமதம் என்று கூறி உச்சநீதிமன்றமே அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்துவிட்டது. இப்போது அவர்கள் அனைவரும் ஆயுள் கைதிகள். ஒரு ஆயுள் தண்டனை கைதி, சிறையில் இருக்க வேண்டிய காலம் குறைந்தது 14 ஆண்டுகள் என்று 1979 ஆம் ஆண்டிலேயே சட்டம் திருத்தப்பட்டு விட்டதாக சட்டம் படித்தவர்கள் கூறுகிறார்கள்.

தண்டிக்கப்பட்ட தமிழர்கள், ராஜிவ் கொலையில் நேரடியாக ஈடுபட்டவர்களும் அல்ல; சதித் திட்டம் தீட்டியதாகவே குற்றச்சாட்டு. ‘தடா’ சட்டத்தின் கீழ் இந்த வழக்கை விசாரித்ததே தவறு என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக அறிவித்ததன் மூலம் இது பயங்கரவாத செயல் அல்ல என்பதையும் உறுதிப்படுத்திவிட்டது. தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்த உச்சநீதிமன்றமே - மாநில அரசு கருதினால், இவர்களை விடுவிக்கும் சட்டரீதியான உரிமைகள் இருப்பதையும் சுட்டிக்காட்டியது. ஆனாலும் விடுவிக்கும் உரிமை மாநில அரசுக்கு இல்லை; மத்திய அரசுக்குத்தான் என்று காங்கிரஸ் ஆட்சி முடியப் போகும் நிலையிலும் எதிர் மனு போட்டு இழுத்தடிக்கத் துடிக்கிறது. இவர்களை இறுதி காலம் வரை சிறைக்குள்ளேயே அடைத்து வைத்து வைக்க வேண்டும் என்ற பழி வாங்கும் உணர்வுக்காக சட்டப் போராட்டத்தைத் தொடங்கியிருப்பதில் என்ன நேர்மை இருக்கிறது என்ற கேள்வியைத்தான் மனித நேயமுள்ள எவரும் கேட்பார்கள்.

மத்திய அரசின் உரிமைகளுக்குக் கீழே வரும் சட்டங்களிலும் மாநில அரசு உரிமைகளுக்குக் கீழே வரும் சட்டங்களிலும் இவர்கள் தண்டிக்கப்பட்டவர்கள் என்பது உண்மைதான். ஆனால் மத்திய அரசு உரிமையின் பாற்பட்ட ‘தந்தி-ஒயர்லஸ்’ சட்டங்கள், கடவுட் சீட்டுக்கான சட்டங்கள் மற்றும் வெளிநாட்டினருக்கான சட்டங்களின் கீழ் வழங்கப்படக் கூடிய அதிகபட்ச தண்டனையை ஏற்கனவே இவர்கள் அனுபவித்து விட்டார்கள். அந்த அடிப்படையில்தான் ராஜிவ் கொலை வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், 19 பேரை விடுதலையும் செய்துவிட்டது. இப்போது இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதே மாநில அரசின் கீழ் வரக்கூடிய குற்றங்களுக்காகத்தான்!

எல்லாவற்றுக்கும் மேலாக, பேரறிவாளன் தந்த வாக்குமூலத்தையே திருத்தி எழுதி தவறு செய்ததாக ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பெற்ற சி.பி.அய். அதிகாரியே வெளிப்படையாகக் கூறி விட்டார். இதற்குப் பிறகும் சிறையில் அடைத்து வைக்கத்தான் வேண்டுமா?

இந்திரா படுகொலையில் குற்றத்தில் நேரடியாக ஈடுபடாதவரையும் சதி செய்த குற்றத்தின் கீழ் தூக்கில் ஏற்றி மகிழ்ந்தது, காங்கிரஸ் ஆட்சி. நேரடிக் குற்றத்தில் ஈடுபடாத ஒருவருக்கு தூக்குத் தண்டனை வழங்கியது - இதுவே முதல் முறை. அதே இந்திரா கொலையைத் தொடர்ந்து, டெல்லியில் 3000 சீக்கியர்கள் கொல்லப்பட்டார்கள். குற்றவாளிகளை தண்டிப்பதில் காங்கிரஸ் ஆட்சி எந்தக் கவலையும் எடுத்துக் கொள்ளவில்லை. போபால் விஷ வாயுக் கசிவால் பல்லாயிரம் பேர் மாண்டனர். இன்னும் ஊனமுற்ற குழந்தைகள் அங்கே பிறந்து கொண் டிருக்கின்றன. குற்றவாளியான அமெரிக்க நிறுவனம் யூனியன் கார்பைடு தலைமை நிர்வாகியை பத்திரமாக விமானம் ஏற்றி அனுப்பி வைத்தது - இதே காங்கிரஸ் ஆட்சி தான். பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான நிவாரண உதவி இன்னும் கிடைக்கவில்லை. ஆனால், ராஜிவ் காந்தி மரணத்துக்காக மட்டும் பழி வாங்கும் வெறியோடு காங்கிரஸ் ஆட்சி அலைகிறது.

ஆட்சி மாற்றங்கள், அரசியல் மாற்றங்களை நாடு சந்திக்கும் சூழலில், ஏழு தமிழர் விடுதலைக்கான நியாயங்களை வலியுறுத்தியும், இதற்கு எதிராக அணி வகுக்கும் சக்திகளை அம்பலப்படுத்தியும் மக்கள் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகிறது. தூக்குத் தண்டனைக்கு எதிரான இயக்கம் வேறு எங்கும் இல்லாத அளவில் தமிழகத்தில்தான் நடந்தது. தூக்கிலிருந்து காப்பாற்றுவதில் அந்த இயக்கம் வெற்றி பெற்றது. தண்டனைக் குறைப்பு, விடுதலைக்கான இயக்கத்தை முன்னெடுப்போம்.

இறுதி வெற்றி, மனித உரிமைக்குத்தான்!

# காதலர்களைப் பிரித்து தற்கொலைக்குத் தூண்டிய வன்முறைக் கும்பல் மீது தாரமங்கலம் காவல்துறை நடவடிக்கைக் கோரி ஆர்ப்பாட்டம்

சேலம் மாவட்டம் தாரமங்கலத்தை அடுத்த தெசவிளக்கு கிராமம் லட்சுமாயூரைச் சேர்ந்தவர் முருகன். இவர் லாரி கிளீனராக இருக்கிறார். இவரது மனைவி மகேஸ்வரி ( 35). இவர்களது மகள் சுமதி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தாரமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10 ம் வகுப்பு தேர்வு எழுதி உள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. கிளை செயலாளர் விஸ்வநாதனின் மகனும், ராசிபுரத்தில் உள்ள தனியார் பாலிடெக்னிக்கில் படித்து வருபவருமான சந்தோஷ் என்ற சாமிநாதன் சுமதியை காதலித்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த காதல் விவகாரம் விஸ்வநாதன் குடும்பத்துக்கு தெரிய வந்தது. இதனால் அவர்கள் மாணவியின் வீட்டுக்கு சென்று வசதியான வீட்டு பிள்ளையை மயக்குகிறாயா என்று கேட்டுள்ளனர். இதனால் மாணவி சாமிநாதனுடன் பேசுவதை நிறுத்தி விட்டார்.

22-04-2014 அன்று நள்ளிரவு 12 மணிக்கு மாணவி வீட்டுக்கு சென்ற சாமிநாதன் ஏன் என்னுடன் பேசுவதில்லையென கேட்டுள்ளார். தன்னுடன் பேசாவிட்டால் விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் அவர் மிரட்டியுள்ளார். அப்போது மாணவரை பின் தொடர்ந்து வந்த அவரது தந்தை விஸ்வநாதன். தாய் செல்வராணி , விஸ்வ நாதனின் மைத்துனர்கள் சேட்டு, முனுசாமி, தாத்தா அய்யம்பெருமாள் உட்பட ஒரு 8 பேர் கொண்ட கும்பல் மாணவியையும், அவரது தாயார் மகேஸ்வரியையும் தாக்கி, நிர்வாணப்படுத்தி, மான பங்கப்படுத்தி, சித்ரவதை செய்துள்ளனர். அப்போது கடுமையாகத் தாக்கியது மட்டுமின்றி சுமதியின் பிறப்புறுப்பில் சாட்டைக்குச்சியையும் பாட்டிலையும் செருகிக் கொடுமைப்படுத்தி யுள்ளனர்.

மறுநாள் காலை (23-04-2014) மீண்டும் அவர்கள் வந்து தாக்கியுள்ளார்கள். அவமானம் தாங்க முடியாமல் தாயும், மகளும் விசம் குடித்து, அருகில் இருக்கும் ஒரு ஏரியில் மயங்கிய நிலையில் கிடந்துள்ளதைப் பார்த்த பொதுமக்கள் ஆம்புலன்ஸ்சுக்கு தகவல் கொடுத்து சேலம் அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர்.

நடந்த சம்பவம் குறித்து லட்சுமாயூரைச் சேர்ந்த கணேசன் என்பவர் தாரமங்கலம் இன்ஸ்பெக்டர் தனபாலை சந்தித்து புகார் கொடுத்திருந்தும் இன்ஸ்பெக்டர் நடவடிக்கை எடுக்கவில்லை. நாடாளுமன்ற தேர்தல் முடிந்த பிறகு நடவடிக்கை எடுப்பார் என்று காத்து இருந்தனர். அதன் பிறகும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த தகவலை அறிந்த மகேஸ்வரியின் உறவினர்கள் மற்றும் லட்சுமாயூர் கிராம மக்கள் நேற்று காலை தாரமங்கலம் போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு விஸ்வநாதன் குடும்பத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி முழக்கமிட்டனர். அங்கு வந்த ஓமலூர் டி.எஸ்பி முத்துக்கருப்பன், ஜலகண்டாபுரம் ஆய்வாளர் பரணிதரன் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர்.

பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் சந்தோஷ் என்ற சாமிநாதனை மட்டும் காவல் துறை கைது செய்துள்ளது.

நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்ட தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கத்தின் தோழர் பூமொழி, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர்கள் அனைவரும் இணைந்து அடுத்த கட்டமாக 5-5-2014 திங்கள் அன்று, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் ஆர்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர். மேலும் அடுத்தக்கட்ட போராட்டங்கள் பற்றியும் ஆலோசித்து வருகிறார்கள்.

# மதம் திணிக்கும் ’பிறவி தொழிலாளர்-’பிறவி முதலாளிகள்’ பேதம் தகர்க்கப்பட வேண்டும்!

## — பெரியார் —

***01.05.1935 ஆம் நாள் காரைக்குடியில் நடைபெற்ற மே நாள் விழாக் கொண்டாட்டத்தில் தலைமையேற்று ஆற்றியவுரை.***

மே தினம் என்பதைப் பற்றி இங்கு இதுவரை 5,6 தோழர்கள் எடுத்துச் சொல்லி விட்டார்கள். நான் முடிவுரை என்கின்ற முறையில் ஏதாவது பேச வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்.

மே தினம் என்பது இன்று உலகமெங்கும் ஒவ்வொரு தேசங்களிலும் கொண்டாடப்படுவதானாலும் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடப்படுகின்றது என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. ரஷ்யாவில் கொண்டாடப் படுவதுபோல் இங்கிலாந்தில் கொண்டாடப்பட மாட்டாது. ஸ்பெய்னில் கொண்டாடப்படுவது போல் பிரஞ்சில் கொண்டாடப்பட மாட்டாது.

அதுபோலவே தான் மேல் நாடுகளில் ஐரோப்பா முதலிய இடங்களில் கொண்டாடப்படுவது போல் இந்தியாவில் கொண்டாடத்தக்க நிலைமை இல்லை.

ஏனெனில் ஒவ்வொரு தேசத்தின் நிலைமை வெவ்வேறான தன்மையில் இருந்து வருகின்றது. எல்லா தேசமும் ஒரேவிதமான பக்குவத்தை அடைந்துவிடவில்லை.

ஆரம்ப தசையில் இருக்கிற தேசமும் முடிவை எட்டிப் பார்க்கும் தேசமும் ஒரே மாதிரி கொண்டாட வேண்டும் என்று கருதுவதும் புத்திசாலித்தனமாகாது.

இன்று ரஷ்யாவில் மே தினத்தைக் கொண்டாடுவதின் முக்கிய நோக்கம் பெரிதும் தங்கள் தேசத்தை மற்ற தேசங்கள் பின்பற்ற வேண்டும் என்கின்ற ஆசையைப் பொருத்ததாகும்.

இங்கிலாந்து, பிரஞ்சு முதலிய தேசங்களில் கொண்டாடுவதன் நோக்கம் ரஷ்யாவைப் பல விஷயங்களில் பின்பற்ற வேண்டும் என்கின்ற கருத்தைக் கொண்டு அதற்கு பக்குவம் செய்வதற்கு ஆசைப்படுவதாகும்.

எப்படி இருந்தாலும் அடிப்படையான நோக்கத்தில் ஒன்றும் பிரமாத வித்தியாசம் இருக்காது. அனேக துறைகளில் சிறப்பாக சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டு இம்சைப்படுத்தப்பட்ட அடிமை மக்கள் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அடைய வேண்டும் என்கின்ற உணர்ச்சியே மே தினக் கொண்டாட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

அந்த உணர்ச்சி எல்லா மக்களுக் கும் ஏற்பட்டால் பிறகு அந்தந்த நாட்டு நிலைமைக்குத் தக்கபடி முயற்சியும் கிளர்ச்சியும் தானாகவே வந்துவிடும்.

ஒடுக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்ட அடிமை மக்கள் என்பவர்கள்கூட ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமாகவே இருக்கிறார்கள்.

மேல் நாடுகளில் இருக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் என்பவர்கள் தொழிலாளிகள் என்கின்ற பெயரால் அவர்களது தொழில் நிலையையும் செல்வ நிலையையும் பொருத்து இருக்கிறார்கள்.

அதனாலேயே இந்தக் கிளர்ச்சிக்கு தொழிலாளி, முதலாளி கிளர்ச்சியென்றும் வகுப்புப் போர் என்றும் சொல்லப்படுகின்றது.

இந்தியாவில் ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டு அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் என்பது தொழில் நிலையையும், செல்வ நிலையையும் முக்கியமாய்க் கொள்ளாமல் மக்களின் பிறவி நிலையையே பிரதானமாய்க் கொண்டு பெரும்பான்மையான மக்கள் ஒடுக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டும், அடிமைப் படுத்தப்பட்டும் இருப்பதால் தொழில் நிலைமையையும் செல்வ நிலைமையையும் நேரே நோக்கிக் கிளர்ச்சியோ புரட்சியோ செய்வது முக்கியமானதாய் இல்லாமல் பிறவி பேதத்தையே மாற்ற கிளர்ச்சியும், புரட்சியும் செய்ய வேண்டியது முக்கியமாய் இருக்கின்றது. ஆதலால் தொழிலாளி முதலாளி கிளர்ச்சி என்கின்றதைவிட மேல் ஜாதி, கீழ் ஜாதி புரட்சி என்பதே இந்தியாவுக்கு பொருத்தமானதாகும்.

ஏனென்றால் இந்தியாவில் தொழிலாளி என்று ஒரு ஜாதியும் அடிமை என்று ஒரு ஜாதியும் பிறவியிலேயே மத ஆதாரத்தைக் கொண்டே பிரிக்கப்பட்டு விட்டது.

நாலாவது வருணத்தான் அல்லது கீழான ஜாதியான் அல்லது சூத்திரன் என்று சொல்லப்படும் பிரிவே தொழிலாளி. அதாவது சரீரத் தால் உழைத்து வேலை செய்வதன் மூலம் மற்ற ஜாதியாருக்கு வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்ய வேண்டும் என்கின்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டதாகும்.

ஐந்தாவது ஜாதியான பஞ்சமன் அல்லது சண்டாளன் என்று சொல்லப்பட்ட ஜாதியான் என்பவன் வாழ்நாள் முடிய மற்ற ஜாதியாருக்கு அடிமையாய் இருந்து தொண்டாற்ற வேண்டும் என்கின்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டவன்.

இந்த இரு கூட்டத்தாரிடமும் கூலி கொடுக்காமலே வேலை வாங்கும் உரிமை மேல் ஜாதியானுக்கு உண்டு. அதுவும் மத சாஸ்திர பூர்வமாகவே உண்டு.

இது இன்றைய தினம் நிர்ப்பந்தத்தில் இல்லை என்று சிலர் சொல்லக் கூடுமானாலும் ஒரு சிறு மாறுதலோடு அனுபவத்தில் இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது.

பஞ்சம வகுப்பைச் சேர்ந்த மக்களாகிய சுமார் 6,7 கோடி மக்களில் 100க்கு 99 பேர்கள் இன்று அடிமையாக இழி மக்களாக நடத்தப்படவில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். அதுபோலவே பார்ப்பனரல்லாதார் என்கின்ற இந்து மக்கள் ஆண், பெண் அடங்கலும் சூத்திரர்கள் அதாவது சரீர வேலை செய்யும் வேலை ஆட்கள் என்ற கருத்தோடு அழைக்கப்படுவது மாத்திரமல்லாமல் ஆதாரங்களில் குறிக்கப்படுவதோடு அந்தச் சூத்திரர்கள் என்கின்ற வகுப்பார்களே தான் இன்று சரீரப் பிரயாசைக் காரர்களாகவும், கூலிகளாகவும், உழைப்பாளிகளாகவும், ஏவலாளர்களாகவும், தொழிலாளர்களாகவும் இருந்து வருகின்றார்களா இல்லையா என்று பாருங்கள்.

மற்றும் ஜாதி காரணமாகவே, தொழிலாளிகளாகவோ, சரீரப் பிரயாசைப்படும் உழைப்பாளிகளாகவோ இல்லாமலும் சரீரப் பாடுபடுவதைப் பாவமாகவும் கருதும்படியான நிலையில் சில ஜாதியார்கள் இருக்கிறார்களா இல்லையா என்றும் பாருங்கள்.

இந்தியாவில் தொழிலாளி முதலாளி அல்லது எஜமான் அடிமை என்பது பிரதானமாக பிறவி ஜாதியை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இந்தியாவில் மே தினக் கொண்டாட்டம் என்பது பார்ப்பான் சூத்திரன், பஞ்சமன் அல்லது சண்டாளன் என்கின்ற ஜாதிப் பிரிவுகள் அழிக்கப்பட வேண்டும் என்கின்ற நிலையில் தான் பெரியதொரு கிளர்ச்சியும் புரட்சியும் ஏற்பட வேண்டும் என்கின்ற கருத்தோடு இன்று கொண்டாட வேண்டியதாகும்.

இந்தியாவில் வகுப்புப் போர் என்பதற்குப் பதிலாக வேறு ஏதாவது சொல்ல வேண்டுமானால் ஜாதிப் போர் ஏற்பட வேண்டும் என்பதாகத்தான் சொல்ல வேண்டும்.

இந்தியாவில் ஒரு ஜாதியார் 100க்கு 99 பேர்கள் நிரந்தரமாக தொழிலாளியாகவும், அடிமையாகவும், ஏழைகளாகவும், மற்றவர்களுக்கே உழைத்துப் போடுகின்றவர்களாகவும் இருப்பதற்குக் காரணம் பிறவியில் வகுக்கப்பட்ட ஜாதிப் பிரிவே அல்லாமல் வேறு என்ன? இதை அடியோடு அழிக்காமல் வேறுவிதமான கிளர்ச்சிகள் எது செய்தாலும் தொழிலாளி முதலாளி நிலை என்பது அனுபவத்தில் இருந்து தான் தீரும்.

இன்று முதலாளி தொழிலாளி என்பதற்கு நாம் என்ன வியாக்கியானம் செய்கிறோம்? பாடுபடாமல் ஊரான் உழைப்பில் பதவி அந்தஸ்துடன் வாழுவதையும் பாடுபடுகின்றவன் ஏழையாய் இழிமக்களாய் இருப்பதையும் தான் முறையே சொல்லுகின்றோம்.

ஆகவே ஜாதியையும் அதற்கு ஆதாரமான மதத் தன்மையையும் அழிக்காமல் வேறு எந்த வழியிலாவது முதலாளி, தொழிலாளித் தன்மையை மாற்றவோ அல்லது அதன் அடிப் படையை அணுகவோ நம்மால் முடியுமா என்று பாருங்கள்.

இந்தியாவில் ஏழை மக்களுக்கு ஆக தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபடுகின்றேன் என்று சொல்லுகின்றவர்கள் யாரானாலும் அதற்கு ஆதாரமும் அடிப்படையுமான ஜாதிப் பாகுபாட்டையும் மதத் தன்மையையும் ஒழிக்க சம்மதிக்கவில்லையானால் அவர்கள் எல்லோரும் யோக்கியர்கள் என்று நாம் சொல்லிவிட முடியாது. அரசியல் தலைவர்களில் எவரும் இதற்குச் சம்மதிப்பதில்லை.

ஏதாவது ஒரு தொழிற்சாலையில் நித்திய கூலிக்கோ மாதச் சம்பளத்துக்கோ பாடுபடுகின்ற நான்கு தொழிலாளிகளைக் கூட்டி வைத்து பேசி விடுவதினாலேயே அல்லது அத் தொழிலாளிகள் விஷயமாய்ப் பேசி விடுவதினாலேயே அல்லது அவர்களுக்கு தலைமை வகிக்கும் பெருமையை சம்பாதித்துக் கொண்டதினாலேயே எவரையும் உண்மையான தொழிலாளிகளுக்குப் பாடுபட்டவர்களாகக் கருதிவிடக் கூடாது. அவர்களெல்லாம் அரசியல் தேசியம் ஆகியவற்றின் பேரால் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம் செய்வது போல் தொழிலாளிகளின் பேரால் வயிற்றுப் பிழைப்பு

(4 ஆம் பக்கம்)

***‘மே தினம்’ குறித்து பெரியார் 1935ஆம் ஆண்டில் நிகழ்த்திய உரை இது. இந்த உரையின் பின்னணிக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. பெரியார் சமதர்ம திட்டம் வழியாக பொதுவுடைமைக் கொள்கைகளை பரப்பிடும் முயற்சிகளை அன்றைய பிரிட்டிஷ் அரசு ஒடுக்கிடும் நடவடிக்கைகளைத் தொடங்கியது. சுயமரியாதை இயக்கம் தடை செய்யப்படும் சூழல் உருவானபோது, இயக்கம் முடக்கப்படுவதைவிட, “பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார்” போராட்டத்தை முன்னெடுக்கும் சுயமரியாதைக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்வதே முக்கியம் என்ற முடிவுக்கு வந்த பெரியார், அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியோடு சமாதானம் செய்து கொண்டு இயக்கத்தைத் தொடர முடிவு செய்தார். அதன்படி சமதர்மப் பரப்புரைத் திட்டங்களை தள்ளி வைத்து சுயமரியாதை கொள்கைகளை முன்னெடுக்க முடிவு செய்தார். இதற்கு சுயமரியாதை இயக்கத்திலிருந்த பொதுவுடைமை யாளர்களிடமிருந்து கடும் விமர்சனங்கள் எழுந்தன.***

***அரசாங்கத்துடன் சமரசம் செய்துகொண்டு சுயமரியாதை செயல் திட்டத்தை முன்னெடுக்க விரும்பிய பெரியார், அடுத்த ஒரு மாதத்திலேயே மே நாளைக் கொண்டாடும்படி அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கை ரஷ்ய பாட்டாளி வர்க்கத்தைப் புகழ்ந்தது. இந்தியாவைப் பொறுத்தவரை தொழிலாளிகள் ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’களாகவே இருப்பதை பெரியார் சுட்டிக் காட்டுவதோடு, சுயமரியாதை இயக்கம் வெளியிட்ட ‘கம்யூனிஸ்ட் அறிக்கை’க்கு எழுதிய முன்னுரையிலும் இந்தியாவில் முதலாளி, தொழிலாளி பிரிவினையைத் தவிர கூடுதலாக ஜாதி என்ற அம்சமும் இருப்பதை சுட்டிக் காட்டுகிறார். முன்னெப்போதையும்விட ‘சுயமரியாதை சமதர்ம’ கருத்துகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை திராவிடர் விடுதலைக் கழகம் உணர்ந்து இயக்கத்தின் செயல் திட்டமாக்கியுள்ளது.***

***அந்த நோக்கில் மே தினத்தையொட்டி பெரியார் – மே தின உரையை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வெளியிடுகிறது.***

# திருமண மந்திரங்களின் ஆபாசம் – வேத பண்டிதர்களே – ஒப்புதல்!

புரோகித திருமணங்களில் பார்ப்பனர்கள் உச்சரிக்கும் சமஸ்கிருத மந்திரங்கள் இழிவும் ஆபாசமும் நிறைந்தவை என்பதை வேத விற்பன்னரான அக்னி ஹோத்திரம் ராமானுஜ தாதாச்சாரியாரே கூறியிருக்கிறார். ராமானுஜ தாதாச்சாரி இறந்துபோன காஞ்சி சீனியர் சங்கராச்சாரியுடன் நெருக்கமாக இருந்தவர். இந்து மதம் எங்கே போகிறது? என்ற தலைப்பில் நக்கீரன் ஏட்டில் இவர் எழுதிய தொடர் வைதிக பார்ப்பனர்களை கதிகலங்க வைத்தது. தொடரை நிறுத்துமாறு பார்ப்பனர்களிடமிருந்து வந்த அழுத்தங்களை புறந்தள்ளிவிட்டு அவர் எழுதினார்.

திருமணங்களில் கூறப்படும் மந்திரங்கள் குறித்து அவர் எழுதிய பகுதியையும் அதே திருமண மந்திரங்கள் குறித்து கீழாத்தூர் சீனிவாசாச்சாரியார் எழுதி, லிட்டில் ப்ளவர் கம்பெனி வெளியிட்டுள்ள விவஹ மந்த்ரார்த்த போதினி நூலிலிருந்தும் சில மந்த்ரங்களைத் தொகுத்துத் தந்துள்ளோம்:

அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாச்சாரியாரின் "இந்து மதம் எங்கே போகிறது?" நூலிலிருந்து:

திருமணத்தில் வாத்யார்கள் அர்த்தம் தெரியாமல் ஓதும் மந்த்ரங்களுக்கு மேலும் உதாரணம் சொல்கிறேன் - ஒரு மந்திரத்தைப் பாருங்கள்.

"தாம்பூஷன் சிவதமாம் ஏவயஸ்வயஸ்யாம் பீஜம்
மனுஷ்யா பவந்த்தியான ஊரு உஷதி
விஸ்ரயாதையஸ்யா முஷந்தஹா ப்ஷரே
பஷேபம்...."

இது வேதத்தில் சொல்லப்பட்ட மந்த்ரம் இதை கல்யாண மேடையிலே பெண்ணையும், மாப்பிள்ளையையும் உட்கார்த்தி வைத்து சத்தமாக சொல்கிறார் வாத்யார் (புரோகிதர்). இந்த மந்த்ரத்தின் அர்த்தம் புரிந்தால்... அந்த வாத்யாரை நீங்கள் வாத்சாயணர் என்றுதான் அழைப்பீர்கள்.

அப்படி என்ன சொல்கிறது இந்த மந்த்ரம்?

நான் அவளை கட்டிப்பிடிப்பேன். (அவளோடு உறவு கொள்ளும்பொழுது) அப்போது எங்களது அந்தரங்க பாகங்களை சரியாக பொருந்தச் செய்யுமாறு... தேவதைகளே நீங்கள் உதவ வேண்டும்.

இந்த மந்த்ரத்தின் அர்த்தத்தை இதைவிட நாகரிகமாக சொல்ல முடியாது. விளக்கமாக நான் சொல்லியிருப்பேன் என்றால்.... என் மீதும் என் வயதின் மீதும் உங்களுக்கு இருக்கும் மரியாதை போய்விடும். அப்படிப்பட்ட மந்த்ரம் அது.

என் இஷ்டமித்ரர் ஒருவருடைய மகளின் கல்யாணம் சமீபத்தில் நடந்தது. அந்தப் பெண் மகா புத்திசாலி. சமஸ்கிருதம் பயின்றவள். அவள் மணமேடையிலே உட்கார்ந்திருக்கும்போது... வாத்யார் இந்த மந்த்ரத்தை உரக்கச் சொல்ல....

"ஸ்வாமீ... நிறுத்துங்கோ" என்றாள் அவள். வாத்யார் வாயடைத்துவிட்டார். "இதுக்கு என்ன அர்த்தம் தெரியுமோ? பெண்ணும் மாப்ளையும் துணியில்லாம செய்யுற காரியத்தை... நீங்க பல பேர் முன்னாடி சொல்றேளே..."

"வாத்யார் அதன்பிறகு அந்த மந்த்ரத்தை சொல்ல வில்லை. இதை ஏன் சொல்கிறேன் என்றால், வாத்யார்கள் சடங்குகள் என்ற பெயரில் இன்ன அர்த்தம் என்றே தெரியாமல்... பல மந்த்ரங்களை உச்சரித்து வருகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டத் தான்" - என்று தாதாச்சாரி எழுதியுள்ளார்.

கிழாத்தூர் சீனிவாசாச்சாரி தனது நூலில் எழுதியிருப்பதாவது:

தேவர்களுடன் இந்த கன்னிகைக்குள்ள சம்பந்தம் மந்த்ரங்களால் கூறப்படுகிறது.

ஒவ்வொரு கன்னிகையும் வரிசையாக ஸோமன், கந்தர்வன், அக்னி என்னும் தேவர்களை முதலில் கணவனாக அடைந்த பிறகே, நான்காவதாக மனித ஜாதியில் பிறந்தவனைக் கணவனாக அடைகிறாள் என்னும் அர்த்தமுள்ள மந்த்ரத்தைக் கணவன் கூறுகிறான். (இம் மூன்று தேவதைகளையும் இவள் கணவனாக அடைந்தாள் என்று கூறுவதற்கு, மேற்கண்ட மூன்று தேவதைகளும் முறையே அக் கன்னிகைக்கு பலம், அழகு, யௌவனம் இவைகளை உடனிருந்து அளித்தனர் என்பதே உட்பொருள்.)

"ஸோபம: ப்ரதமோ விவிதே கந்தர்வோ
விவித உத்தர: / த்ருதீயோ அக்நிஷ்டே பதி: /
துரீயஸ்தே மநுஷ்யஜா:/

"ஸோமன் முதலில் இவளை அடைந்தான். பிறகு கந்தர்வன் இவளை அடைந்தான். உன்னுடைய மூன்றாவது கணவன் அக்நி. உன்னுடைய நான்காவது கணவன் மனித ஜாதியில் பிறந்தவன்."

"ஸோமோ (அ)தத் கந்தர்வாய கந்தர்வோ
(அ) தத்அக்நயே / ரயிஞ்ச புத்ராகும்ச அதாத்
அக்நிர் மஹ்யமதோ இமாம்."

"ஸோமன் உன்னை கந்தர்வனுக்குக் கொடுத்தான். கந்தர்வன் அக்னிக்குக் கொடுத்தான். அக்னிதேவன் இவளுக்குச் செல்வத்தையும் மக்களையும் கொடுத்து, பிறகு எனக்குத் தந்தான்."

அதாவது, "ஏ பெண்ணே! சந்திரன் உனக்கு பலத்தையும், கந்தர்வன் அழகையும், அக்னிதேவன் யௌவனத்தையும் அளித்து என் சுகத்திற்காக, நீ பிறந்த மனித ஜாதியில் பிறந்தவனான எனக்கு அளித்துள்ளார்கள். ஆகவே, நீ தெய்வாம்சத்துடன் வந்திருக்கிறாய்" என்று பெண்ணின் சிறப்பைக் கூற வந்தவையே இந்த மந்த்ரங்கள்.

அருந்ததியைப் பற்றிய மந்த்ரம்

ஸப்தர்ருஷய: ப்ரதமாம் க்ருதிகாநா
மருந்ததீம் / யத் த்ருவதாகும் ஹ நிந்யுஷ்
ஷட்க்ருத்திகா முக்ய யோகம் வஹந்திய
மஸ்மாக மேத த்வஷ்டமீ //

"ஸப்தரிஷிகள், கிருத்திகை எனப் பெயர் கொண்ட தங்கள் மனைவிகளுக்குள்ளே முதலான வளான அருந்ததியை எப்படி நிலைத்திருக்கச் செய்தார்களோ, அப்படி மற்ற ஆறு கிருத்திகைகள் அருந்ததியின் முக்கியமான சேர்க்கையைச் செய்கின்றனர். இந்த அருந்ததியைத் தரிசனம் செய்ததால் என்னுடைய இந்த மனைவி எட்டாமவளாக வளர்ச்சி பெறட்டும்."

தம்பதிகள் ஒரே சயனத்தில் (படுக்கையில்) படுத்தல்

கலியாணம் ஆன நாளிலிருந்து நான்கு நாட்களிலும் தம்பதிகள் ஒரே படுக்கையில் படுக்க வேண்டும். ஆனால், அந்த சமயத்தில் பிரம்மசரிய விரதத்தை மேற்கொள்ள வேண்டும். இவர்களுடைய விரதத்தைக் காப்பாற்றுவதற்காக அரசு, ஆல், அத்தி இவைகளில் ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்த இரண்டு சமித்திற்குச் சந்தனம் பூசி, வஸ்திரத்தினால், அல்லது நூலினால் அலங்காரம் செய்து - அதில் விசுவாவசு என்னும் கந்தர்வனை ஆவாஹனம் செய்து, இந்த சமித்துக்களை தம்பதிகளின் இடையே படுக்கையில் வைக்க வேண்டும்.

இரவு கழிந்தபின், விடியற்காலையில், சேஷ ஹோமம் செய்வதற்கு முன் அந்த வசுவாசுவைக் கீழ்க்கண்ட இரண்டு மந்த்ரங்களைச் சொல்லி யதாஸ்தானம் செய்ய வேண்டும்.

உதீர்ஷ்வாதோ விஸ்வாவஸோ நம ஸேடா
மஹேத்வா / அந்யா மிச்ச ப்ரபர்வயகும்
ஸஞ்ஜாயாம் பத்யா ஸ்ருஜ//

விசுவாசு என்னும் கந்தர்வனே, இந்தப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பாயாக. உன்னை வணங்கி வேண்டுகிறோம். முதல் வயதிலுள்ள வேறு கன்னிகையை நீ விரும்புவாயாக. என் மனைவியைத் தன் கணவனுடன் சேர்த்து வைப்பாயாக."

"உதிர்ஷ்வாத: பதிவதீ ஹ்யேஷா
விஸ்வாஸுந் நமஸா கீர்ப்பிரீட்டே /
அந்யாமிச்ச பித்ருபதம் வ்யக்தாகும் ஸ தே
பாகோ ஜநுஷா தஸ்ய வித்தி //

"இந்தப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பாயாக. இந்தப் பெண்ணுக்கு கணவன் இருக்கிறானல்லவா? விசுவாசுவான உன்னை வணங்கித் துதித்துக் கேட்டுக் கொள்கிறோம். தகப்பன் வீட்டிலிருப்பவளும் இதுவரை திருமணம் ஆகாதவளுமான வேறு கன்னிகையை நீ விரும்புவாயாக அந்த உன்னுடைய பங்கு பிறவியினால் ஆகிவிட்டதென்பதை நீ அறிவாயாக."

குறிப்பு : திருமணத்துக்கு மட்டுமல்ல, "முதல் இரவுக்கும்" மந்திரங்கள் இருக்கின்றன. முதலிரவில் படுக்கையில் தம்பதிகளுக்கு இடையே படுத்திருக்கும் கந்தர்வனை எழுப்பிப் போகச் சொல்லி தம்பதிகள் உறவு கொள்ள அனுமதி கோருகிறது, மேற் குறிப்பிட்ட மந்திரம். திருமணத்துக்கு பார்ப்பனர்களை வைத்து 'மந்திரம்' ஓத விரும்புவோர்கூட முதலிரவுக்கு சாஸ்திரப்படி மந்திரங்கள் ஓதுவதை கைவிட்டு விட்டார்கள். அத்தகைய சடங்குகள் விபரீதமாகிவிடும் என்பதை பகுத்தறிவோடு புரிந்து கொள்ளும் பழமைவாதிகள், திருமணங்களில் புரோகித மந்திரங்களை ஏன் கைவிடக் கூடாது?

## திருமூர்த்தி–அகத்தியா மண விழா

கழக ஆதரவாளரும், கழகத்தினர் மீதான வழக்குகளை தொடர்ந்து நடத்தி வருபவருமான உயர்நீதிமன்ற வழக்குரைஞர் திருமூர்த்தி-வழக்கறிஞர் அகத்தியா ஆகியோரது ஜாதி மறுப்புத் திருமணம் 9.4.2014 புதன் கிழமை மாலை 7 மணியளவில் நடைபெற்றது. சென்னை அமைந்தகரை, செனாய் நகர், மாநகராட்சி சமூகநலக் கூடத்தில் நடைபெற்ற இத்திருமணத்தில், மார்க்சிய பொதுவுடமைக் கட்சியின் மூத்த தலைவர் மீனாட்சி சுந்தரம் வாழ்க்கைத் துணை ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைத்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இந் நிகழ்வில் மாநில பொருளாளர் ஈரோடு ப.இரத்தின சாமி, தலைமை நிலைய செயலாளர் தபசி. குமரன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். திருமண நிகழ்வின் முன் பாக திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் அருண் குமாரின் சுபராகம் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.



## சென்னையில் கழகத்தின் மோடி எதிர்ப்பு விளக்கக் கூட்டம்

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் குஜராத்தில் இனப்படுகொலை செய்த மோடி பிரதமராகக் கூடாது என்று 5.4.2014 முதல் 10.4.2014 வரை தொடர் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. நிறைவுக் கூட்டமாக 10.4.2014 அன்று மாலை 6 மணியளவில் மந்தைவெளி மார்க்கெட்டில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அம்பிகா தலைமையில் காஞ்சி மாவட்ட அமைப்பாளர் செங்குட்டுவன், சென்னை மாவட்டத் தலைவர் பாஜான், விழுப்புரம் அய்யனார், வழக்கறிஞர் துரை அருண், சென்னை மண்டல அமைப்புச் செயலாளர் கு.அன்பு தனசேகரன் உரையாற்றினர். அனைத்து கூட்டத்திற்கும் நாத்திகன், சாதி ஒழிப்பு பாடல்களை பாடினார். கூட்டத்திற்கு உழைத்த தோழர்கள் தினேசு, அண்ணாமலை, கவுதம்.

DATE OF PUBLICATION 30.04.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ‘மே’ தினத்தைப் ‘பண்டிகை’யாகக் கொண்டாடுவீர்!

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரம் நடத்துகின்றவர்களாகவே பாவிக்கப்பட வேண்டியவர்களாவார்கள்.

இந்து மக்களின் மதமும் அவர்களது ஜாதிப் பிரிவும் தொழிலாளி முதலாளி தன்மையின் தத்துவத்தை நிலைநிறுத்தவே ஏற்படுத்தப்பட்டதாகும். இந்தக் காரணத்தாலேயே தான் மற்ற நாட்டு மே தினக் கொண்டாட்டத்திற்கும், இந்நாட்டு மே தினக் கொண்டாட்டத்திற்கும் பெருத்த வித்தியாசம் இருக்கின்றது என்று சொல்லுகின்றேன்.

இந்த முதலாளி தொழிலாளி நிலைமைக்கு வெள்ளையர் கருப்பர்கள் என்கின்ற நிற வித்தியாசத்தைக் காரணமாகச் சொல்லிவிட முடியாது. ஏனெனில் தொழிலாளி முதலாளி வித்தியாசம் ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்தை இந்தியர்கள் கவனத்துக்கு கொண்டு வந்தவர்களே வெள்ளையர்களேயாகும். அந்த முறை மாற்றப்படக்கூடாது என்பதை மதமாகக் கொண்டிருக்கிறவர்களே கருப்பர்களாகும்.

ஆகையால் இதில் வெள்ளையர் கருப்பர் என்கின்ற கருத்துக்கு இடமில்லை. ஆனால் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்பதைத்தான் முக்கியமாய் வைத்துப் பேச வேண்டியிருக்கிறது.

இந்திய தேசியம் என்பதுகூட ஜாதியையும் மதத்தையும் காப்பாற்றுவதையே முக்கியமாய்க் கொண்டிருப்பதினால்தான் அப்படிப்பட்ட தேசியம் ஒருநாளும் தொழிலாளி, முதலாளி நிலைமைகளை ஒழிக்க முடியாது என்பது மாத்திர மல்லாமல் இந்தத் தேசியம் தொழிலாளி முதலாளி தன்மை என்றும் நிலைத்திருக்கவே பந்தோபஸ்து செய்து வருகிறது என்று அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன்.

இன்று நம் நாட்டில் உள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற கிளர்ச்சி பெரிதும் தொழிலாளி முதலாளி கிளர்ச்சியேயாகும். இந்தக் கிளர்ச்சியின் பயனாகவே வருண தருமங்கள் என்பது அதாவது பிறவியிலேயே தொழிலாளி முதலாளி வகுக்கப்பட்டிருப்பது ஒரு அளவு மாறி வருகின்றது.

இந்தக் காரணத்தினால் தான் முதலாளி வர்க்கம் அதாவது பாடுபடாமல் ஊராரின் உழைப்பில் பலன் பெற்று வயிறு வளர்க்கும் ஜாதியாகிய பார்ப்பன ஜாதி அடியோடு அனேகமாய் எல்லோருமே இந்த பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சிக்கு பரம எதிரிகளாய் இருந்து கொண்டு துன்பமும் தொல்லையும் விளைவித்து வருகிறார்கள்.

இக்கிளர்ச்சியை வகுப்புத்துவேஷம் என்றுகூட சொல்லுகிறார்கள். பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்கள் என்கின்ற இரு ஜாதியார்களுக்கும் பார்ப்பனர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கிற நிபந்தனைகளைப் பார்த்தால் வகுப்புத் துவேஷம் வகுப்புக் கொடுமை என்பவைகள் யாரால் செய்யப்பட்டு இருக்கிறது, செய்யப்பட்டும் வருகிறது என்பது நன்றாய் விளங்கும்.

நிற்க, தோழர் நீலாவதி அம்மையார் சொன்னதுபோல் முதலாளி தொழிலாளிக் கொடுமை ஒழிய வேண்டும் என்பதில் ஆண் பெண் கொடுமையும் ஒழிய வேண்டியதவசியமாகும். ஆண்கள் முதலாளிகளாகவும், பெண்கள் தொழிலாளிகளாகவும், அடிமைகளாகவும் தான் நடத்தப்பட்டு வருகிறார்கள். இதுவும் வெறும் பிறவி காரணமாகவே ஒழிய மற்றபடி இதில் வேறு காரணம் ஒன்றுமே இல்லை. ஆண், பெண் என்பதற்கு பிறவி காரணமாய்க் கற்பிக்கப்பட்டிருக்கிற பேதங்கள் நிபந்தனைகள் அடியோடு ஒழிக்கப்பட்டாக வேண்டும்.

இதற்கும் பெண் மக்கள் பெரியதொரு புரட்சிக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டும். ஆண் மக்களோடு தைரியமாய்ப் போர் தொடுக்க வேண்டும். பெண்கள் போர் தொடுக்க ஆரம்பித்தால் ஆண் மக்கள் சரணாகதி அடைந்தே தீருவார்கள்.

நிற்க, இந்த மே தினத்தை நாம் ஒரு பெரிய பண்டிகை போல் கொண்டாட வேண்டும். ஏனெனில் நமது பண்டிகைகளில் அனேகம் இம்மாதிரி வெற்றிகளை ஞாபகப்படுத்துவதேயாகும். தீபாவளி, ஸ்ரீராம நவமி முதலிய பண்டிகைகள் எல்லாம் இந்நாட்டில் ஆரியர்கள் திராவிட மக்களை வென்ற நாள்களையும் வென்ற தன்மைகளையும் கொண்டாடுவதைத் தவிர வேறொன்றுமே முக்கியமாய் இல்லை. இதெல்லாம் தெரிந்த பலர் கூடி இப்பண்டிகைகளைக் கொண்டாடுவது இந்நாட்டில் மக்கள் உற்சாகத்திற்கு வேறு மார்க்கம் இல்லாததே ஒழிய மற்றபடி மதம், பக்தி, சுயமரியாதை அற்ற தன்மை என்பவைகளே அல்ல.

பெண்களையும் வேலை ஆள்களையும் சிறிதுகூட ஓய்வில்லாமல் அடிமை போல் நடத்துகிறோம். அவர்களுக்கு பண்டிகை, உற்சவம் ஆகியவைகள் தான் சிறிது ஓய்வும் சந்தோஷமும் கொடுக்கின்றன.

தண்டவாளப் பெட்டியில் வைத்துப் பூட்டி வைப்பதுபோல் பெண் ஜாதிகளைப் பூட்டி வைக்கும் சிப்பாய்களெல்லாம் உற்சவம் பண்டிகை என்றால் சிறிதாவது தாராளமாய் வெளியில்விட சம்மதிக்கிறார்கள். உற்சவங்களில் அவர்கள் நிலை எப்படி ஆனாலும் கவலைப்படுவதில்லை. கண்ணெதிரிலேயே நசுக்கப்படுவதையும், கசக்கப்படுவதையும் பார்த்துக்கூட சகிக்கிறார்கள். ஆதலால் நம் பெண்களுக்கும், தொழிலாளிகளுக்கும் எவ்வளவுதான் நாம் பகுத்தறிவையும், சுயமரியாதைக் கொள்கைகளையும் போதித்தாலும் உற்சவமும், பண்டிகையும் அவர்களை விட்டு விலகவே முடியாது. எனவே நாம் இப்படிப்பட்ட பண்டிகைகள் சிலதை கொண்டாட ஏற்பாடு செய்தோமேயானால் மத சம்மந்தமான பண்டிகை, உற்சவம் ஆகியவைகளை மக்கள் கைவிடுவதற்கு அனுகூலமாயிருக்கும்.

ஆகவே தோழர்களே, இதுவரை நாங்கள் சொன்ன ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பார்த்து, தங்களுக்கு சரியென்று தோன்றியபடி நடக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, இக்கூட்டத்தை முடித்து விடுகிறேன்.

‘குடி அரசு’ 12.05.1935

# ஏது சாதி?

## முனைவர் ஆ. ஜீவானந்தம்

சங்ககாலப் பெருமையெல்லாம் என்னாச்சு – உன்
சாதிச்சங்கச் சண்டையில் மண்ணாச்சு
நீதிநேர்மை ஞாயமெல்லாம் போயாச்சு – இப்ப
நீயாநானா போட்டியின்னு ஆயாச்சு.

அம்பேத்கரு கொள்கையைத்தான் வித்தாச்சு – சனங்க
அடிமாடுபோல இப்ப செத்தாச்சு
பெரியாரு தந்தபுத்தி பித்தாச்சு – அவரு
பேரத்தவிர மத்ததெல்லாம் சொத்தாச்சு!

கார்ல்மார்க்சு மூலதனம் வீணாச்சு – நாடு
கார்ப்பரேட்டுக் கம்பெனிக்கே தூணாச்சு
இந்தியாவ ஆளுறதே நூலாச்சு – அதுக்கு
இத்துப்போன மனுதருமம் கோலாச்சு!

காதலைத்தான் சாதிவெறி பிச்சாச்சு – ஆனா
கலப்புமணம் மனசுகளைத் தச்சாச்சு
எங்களுக்கு தன்மானம் வந்தாச்சு – எங்க
எதிரிகளோ பயந்துபோயி நொந்தாச்சு!

காட்டிக்கொடுத்த பயலுகளாம் மேல்சாதி – ஆரியனக்
கட்டோட எதுத்தவங்க கீழ்சாதி
இருக்குறதோ ஆண்சாதி பெண்சாதி – இதுல
எங்கிருக்கு என்சாதி உன்சாதி!

# வழக்கறிஞர் துரை.அருண் – மணிமேகலை மணவிழா




திராவிடர் விடுதலைக் கழக உயர்நீதிமன்ற வழக்குரைஞர் தோழர் துரை. அருண் - மணிமேகலை (ஆசிரியர்) ஆகியோரது மணவிழா 26.04.2014 சனிக்கிழமை அன்று மாலை சென்னை தியாகராய நகரில் உள்ள செ.தெ.நாயகம் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் வழக்குகளுக்கு சிறப்பாக நேர்நின்று இடது சாரி பிண்ணனி உள்ள குடும்பத்தில் இருந்து வந்திருந்தாலும் பெரியார் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு தி.வி.கவின் கூட்டங்களில் சிறப்பாக உரையாற்றும் தோழர்.துரை அருண் அவர்களின் வாழ்க்கை இணை ஏற்பு ஒப்பந்தத்தை திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். தலைமை நிலையச் செயலாளர் தபசி.குமரன் வரவேற்புரை ஆற்றினார். சென்னை மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். பொதுச்செயலாளர் விடுதலை க.இராசேந்திரன், வழக்கறிஞர் சங்கத் தலைவர் பால் பிரபாகரன், சிஐடியு மாநில துணைத் தலைவர், மூத்த வழக்கறிஞர் விஜயகுமார் மற்றும் பலர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

**நன்கொடை:** 16-04-2014 அன்று தஞ்சை மாவட்டம் பேராவூரணி “மெய்ச்சுடர்” சமூக மேம்பாட்டு இதழ் சார்பாக திராவிடர் விடுதலைக் கழக வார ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சிக்காக ரூ 500 (ஐநூறு ரூபாய் ) கழகத் தலைவரிடம் நேரில் வழங்கினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 1st April 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN




புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | மே 08, 2014 | புரட்சி 13 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00


# ‘பார்ப்பனக் கட்டுப்பாட்டில்’ மத்திய அமைச்சகங்கள்

தனியார் துறை இடஒதுக்கீடு; முஸ்லீம்களுக்கு தனி ஒதுக்கீடு என்று தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் சமூக நீதி பேசியது. ஆனால், டெல்லி அதிகார மய்யங்களில் சமூக நீதியை முற்றிலுமாக புறக்கணித்தது என்ற உண்மை வெளி வந்துள்ளது. டெல்லியில் பிரதமர் அலுவலகத்தில் முதல் நிலை ‘ஏ’ குரூப் அதிகாரிகள் பதவியில் ஒரு தாழ்த்தப்பட்டவரோ, பழங்குடியினரோ இல்லை. 2013 ஜனவரி நிலவரப்படி இந்தப் பதவிகளில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் இரண்டே பேர் மட்டுமே! ஏனைய 49 பதவிகளில் இருப்பவர்கள் அனைவருமே பார்ப்பனர் மற்றும் உயர்ஜாதியினர்தான். அதேபோல் குடியரசு துணைத் தலைவர் அன்சாரி அலுவலகத்தில் ஒரு தலித் அதிகாரிகூட இல்லை. குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் முதல் நிலை அதிகாரியாக ஒரு பிற்படுத்தப்பட்டவர்கூட இல்லை. தலித் அதிகாரிகள் 3 பேரும் பழங்குடி சமூகத்தைச் சார்ந்த ஒருவர் மட்டுமே உள்ளனர். எஞ்சிய 27 உயர்நிலை அதிகாரிகள் பார்ப்பனர் மற்றும் உயர்சாதியினர் தான்! (இடஒதுக்கீடுப் பிரிவில் இடம் பெறாதவர்கள்)

திட்டக் குழுவிலும் சமூகநீதிக்கு முழுமையாக கதவு இழுத்து மூடப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட முதல் நிலை அதிகாரிகள் 27 பேரும், பழங்குடி சமூகத்தைச் சார்ந்த 18 பேரும் உள்ளனர். பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 17 மட்டுமே!

‘மைனாரட்டி’த் துறைக்கான அமைச்சகத்தில் கூட பார்ப்பனர்களே அதிகம். இங்கு முதல் நிலை அதிகாரிகளாக 16 பார்ப்பனர்-உயர்ஜாதியினரும், ‘தலித்’ பிரிவில் 7 பேரும் உள்ளனர். ஒரே ஒரு அதிகாரிதான் பிற்படுத்தப்பட்டவர்.

நாடாளுமன்றத் துறைக்கான அமைச்சகத்திலும் (புதுவை நாராயணசாமி அமைச்சராக உள்ளார்), ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த அதிகாரிகூட இல்லை. சென்னையைச் சேர்ந்த செயல்பாட்டாளர் முரளிதரன், தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் இத்தகவல்களைப் பெற்றுள்ளார். “தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடுகளை அரசியல் சட்டப்படி முழுமையாக அமுல்படுத்துவது சட்டரீதியான கடமை. மத்திய வேலை வாய்ப்பு அமைச்சகம், இதை கண்காணித்து அமுல்படுத்தக் கடமைப்பட்டுள்ளது. ஆனாலும், அலட்சியப்படுத்துகிறார்கள்” என்று முரளிதரன் கூறினார். கடந்த 9 ஆண்டுகளாக தி.மு.க.வினர் அமைச்சராக இருந்த துறைகளிலேயே (சுப்புலட்சுமி, தயாநிதிமாறன், ராஜா) இப்படி இடஒதுக்கீடுகள் முற்றாக புறக் கணிக்கப்பட்டும், அவர்கள் இது குறித்து எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமூக நீதித் துறைக்கான அமைச்சகத்தில் உயர் பதவிகளில் 61 பேர் பார்ப்பனர்-உயர்ஜாதி யினராகவும், தாழ்த்தப்பட்டவர் 5 பேர், பழங்குடியினர் 4 பேர் மட்டுமே உயர் அதிகாரிகளாகவும் உள்ளனர். தகவல் தொடர்பு அமைச்சகத்திலும் பார்ப்பன முன்னேறிய சாதிப் பிரிவினர் 71.23 சதவீதம் பேர் உயர் அதிகாரிகளாக உள்ளனர். பிற்படுத்தப்பட்ட அதிகாரிகள் 7.13 சதவீதம் மட்டுமே!

முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் நிறைந்த மத்திய அமைச்சகம் பார்ப்பனர்-உயர்ஜாதியினர் ஆதிக்கப் பிடிக்குள்தான் சிக்கியிருக்கிறது. தாழ்த்தப் பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடுகள் புறந்தள்ளப்படுகின்றன.

## கார்ப்பரேட் பணத்தில் கொழிக்கும் காங்கிரஸ்-பா.ஜ.க.

2004-05-லிருந்து 2011-2012 வரை பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு நன்கொடை வழங்கிய கார்ப்பரேட் நிறுவனங்கள் :

**காங்கிரசுக்கு...**

ஆதித்யா குழுமம் - 36.4 கோடி; டோர்ரன்ட் பவர்- 11.9 கோடி; பார்தி என்டர்பிரைசஸ்-11 கோடி; டாட்டா குழுமம்-10 கோடி; வேதாந்தா குழுமம்-6 கோடி; அடி அன்ட் சி. அய்.-5.5 கோடி; அய்.டி.சி.-5 கோடி; வீடியோகான்-4.3 கோடி; லார்சன் அன்ட் டூப்ரோ-3.3 கோடி; ரோகன் புரொமோட்டர்ஸ்- 3 கோடி.

**பா.ஜ.க.வுக்கு**

ஆதித்யா பிர்லா குழுமம் - 26.6 கோடி; டோர்ரன்ட் பவர்-13 கோடி; ஆசியா நெட்வி ஹோல்டிங்-10 கோடி; வேதாந்தா குழுமம்-9 கோடி; டாட்டா குழுமம்-6.9 கோடி; வீடியோகான் இன்டஸ்டிரீஸ்-6.3 கோடி; பார்தி என்டர்பிரைசஸ்-6.1 கோடி; சிறீ போத்பாய் உக்பாய் விகாரியா-5 கோடி; சாய்நாத் என்டர்பிரைசஸ்-5 கோடி; பஞ்ச் லியார்ட்-4.6 கோடி.

இவை வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட நன்கொடைகள் மட்டுமே.

**தகவல் : ‘டைம்ஸ் ஆப் இந்தியா’, மே.3, 2014**

## ‘அட்சய திருதை’ சிறப்பு வினா–விடை!

+ ‘அட்சய திருதை’ நாளில் தங்கம் வாங்கினால், அது மேலும் மேலும் பெருகும்.
**– நகைக்கடை விளம்பரங்கள்**

அப்படின்னா, கடைக்காரங்க தங்கத்தை வாங்கத்தானே வேண்டும்! ஏன், கூவிக் கூவி விக்குறாங்க?

+ ‘அட்சயம்’ என்றால், ‘வளரும்’ என்பது அர்த்தம். தங்கம்தான் வாங்க வேண்டுமென்பது அல்ல, எதை வாங்கினாலும் வளரும். **– செய்தி**

அப்ப இந்தியா, உலக வங்கியிடம் கடன் வாங்குவதற்கும் அதுதான் உகந்த நாள்ன்னு சொல்லுங்க!

+ ‘அட்சய திருதை’ நாளில் ஒவ்வொரு நொடியும் புனிதமானது. தனியாக முகூர்த்த நேரம் பார்க்க வேண்டியதில்லை. **– செய்தி**

ஆமாம்! வர்த்தக நலன் கருதி அன்றைக்கு ‘ராகு காலம்’, ‘எமகண்டம்’ எல்லாம் ‘தள்ளுபடி’!

+ வைகாசி மாதத்தில் வளர்பிறை மூன்றாம் திதியில் வருகிற திருதியைதான் உண்மை அட்சய திருதி திருநாள். இந்த நாளில் சுவாதி நட்சத்திரம் இணைந்து விட்டால், நன்மை பயக்காது என்பதற்காக, அது சித்திரை மாத வளர்பிறை நாள் திருதிக்கு மாற்றப்பட்டு, அட்சய திருதி கொண்டாடப்படுகிறது.
**– குமார சிவாச்சாரியார் கட்டுரை**

போச்சுடா. அனுசரிக்கப்படும் ‘அட்சய திரிதை’ நாளே ‘டுபாக்கூர்’ தானா?

+ இந்த நாளில் மூதாதையர்களுக்கு வேத பண்டிதர்களை அழைத்து, ‘திதி’, ‘தர்ப்பணம்’ செய்வது நல்லது. **– செய்தி**

அப்போதுதானே, ‘திதி’, ‘தர்ப்பணம்’ தொழிலும் வளரும்; நல்ல யோசனைதான்!

+ அட்சய திருதை நாளில் வெயில் கொடுமைதீர, குடை விசிறி, காலணி வழங்கினால், இன்ப வாழ்வு உண்டாகும். **– செய்தி**

சொல்றதுதான் சொல்றீங்க... ஒரு ‘ஏர்கண்டிஷனர்’, ஒரு ‘கூலிங் கிளாஸ்’ன்னு சொல்லக் கூடாதா?

+ அட்சய திருதையில் தங்கம், பசுமாடு மற்றும் தானியங்களை தானம் தரவேண்டுமே தவிர, விற்பனை செய்யக் கூடாது எனக் கூறுகிறது, ‘பவிஷ்ய புராணம்’. **– செய்தி**

அதனால் ஒன்றும் பிரச்சினை இல்லை. விற்பனை தள்ளுபடி 5 சதவீதம் என்பதை ‘தானம்’ 5 சதவீதம் என்று மாற்றிக் கொள்ளலாம்.

+ ஆலம் இலையில் ‘மிருத்யுஞ்சய’ மந்திரத்தை ஜெபித்து, வியாபாரம் நடக்கும் கடையில் வைத்தால் வியாபாரம் பெருகும்; எதிரிகள் தொல்லை நீங்கும். **– செய்தி**

ஆமாம்! திருட்டு பயமும் இருக்காது; ‘இன்சூரன்சும்’ தேவையே இல்லை.

+ இந்து இதிகாசப்படி – ‘அட்சய திருதி’ நாளில் தான் வேதவியாசர் மகாபாரத இதிகாசத்தை விநாயகரிடம் எழுதச் சொல்லி கட்டளை யிட்டார். **– செய்தி**

அப்ப, மகாபாரதத்துக்கு ‘காப்பி ரைட்’ விநாய கனுக்குத் தானா? வியாசருக்கு இல்லையா?

+ ‘அட்சய திருதை’யன்று குழந்தைத் திருமணம் நடத்த முயன்ற 6 பெற்றோர்கள் ராஜஸ்தானில் கைது. **– செய்தி**

இந்த நல்ல நாளில் கைதாகி சிறைக்குப் போவது பெரும் ‘பாக்கியம்’. அதற்கெல்லாம் ‘கொடுத்து வைத்திருக்கணும்’!

+ பூமியில் சத்திரிய அரசர்களை யெல்லாம் அழிப்பதற்கு விஷ்ணு பகவான் கையில் கோடாலியுடன் (வெட்டும் கருவி) பரசுராமனாக ‘அவதரித்தது’ – இந்த நாளில்தான்.
**– செய்தி**

அப்ப, பயங்கரவாதத்துக்கும் இதுதான் ‘புனித நாள்’ன்னு சொல்லுங்க!

+ வறுமையில் வாடிய குசேலன், கிருஷ்ண பகவானுக்கு அன்புடன் வழங்கிய ‘அவல்’ உணவை பகவான் சாப்பிட குசேலன் வீட்டுக் கூரை, தங்கக் கூரையாக மாறியது.
**– செய்தி**

பரவாயில்லையே! தங்கமே கண்டுபிடிக்காத காலத்திலேயே அதை இறக்குமதி செய்து பகவான் கூரையாகவே போட்டாரா? வளர்ச்சியிலே மோடியையே மிஞ்சிட்டாரு போங்க!

+ அட்சய திருதை நாளில் தான் உணவு கடவுளான ‘அன்னபூரணி’ அவதரித்தாள்! **– செய்தி**

அப்படியா? இது ஓட்டல் முதலாளிகளுக்கு தெரிஞ்சா, அவர்களும் ‘தள்ளுபடி’ வியாபாரத்தை தொடங்கிடுவாங்களே!

(செய்திகளுக்கு ஆதாரம் : புராண புரட்டுகளை செய்தி கட்டுரைகளாக்கி, ‘அட்சய திருதை’ நாளில் வாசகர்களுக்கு விற்பனை செய்து வியாபாரத்தைப் பெருக்கிய தமிழ்நாளேடுகள்)

**தலையங்கம்**

## ‘கடவுள்’ ஒருவர் இருக்கிறாரா?

“கடவுள் எப்படி எங்கள் குழந்தையை இப்படி ஒரு கொடூரமான முறையில் எடுத்துக் கொள்ளலாம்?” என்று கேட்கிறார், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் குண்டுவெடிப்பில் பலியான இளம் பெண் பொறியாளர் சுவாதியின் பாட்டி! காலம் முழுதும் கடவுளை நம்பிக் கொண்டிருந்த ஒரு மூதாட்டியின் நியாயமான கோபத்துக்குப் பின்னால், கொந்தளிக்கும் உணர்வுகளை குறைத்து மதிப்பிட முடியாது. பேத்தியைப் பறி கொடுத்த துயரத்தின் வெளிப்பாடு – அவர் நம்பும் கடவுளின் நேர்மையை சந்தேகிக்க வைத்துவிட்டது. எப்படியோ குண்டு வைப்பதை கடவுளால் தடுக்கவும் முடியவில்லை. இப்போது மக்களின் கோபம் ஆட்சியின் செயலின்மை மீதுதான். ‘கடவுள்’ தப்பி விட்டார்!

‘தும்பை விட்டு வாலைப் பிடிப்பது’ என்று கூறுவார்கள். எல்லாம் நடந்து முடிந்த பிறகு ஆட்சி நிர்வாகம் சுறுசுறுப்பாகக் களமிறங்கிவிடும். ஆரவாரம், பதட்டம், குற்றவாளிகள் தேடுதல், பாதுகாப்பு கெடுபிடிகள் – இவை எல்லாம் சில வாரங்கள் தொடரும். தேர்தல் வாக்குப் பதிவு முடிந்து செய்தி கிடைக்காத சோகத்தில் மூழ்கிக் கிடந்த ஊடகங்களுக்கு தீனி கிடைத்துவிட்டதில் மகிழ்ச்சி. ஆளும் கட்சிகளும் எதிர்கட்சிகளும் ஒருவர் மாற்றி ஒருவர் மீது வீசும் குற்றச்சாட்டுகள் அனல் பறக்கின்றன. எல்லாம் சரிதான். ஆனால், ஏன் இப்படி குண்டுகள் திடீர் திடீர் என்று வெடித்துக் கொண்டே இருக்கின்றன? இவற்றில் எந்தத் தொடர்பும் இல்லாத ஆட்சியமைப்பின் பாதுகாப்பை மட்டுமே நம்பி வாழும் அப்பாவி மக்கள் ஏன் சாக வேண்டும்? ஒரு லட்சம் ரூபாய் அரசு தரும் இழப்பீட்டை அவரது குடும்பத்தினர் வாங்குவதற்கா? இந்தக் கேள்விகளை எல்லாம் கடந்து சுவாதியின் பாட்டி எழுப்பியிருக்கும் கேள்விதான் பிரச்சினைக்கே மய்யம்.

மதத்தின் புனிதங்களைக் காக்க, “ஆண்டவனின்” ஆசிர்வாதத்தோடு குண்டுகள் வெடிக்கும்போது, வழிபாட்டுத் தலங்கள் இடிபடும்போது, அப்பாவிகள் உயிர் பறிப்பு நடந்து முடிகிறபோது, தான் வணங்கும் ‘கடவுளுக்கான’ சேவையாகவே இதை செய்து முடிக்கும் குரூர உள்ளங்கள் நியாயப்படுத்திக் கொள்கின்றன. இந்த உள்ளங்களில் இயல்பாகப் புதையுண்டிருக்க வேண்டிய மனிதநேயத்தைத் தூக்கி வீசி எறிவது எது? கடவுளும் அந்தக் கடவுளால் உருவாக்கப்பட்டதாக மனித மூளைக்குள் வெறியாக இறங்கி நிற்கும் மதமும், அது ஊட்டிய வெறியும் தானே! அனைத்து மதங்களையும் சேர்த்துத் தான் நாம் கூறுகிறோம். கடவுள் பெயரால் மதத்தின் நம்பிக்கை யால் மனித குல வரலாற்றை ரத்த வாடையாக்கிய சக்திகள் இன்னும் அந்த ‘இறைத் தொண்டு’களை தொடரத்தான் வேண்டுமா?

‘கடவுள்’ பெயரைச் சொல்லி, ‘நம்மை படைத்தவன்’ என்ற கண்ணோட்டத்தில் பல்வேறு மத நம்பிக்கையுள்ள கடவுள் நம்பிக்கையாளர்களை ஒன்று திரட்டக்கூட முடியும். ஆனால், எல்லா மதமும் ஒன்றுதான் என்று ஒரே அணிக்குள் திரள எந்த மதக்காரர்களும் வர மாட்டார்கள். எனவே கடவுள் நம்பிக்கையைவிட மத நம்பிக்கைதான் ஆபத்தானதாக இருக்கிறது என்றார், பெரியார்.

‘சுதந்திர’ இந்தியாவில் தேசத் தந்தை காந்தியார் உயிரைப் பறித்தது – முதல் மதவெறி. அதன் எதிர்வினைகள் கலவரங்களாக வடிவெடுத்தன. பாபர் மசூதி இடிப்பும் குஜராத் கலவரமும் நாட்டை வேறு திசைக்கு இழுத்துப் போயின. கோவையில் இஸ்லாமிய தீவிரவாதம், தொழில் நகரத்தையே சிதைத்தது. அப்பாவி உயிர்கள் பலியாயின. “இந்து தீவிரவாதிகள்” வட மாநிலங்களில் வெடிகுண்டு தாக்குதலை நடத்தி அதில் இஸ்லாமியர்களை சிக்க வைத்ததையும், இரகசிய உளவுத் துறையே சில தாக்குதல்களுக்கு திட்டமிட்டு – இஸ்லாமியர்களை பலிகடாவாக்குவதையும் – சில இஸ்லாமிய இளைஞர்கள் இதற்கு எதிர்வினையாற்ற குண்டுகளை வீசத் தொடங்கியதையும் நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

மதங்களைப் படைத்ததாகக் கூறப்படும் கடவுள் என்று ஒருவர் உண்மையிலேயே இருந்திருப்பாரேயானால், இப்படி மதங்களின் பெயரால் மனிதப் படுகொலைகள் நடப்பதை “அவர்” அனுமதிப்பாரா? என்ற கேள்விக்கு மதவாதிகளிடமிருந்து என்ன பதில் வரப் போகிறது? சுவாதியின் பாட்டி கடவுளை நோக்கி எழுப்பும் கேள்வி அவருக்கு “கடவுளின்” நேர்மையையே சந்தேகிக்க வைக்கிறது. இந்த ஆற்றாமையை அறிவியல் பார்வையில் விரிவுபடுத்தி சிந்திக்க அந்த மூதாட்டியால் இயலாமல் போகலாம். ஆனால், மனிதத்தை மதிக்கும் ஒவ்வொருவரும் தங்களை நோக்கிக் கேட்க வேண்டிய கேள்வி இருக்கிறது. அது –

“கடவுள் ஒருவர் இருப்பது உண்மையானால் இந்த கொடூரங்கள் நடக்குமா?”

– புரட்சிப் பெரியார் முழக்கம் 08.05.2014

# பெரியாருக்குக் காட்டும் நன்றி !

*(‘அறிவின் வழி’ என்ற மாத இதழ் கடந்த ஏப்ரல் மாதம் தமிழகத்தில் பகுத்தறிவு பேசும் இயக்கம் குறித்து எழுதியுள்ள தலையங்கம்)*

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் உண்மையான தன்மையை பகுத்து அறிந்து கொள்பவன் பகுத்தறிவாளன் ஆகிறான். தமிழ்நாட்டில் பகுத்தறிவு என்ற சொல் கடவுள் மறுப்பு என்பதையே முன்னிலைப்படுத்துகின்றது. பகுத்தறிவாளன் என்றால் நாத்திகன் என்று சொல்லிவிட்டு ஒதுக்கி விடுகிறார்கள் அல்லது ஒதுங்கி விடுகிறார்கள். ‘பகுத்தறிவு’ என்று பேசத் தொடங்கியதுமே அதைத் தட்டிக் கழித்து விட்டு, புறக்கணித்துவிட்டு ஓட்டம் பிடிக்கும் அளவுக்கு ஓர் ஒவ்வாமைப் பண்பை வளர்த்திருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் பகுத்தறிவுவாதம் பேசுகிறவர்கள் மூன்று பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம். இதில் முதல் பிரிவினர், பகுத்தறிவு என்ற சொல்லைப் பட்டா போட்டு எடுத்துக் கொண்டிருப்பவர்கள். வேறு எவரும் பகுத்தறிவு என்ற சொல்லை பயன்படுத்துவதை அல்லது அந்தப் பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்துவதை விரும்பாதவர்கள். அவ்வாறு ஓர் இயக்கம், அமைப்பு தொடங்கப்படுமானால், அதற்கு யாரும் எந்த விதத்திலும் ஆதரவளிக்கக் கூடாது என்று ரகசிய சுற்றறிக்கை அனுப்பிக் கொண்டிருப்பவர்கள்.

இவர்களது பார்வையில் கி.பி.18 ஆம் நூற்றாண்டின் சூழ்நிலைகள் மக்களின் வாழ்க்கைத் தரம் எதுவுமே உயரவில்லை. அன்றைய நிலை இன்றும் தொடருகிறது. அன்றைக்குக் காட்டிய அதே எதிர்ப்பு உணர்ச்சிகளை போராட்ட முறையை அப்படியே தொடர வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள், எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சியை மறுமலர்ச்சியை அறிந்து கொண்டாலும், அதே ஆண்டான் அடிமைத் தனம் அப்படியே இருக்கிறது என்று சொல்வதன் மூலமே தமது அமைப்பு சிதையாமல் இருக்கும் என்று நம்புகிறார்கள்.

அணுகுமுறையை அவர்கள் மாற்றிக் கொள்ள விரும்பாததால் அவர்கள் விரும்பிய மூடநம்பிக்கை ஒழிப்பு, ஜாதி ஒழிப்புக் கொள்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக ஆன்மீகம் பன்மடங்கு வளர்ச்சி பெற்றுள்ளது. ஜாதி வெறி, தீண்டாமை பன்மடங்கு வளர்ச்சி அடைந்து தலைவிரித்தாடுகிறது. இந்தத் தவறான அணுகுமுறையை எதிர்த்து அல்லது அரசியல் சார்புக் கொள்கையை எதிர்த்து பலர் வெளியேறி விட்டனர். புதிய இயக்கங்களை தொடங்கியுள்ளனர். இயங்கிக் கொண்டும் இருக்கின்றனர்.

வழக்கம்போல பிரிந்து சென்றவர்களை வசைபாடி ஒதுக்கிவிட்டு, சுயமரியாதை இயக்கத்தின் உண்மையான வாரிசு நாங்கள்தான் என்று மார்தட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் புதிதாக எதுவும் சொல்லுவதில்லை. மாறாக பழம் பெருமை பேசியே காலத்தை ஓட்டிக் கொண்டுள்ளார்கள். இயக்கத்திற்காகப் பாடுபட்ட முன்னாள் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி பேசிவிட்டு ‘கொல்லன் தெருவிலே ஊசி விற்று’க் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதன் மூலமே மூட நம்பிக்கை ஒழிந்துவிடும் என நம்புகிறார்கள்.

பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பரப்ப வேண்டும். நாளும் பெருகி வரும் ஆன்மிகக் கூட்டத்திற்குச் சமமாக இல்லாவிடினும் ஓரளவேனும் பிரச்சாரம் செய்யக்கூடிய அமைப்புகளை ஊக்குவிக்க வேண்டும். மூட நம்பிக்கை, சாதி ஒழிப்புக்காக பாடுபடுகிறவர்களை தட்டிக் கொடுத்து ஆதரவளிக்க வேண்டும் என்றெல்லாம் சிறிதும் சிந்திக்காமல் கடவுள் மறுப்பு, ஜாதி ஒழிப்புக் கொள்கைகளை இரண்டாமிடத்திற்கு தள்ளிவிட்டு, அரசியல் மொழி சார்புடைய இயக்கமாக மாறி வருகிறார்கள். இவர்களது தற்போதைய சிந்தனை ஒரு அரசியல் கட்சிக்கு ஊதுகுழலாக இருப்பது, சிலைகள் வைக்க வசூல் செய்வது, நூல்களை வெளியிட்டு வருவாயை பெருக்குவது மட்டுமே.

பகுத்தறிவுவாதிகளின் இரண்டாம் பிரிவினர் மேற்சொன்ன முதற்பிரிவிலிருந்து பிரிந்து வந்தவர்கள். இவர்களது ஆரம்பகால இயக்கங்கள் எப்படியிருப்பினும் இப்போது முழுக்க முழுக்க இனம், மொழி சார்புடையதாகவே இருக்கும்படி கொள்கைகளை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவைப்படும் போது, ‘பகுத்தறிவுப் பாசறையில்’ வளர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளத் தயங்குவதே இல்லை. மூடநம்பிக்கைகளைச் சாடுவது, கடவுள் மறுப்புச் சிந்தனைகளைப் பரப்புவது போன்றவற்றை தேவைப்படும்போது ஊறுகாய் போல் அவ்வப்போது தொட்டுக் கொள்வார்கள்.

‘கடவுள் இல்லவே இல்லை’ என்ற குரல் முடங்கிப்போய், ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்றாகி ஓட்டு வங்கியை நிரப்பியது இவர்கள் காலத்தில்தான். சீரங்கத்து ரங்கநாதரையும் தில்லை நடராசரையும் பீரங்கி வைத்து தகர்க்கும் நாள் என்று? எனப் பேசியவர்கள், இன்று தம் பழைய கொள்கைகளை பீரங்கி வைத்து தகர்த்துவிட்டு அரசியல், ஆட்சியதிகாரம், பதவி சுகம் போன்ற போதையில் மூழ்கி, மனசாட்சியையும் ஒதுக்கிவிட்டு வாழக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் இப்போது ஆன்மிகவாதிகள். இவர்களே மாறிய பிறகு இவர்களது குடும்பம் எப்படி இருக்கும்? இவர்களிலிருந்து பிரிந்த மற்றொரு பிரிவினர் ஆன்மிக மூடத்தனங்கள் அத்தனைக்கும் அடிமைகளாகி, அதே நேரத்தில் திராவிட பாரம்பரியக் கட்சி என்பதை மறக்காமல் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதி ஒழிப்புக் கொள்கையில் பெரியார் ஈ.வெ.ரா.வின் சிந்தனைகளை அப்படியே பின்பற்றி வாழும் உண்மையான பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களை மூன்றாம் பிரிவினர் எனலாம். இவர்கள் பணத்திற்கோ, பதவிக்கோ அடிபணியாதவர்கள். தன் சொந்தப் பணத்தைப் போட்டு இயக்கங்கள் நடத்திக் கொண்டிருப்பவர்கள்.

இத்தகைய முழுமையான நாத்திகரின் விரோதி ஆன்மிகவாதிகள் என்றா நினைக்கிறீர்கள்? அல்ல! அல்ல! பகுத்தறிவுவாதிகள் என்று நாம் முதலில் குறிப்பிட்ட இரண்டு பிரிவு இயக்கங்களே இவர்களுக்கு எதிரிகள். உண்மையான மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதி ஒழிப்பு இயக்கங்களுக்கு இவர்கள் ஆதரவளிக்க வேண்டாம். நல்ல சிந்தனைகள், சீர்திருத்தம் கருத்துகள் மக்களைச் சென்றடைய இவர்கள் இடையூறாக இல்லாமல் இருந்தால் அதுவே இவர்கள் ‘பெரியாருக்கு’க் காட்டும் நன்றியாகும்!

**தகவல் : இராம. இளங்கோவன், கோபி**

## மதமா? அரசா?

மதம் மானிட வாழ்க்கைக்கு ஏற்ற சட்ட திட்டங்களுக்கோ, மனிதனின் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஏற்ற ஒழுங்கு முறைக்கோ ஏற்பட்டது என்கின்ற விஷயங்களிலும்கூட நமது ஆட்சேபணையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதாவது, இன்று மதங்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவைகளில் மேற்கண்ட குணங்கள் இருக்கின்றனவா, இல்லையா என்பது ஒருபுறம் இருந்தாலும், இந்தக் காரியங்களுக்காக மக்கள் செலவில் நடைபெறும் அரசாங்க நிர்வாகமும், சிவில்-கிரிமினல் சட்ட திட்டங்களும், அவைகளை நிறைவேற்ற நியாயஸ்தலம், தண்டனை, சன்மானம் ஆகிய முறைகளும் இருந்துவரும்போது, இவைகள் அல்லாத ஒரு சாதனம், அதாவது மதம் என்கின்ற ஒரு விஷயம் எதற்காக இருக்க வேண்டும்?

***‘பகுத்தறிவு’ தலையங்கம் 9.9.1934***

## மயிலாடுதுறை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் விளக்கம்

# சமூக மாற்றம்–வளர்ச்சிகளை தடைப்படுத்தும் ஜாதியம்

***சமூகத்தில் நிகழும் அரசியல் – பொருளாதார செயல்பாடுகளை மக்கள் மேம்பாட்டுக்கு பயன்படவிடாது, ஜாதியம் விழுங்கி செரிமானம் செய்கிறது என்று பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.***

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் மயிலாடுதுறையில் 30.3.2014 அன்று சிறப்புக் கருத்தரங்கம், வருவாய்த் துறை அலுவலர் சங்கக் கட்டிடத்தில் சிறப்புடன் நடைபெற்றது. காலை 10.30 மணிக்கு மாநிலக் குழுத் தலைவர் எஸ்.பி. சாமி தலைமையில் நடந்த முதல் அமர்வில் ‘ஜாதியப் பாகுபாடுகளும் வன்கொடுமைகளும்’ என்ற தலைப்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார்.

“ஜாதியப் பாகுபாடுகளுக்கு அடிப்படையானது ஜாதியமைப்பு; ஜாதியமைப்பு உலகிலே எங்கும் இல்லாது இந்தியாவில் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கிற பார்ப்பனர்களால் கட்டி எழுப்பப்பட்ட அமைப்பு. பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவுக்கு வரும் வரை இந்தியா என்ற ஒன்று உருவாகவில்லை. ஆனால், வேத காலத்தில் தொடங்கிய பார்ப்பனர்களின் புரோகித ஆட்சிகளையே அரசர்களும் குறுநில மன்னர்களும் நடத்தி வந்தனர். இதனால் உலகில் பல்வேறு சமூக அமைப்புகளில் நிகழ்ந்த மாற்றங்கள் இங்கே உருப் பெறாமல் பார்ப்பனிய ஜாதியமைப்பு தடுத்து வந்தது. அரசுகளை துப்பாக்கி முனையில் இணைத்து பிரிட்டிஷ்காரர்கள் உருவாக்கிய நிர்வாக அமைப்பில் ரயில் தொடர்பு, தபால் சேவை, தொழிற்சாலைகள் போன்ற நவீனத்துவத்தால் தேங்கிக் கிடந்த பார்ப்பனிய சமூக அமைப்பில் மாற்றங்கள் உருவாகத் தொடங்கி, பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஒரு புறமும், ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபை ஒரு புறமும், அதன் பிடிக்குள் காங்கிரஸ் போன்ற அரசியல் கட்சிகளும் உருவெடுத்தன. ஜாதியமைப்பு உருவாக்கிய அடிமைத்தனத்துக்கு எதிராக வகுப்புவாரி உரிமை கிளர்ச்சிகளும் இந்தி எதிர்ப்பு இயக்கங்களும் பார்ப்பன எதிர்ப்பும் முகிழ்த்தன. காங்கிரசின் தேசிய அரசியலைக் கைப்பற்றிக் கொண்ட பார்ப்பனர்கள், சுதந்திரப் போராட்டத்தைப் பயன்படுத்தி பார்ப்பன இந்து நாட்டை உருவாக்கிடும் முயற்சிகளில் இறங்கினர். அதன் காரணமாக வந்த ‘சுதந்திரம்’ மக்களுக்காக இல்லாமல் பார்ப்பன-பனியா மேலாதிக்கத்துக்கே வழி திறந்துவிட்டது. அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டு, அனைவரும் சமம், 21 வயதுடைய அனைவருக்கும் ஒரு ஓட்டு என்ற சட்டங்கள் வந்த பிறகும் சமத்துவம் உருவாகி விடாமல் சமூகத்தைப் பார்ப்பனிய ஜாதியமைப்பே தனது பிடிக்குள் வைத்திருந்தது. ஜாதிகளைக் கடந்து, அரசியல் நோக்கங்களுக்காக அரசியல் கட்சிகள் உருவானாலும், பல்வேறு ஜாதியினர், அரசியல் கட்சி என்ற குடையின் கீழ் ஓரணியாக திரண்ட போதும், அரசியல் கட்சிகளையும் ஜாதி செரிமானம் செய்து கொண்டது.

இந்தியாவின் ஜனநாயகம், பார்ப்பன நாயகமாகவே இருப்பதை பெரியார் 1925 ஆம் ஆண்டிலேயே சுட்டிக் காட்டினார். தேர்தல் முறையில்கூட சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் தனித் தொகுதி முறை கொண்டு வரப்பட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதிகளில் பட்டியலினத்தைச் சார்ந்த வேட்பாளர்கள் நிறுத்தப்பட வேண்டிய கட்டாயம் - சட்டப்பூர்வமாக உறுதியானது. ஆனால் சட்டம் எதுவும் இல்லாமலே ஒவ்வொரு தொகுதியிலும் எந்த ஜாதியின் எண்ணிக்கை அதிகமிருக்கிறதோ, அந்த ஜாதி வேட்பாளர்களையே நிறுத்துவதையே கட்சிகள் வழக்கமாக்கிக் கொண்டுவிட்டன. ஆக தேர்தல் முறையிலும் ஜாதியை ஒழிக்க முடியாதது மட்டுமல்ல, அது மேலும் வலிமையடையவே செய்தது.

புதிய கண்டுபிடிப்புகள், அறிவியல் சாதனங்களின் வளர்ச்சி, தொழிற்சாலைகள் என்ற நவீனத்துவங்கள் வந்தாலும், ஜாதிகளைக் கடந்து வர்க்கங்களின் அடிப்படையில் தொழிற் சங்கங்கள் வந்தாலும் ஜாதியின் பிடி தளரவில்லை. ஜாதியமைப்பு அனைத்து நிறுவனங்களையும் செரிமானம் செய்துவிட்டது. 1990களில் ‘உலகமயமாக்கல்’ என்ற கொள்கை அமுலாக்கப்பட்டு, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கதவுகள் திறந்துவிடப்பட்டன. இதன் பெரு வளர்ச்சியும், ஜாதியமைப்பை அசைக்க முடியவில்லை. இந்தியாவின் முதல் 10 பணக்காரர்கள் வரிசையில் பார்ப்பனர்களும் வைசியர்களுமே இடம் பெற்றுள்ளதை சுட்டிக்காட்டும் புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர் அருந்ததிராய், ஏன், ஒரு தலித்தோ, ஆதிவாசியோ இடம் பெறவில்லை என்று கேள்வி எழுப்புகிறார். ‘பார்ப்பன-பனியா’ மட்டுமே இந்த சமூகத்தில் பெரும் தொழிலதிபர்களாக வளர முடிவதற்கு ‘அர்த்த சாஸ்திரம்’, ‘மனு சாஸ்திரம்’ அவர்களுக்கு வழங்கி வந்த மத அதிகார உரிமைகள் தொடர்ந்து கட்டிக் காப்பாற்றப்பட்டு வருவதுதான் என்று அம்பேத்கரின் ‘ஜாதி ஒழிப்பு’ நூலுக்கு வழங்கிய முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார். பார்ப்பனர்கள் தங்களின் பிறவி ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொள்ள சமூகத்தில் திணித்த ஜாதியம் என்ற கருத்தியல், பாசிசக் கருத்தியலாகும்.

சக மனிதர்களை ஜாதியின் அடிப்படையில் பிளவுபடுத்துவதோடு ‘மேல்-கீழ்’ அடுக்குகளை உறுதியாக்கி, வெறுப்பையும் பகைமையையும் திணித்துக் கொண்டிருக்கிறது. பார்ப்பனியம், பார்ப்பனர்களிடம்தான் தங்கியுள்ளதா என்ற கேள்விக்கு இல்லை என்று உறுதியாக சொல்ல முடியும். ‘முதலாளித்துவ’, ‘நிலபிரபுத்துவ’ சிந்தனைகள் எப்படி முதலாளிகள், நில பிரபுக்களிடம் மட்டுமல்லாது சமூகத்தில் பல்வேறு படிநிலைகளில் பரவி இருப்பதுபோல் பார்ப்பனியமும் ஊடுருவி நிற்கிறது. ஆனாலும், முதலாளித்துவத்தை எதிர்க்க முதலாளிகள் சுரண்டல் எதிர்ப்பை முதன்மைப்படுத்துவதுபோல் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக்கு நில பிரபுக்கள் எதிர்ப்பை முதன்மைப் படுத்துவதுபோல், ஜாதியத்துக்கு கருத்தியலை வழங்கிய பார்ப்பனியத்தை வீழ்த்த பார்ப்பனிய எதிர்ப்போடு பார்ப்பன எதிர்ப்பையும் முதன்மைப் படுத்த வேண்டும்” - என்று விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில், வன்னியர் ஜாதிப் பெண்களை தலித் ஆண்கள் ‘நாடகக் காதல்’ நடத்தி ஏமாற்றுகிறார்கள் என்று பா.ம.க. நிறுவனர் இராமதாசு முன்வைக்கும் குற்றச்சாட்டை புள்ளி விவரங்களுடன் மறுத்து தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தலித் பெண்கள்தான் பிற ஆதிக்க ஜாதி ஆண்களால் ஏமாற்றப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டினார். மத்திய அரசு பிறப்பித்த வன்கொடுமை தடுப்பு சட்டத் திருத்தத்துக்கான அவசரப் பிரகடனத்தின் புதிய கூறுகளை விளக்கினார். அரசியல் சட்டம், ஜனநாயகம், தேர்தல், அரசியல் கட்சிகள், தொழில் வளர்ச்சி, உலக மயமாக்கல் என்று வரிசையாக நிகழ்ந்து வரும் சமூக பொருளாதார, செயல்பாடுகளையும் கடந்து ஜாதியமைப்பும் பார்ப்பனியமும் உயிர்த் துடிப்போடு சமூகத்தின் வளர்ச்சிக்கு தடை போட்டு வருகின்றன. எனவே, ஜாதியமைப்புக்கு எதிரான போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

தொடர்ந்து கவிஞர் மனுஷ்ய புத்திரன், “மத வாதமும் வளர்ச்சி குறித்த மூடநம்பிக்கைகளும்” என்ற தலைப்பில் மோடியை முன்னிறுத்தி உயர்த்திப் பிடிக்கப்படும் மதவெறி அரசியலையும் குஜராத் வளர்ச்சி என்ற மாய்மாலத்தையும் ஊடகங்கள் பரப்பி வரும் பொய் பரப்புரைகளையும் விளக்கி பேசினார்.

## பத்ரி நினைவு நாள்: நினைவிடத்தில் மரியாதை



தோழர் பத்ரிநாராயணன் 10 ஆம் ஆண்டு நினைவு நாளான 30.4.2014 புதன் கிழமை காலை 9 மணியளவில் சென்னை மயிலாப்பூர் கைலாசபுரம் இடுகாட்டிலுள்ள நினைவிடத்திற்குப் பேரணியாகச் சென்று மாலை அணிவிக்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை க.இராசேந்திரன், இராயப்பேட்டை ஆர்.என்.துரை (தி.மு.க.) ஆகியோர் வீரவணக்க உரையாற்றினர்.

## விழுப்புரம் மாவட்டக் கழக நிர்வாகிகள்



*3.5.2014* சனிக்கிழமை அன்று மாலை 5 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வாசவி மஹால் திருமண மண்டபத்தில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் விழுப்புரம் மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தோழர்கள் மாவட்ட பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

*தலைவர்: ந. வெற்றிவேல் (9629028995), கருங்குழி, சின்னசேலம். செயலாளர் : ச.கு. பெரியார் வெங்கட், (9025639562), கடுவனூர். அமைப்பாளர் : தெ.செநாவப்பிள்ளை (9442069045), நெடுமானூர். துணைத் தலைவர் : கு.கோ. சாக்ரடீசு (9443987381), செஞ்சி. துணைச் செயலாளர்: செ.பிரபு (9551519962), தொழுவந்தாங்கல். தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் : சி.ஆசைத்தம்பி (9443663747), கள்ளக்குறிச்சி.*

DATE OF PUBLICATION 07.05.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# உடுப்பி கிருஷ்ணன் கோயிலில் பார்ப்பனர்களின் தீண்டாமை

நாட்டின் பெரிய கோயில்கள் பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டின் கீழ்தான் செயல்படுகின்றன. கோயில் வழிபாட்டு முறைகளை தீர்மானிக்கிறவர்கள் பார்ப்பனர்கள்தான். தமிழ்நாடு கோயில்களில் உரிய ஆகமப் பயிற்சி பெற்ற எவரும் கருவறைக்குள் நுழையும் உரிமை பார்ப்பனர்களால் இன்று வரை மறுக்கப்பட்டே வருகிறது. ஆனால், கேரளாவில் இப்படி ஒரு தடை இல்லை. தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகும் நீதிபதி மகராஜன் தலைமையில் அமைக்கப்பட்ட சைவ வைணவ மதத் தலைவர்கள் இடம் பெற்ற குழு பரிந்துரை செய்த பிறகும் கடந்த முறை தி.மு.க. ஆட்சியில் மீண்டும் ஒரு முறை நிர்வாக ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகும் பார்ப்பனர்கள் கருவறைக்குள் தாங்கள் மட்டுமே நுழைந்து பூஜை செய்ய முடியும். ‘சூத்திரர்’ நுழைந்தால் தீட்டு என்று சாதிக்கிறார்கள். இது மத சுதந்திர உரிமையில் குறுக்கிடுவதாகும் என்று உச்சநீதிமன்றம் வரை போய் தடை ஆணை வாங்கி விட்டார்கள். பக்தி மார்க்கத்தில் ஊறித் திளைத்திருக்கும் சொரணையுள்ள ‘தமிழர்’ எவரும் இந்த இழிவை கண்டு கொள்வதே இல்லை.

இந்த நிலையில் கருநாடக மாநிலம் உடுப்பியில் உள்ள கிருஷ்ணன் கோயிலில் பார்ப்பனர்கள் தங்களுக்கான தனி ‘சாப்பிடும் இடத்தை’ உருவாக்கிக் கொண்டு, பிற சாதியினர் ‘பிராமணர்’களுடன் சேர்ந்து சாப்பிடுவது ‘தீட்டு’ என்று கூறி வருகிறார்கள். இந்த இழிநிலை குறித்து ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (ஏப்.28, 2004) சஞ்சய் ஹெக்டே என்ற உச்சநீதிமன்ற வழக்கறிஞர் இது குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

உடுப்பியில் உள்ள கிருஷ்ணன் கோயில் மிகவும் பிரபலமானது. 13 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இந்த கோயில் மத்வாச்சாரி வழி வந்த பார்ப்பன மடத் தலைவர்களால் சுழற்சி முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தில்லை நடராசன் கோயிலுக்கு ‘சிவபெருமானை’ வழிபட வந்த, தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த நந்தன், தீயில் இறங்கி தனது தீட்டைக் கழித்தப் பிறகு, தில்லை நடராசன் வெளியிலேயே நந்தனை நிற்க வைத்து காட்சித் தந்ததாக கட்டிவிட்ட கதைபோல, இந்தக் கோயிலுக்கும் ஒரு கதை உண்டு.

கனக தாசா என்ற ஆடு மேய்க்கும் ‘குரும்பர்’ ஜாதியில் பிறந்த பக்தன், உடுப்பி கிருஷ்ணன் கோயிலுக்கு வழிபட வந்தான். ‘கீழ் ஜாதி’ என்பதால் உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. கோயிலுக்கு வெளியே நின்று கொண்டு “கிருஷ்ண பகவானை” நோக்கி பயபக்தியுடன் பாடல்களைப் பாடினான். அப்போது கிழக்கு நோக்கி இருந்த கிருஷ்ணன் சிலை, மேற்கு பக்கமாகத் திரும்பி, பக்தனுக்கும் தனக்கும் இடையே இருந்த சுவரை உடைத்து, தரிசனம் தந்தது என்பது கதை. ‘பக்தன்’ தரிசனத்துக்காக பகவான் உடைத்த சுவரை அப்போதைய பார்ப்பன மடாதிபதி வதிராஜசாமி என்பவர், ‘ஜன்னல்’ வைத்து அடைத்தார். அந்த ‘ஜன்னல் வழியாகவே’ - ‘கீழ்ஜாதிக்காரர்கள்’ கிருஷ்ணனை தரிசிக்க வேண்டும் என்பதை பார்ப்பனர்கள் நடைமுறைக்குக கொண்டு வந்தார்கள். இது 16 ஆம் நூற்றாண்டில் நடந்த சம்பவம்.

அதற்குப் பிறகு 1930இல் உடுப்பி வந்த காந்தியார், இந்தத் தீண்டாமை பற்றிய செய்தியறிந்து, கிருஷ்ணன் கோயில் தரிசனத்தைத் தவிர்த்துவிட்டார். 1980ஆம் ஆண்டில் பிரபலமான கருநாடக இசை மேதையும் ‘ஜாஸ்’ இசைக் கலைஞருமான ஜான் ஹிகின்ஸ் - அவர் வெள்ளைக்காரர் என்பதால், பார்ப்பனர்கள் கோயிலுக்குள் நுழைய தடை விதித்தனர். இது தவிர, ‘பங்தி பேதா’ என்ற பெயரில் பார்ப்பனர்கள் மட்டுமே தனியே உணவருந்தும் ஜாதி வெறி இங்கே உண்டு. கிருஷ்ணா மடத்தில் தரைதளத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரசாத கூடத்தில் பார்ப்பனர்கள் மட்டுமே பிரசாதம் சாப்பிட முடியும். ஏனைய ஜாதியினர், பார்ப்பனர்களுடன் சேர்ந்து பிரசாதம் சாப்பிட அனுமதி கிடையாது; அவர்களுக்கு ‘முதல் தளத்தில்’ தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தெரியாமல் கடந்த ஏப். 15ஆம் தேதி மணிப்பால் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக உள்ள வனிதா ஷெட்டி, தனது சக பேராசிரியர்களுடன் தரை தளத்தில் பிரசாதம் சாப்பிட அமர்ந்தார். ‘பிரசாதம்’ பரிமாறுவதற்கு முன்பு பார்ப்பனர்கள், அவர்களை எழச் சொல்லி, முதல் தளத்துக்குப் போகுமாறும், இது ‘பிராமணருக்கு’ மட்டுமே உரிய இடம் என்றும் கூறி அவமதித்துள்ளனர். அவமானமடைந்த அந்தப் பெண் பேராசிரியர், தனது நண்பர்களோடு சாப்பிடாமலேயே திரும்பி விட்டார்.

இதற்கு முன் மும்பையிலிருந்து பார்ப்பனரல்லாத ஒரே சமூகத்தைச் சார்ந்த 30 பேர் இதே இடத்தில் ‘பிரசாதம்’ சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் பார்ப்பனர்கள் இல்லை என்பதை தெரிந்து, பார்ப்பன புரோகிதர்கள் பாதியிலேயே சாப்பிடுவதை நிறுத்தச் சொல்லியுள்ளனர் என்று தகவல்களை விவரிக்கிறது, இந்தக் கட்டுரை!

காங்கிரஸ் கட்சி நடத்திய ‘சேரன்மாதேவி’ குருகுலத்தில் இதேபோல், பார்ப்பன குழந்தைகளுக்கும் பார்ப்பனரல்லாத குழந்தைகளுக்கும் தனித்தனியாக சாப்பாடு போட்டதை எதிர்த்து அன்றைக்கு காங்கிரஸ் கட்சி செயலாளராக இருந்த தந்தை பெரியார், போர்க்கொடி உயர்த்தி குருகுலத்தை மூட வைத்தார். ‘சேரன் மாதேவி’கள் இப்போதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ‘இந்து’வில் கட்டுரை எழுதியுள்ள உச்சநீதிமன்ற வழக்கறிஞர், தீண்டாமை ஒழிப்புச் சட்டப் பிரிவுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார். அரசியல் சட்டத்தின் 25 ஆவது பிரிவு மத சுதந்திரத்தை வலியுறுத்தினாலும் அதன் 25(2) ஆவது உட்பிரிவு சமூக நலம் மற்றும் சமூக சீர்திருத்த நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சீர்திருத்த சட்டங்களுக்கு மத உரிமைகள் கட்டுப்பட்டுள்ளதையும், அதன்படி ஓர் இந்துக் கோயிலில் அனைத்துப் பிரிவினரும் வகுப்பினரும் வழிபடுவதற்கான உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

கருநாடக அரசின் இந்து நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைக்கான 1977 ஆம் ஆண்டு சட்டம், ‘பிரசாதம்’, ‘தீர்த்தம்’ வழங்குவதில் பாகுபாடுகாட்டுவதை தடை செய்துள்ளதோடு பழக்க வழக்கங்கள் என்ற பெயரிலோ, ‘இந்து’ சட்டங்களுக்கு புதிய அர்த்தங்களைக் கூறுவதன் வழியாகவோ இந்த ‘பாகுபாடு’களை பின்பற்ற முடியாது என்றும், கண்டிப்பாகக் கூறுகிறது. இப்படி ‘பாகுபாடு’ காட்டப்படும் கோயில்களின் நிர்வாகத்தை அரசே மேற்கொள்ளும் உரிமைகளையும் இந்தச் சட்டம் வழங்கியிருக்கிறது. தமது வாதத்துக்கு சான்றாக 1958இல் ‘வெங்கட்டரமனா தேவாரு’ வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பையும் கட்டுரையாளர் எடுத்துக் காட்டியுள்ளதோடு, பிற்படுத்தப்பட்ட குரும்பர் சமுதாயத்தைச் சார்ந்த முதல்வர் இதில் தலையிட்டு ‘தீண்டாமை’யை ஒழிக்க முன்வர வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார். உடுப்பி கிருஷ்ணன் கோயில் ‘பிராமணர்’களுக்கு கட்டுப்பட்டதும் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட இந்தியாவில் திருமண ஊர்வலங்களில் ஒடுக்கப்பட்ட ஜாதியைச் சேர்ந்த மாப்பிள்ளை குதிரையில் ஊர்வலமாக வருவதை உயர்சாதியினர், அது தங்கள் சாதிக்கான உரிமை என்ற அடிப்படையில் தடை செய்துள்ளனர். ராஜஸ்தானில் நத்துவாரா கோயிலுக்குள் நுழைவதற்கு அம்மாநிலத்தின் தலித் முதல்வரின் மனைவிக்கே உரிமை கிடையாதாம். தனது பிறவித் தீட்டைத் துடைப்பதற்கு துளசி மாலை அணிந்து கொண்டால்தான் அவருக்கு கோயிலில் நுழையவே பார்ப்பனர்கள் அனுமதிக்கிறார்கள், என்ற தகவல்களையும் கட்டுரையாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கர்நாடக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் இதை எதிர்த்து போராட்டம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

## கழகத் தோழர் கட்டிய வாஸ்து எதிர்ப்பு இல்லம்

4.5.2014 ஞாயிற்றுக் கிழமை அன்று சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஒன்றியம் கே.ஆர்.தோப்பூரில், மா.கணேசன்-கா.வசந்தி இணையர் புதிதாக கட்டியுள்ள பெருமாயி-மாரிமுத்து இல்லத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். வாஸ்துக்கு எதிராக கட்டப்பட்டு, சடங்குகள் இல்லாமல் நடைபெற்ற இந்த நிகழ்வில் அசைவ உணவு ஏற்பாடு செய்வதற்கு உறவினர்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். சைவ-அசைவ உணவுகள் தனித்தனியாக பரிமாறும் விதமாக இரண்டு இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் வந்திருந்த அனைவரும் அசைவ உணவைத் தான் உண்டார்கள். சைவ உணவு பரிமாறப்பட்ட இடத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் உள்பட யாரும் போகவில்லை. விழா மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.5000 நன்கொடை வழங்கினர்.



## ஆசிரியர் பி.கே. சின்னுசாமி படத்திறப்பு

பெரியார் பெருந்தொண்டர் பையூர் பி.கே. சின்னுசாமி ஆசிரியர் (65 வயது), 1.4.2014 அன்று சாலை விபத்தில் மரணம் அடைந்தார். அந்தப் பகுதியில் பெரியார் கொள்கைகளை அறிமுகப்படுத்தியும் பல்வேறு கிராம முன்னேற்றத்தை முன்னின்று செயல்படுத்தியவருமான பி.கே.சின்னுசாமியின் படத்திறப்பு, கிருஷ்ணகிரி மாவட்டம், கீழ்ப் பையூரில் உள்ள அவரது இல்லத்தில் 12.4.2014 சனிக்கிழமை அன்று மாலை 3 மணிக்கு நடைபெற்றது. கழக மாவட்டத் தலைவர் தி.குமார் வரவேற்புரையாற்றினார். திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.சி.கோவிந்தசாமி தலைமையேற்றார். படத்தினை திறந்து வைத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி இரங்கல் உரையாற்றினார். திருவள்ளுவர் மானுட ஒன்றியம் அற்புதம் அம்மாள், திராவிடர் கழக முன்னாள் மாவட்டச் செயலாளர் பெ.மதி மணியன், துணை வட்டாட்சியர் வே.இராசா முதலானோர் இரங்கல் உரையாற்றினர். மறைந்த பி.கே.சின்னுசாமி ஆசிரியரின் மகன் சி.புத்தன் நன்றி கூறினார்.

### நன்கொடை

விழுப்புரம் மாவட்டம் கடுவனூர் சாமிதுரை-சூர்யா இணையரின் மகன் ஏதுசாமி 3 ஆவது பிறந்த நாள் (3.5.2014) மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.500 நன்கொடை வழங்கினர்.


விழுப்பரம் மாவட்டம் நயினார் பாளையம் மதியழகன், கழக ஏட்டிற்கு ரூ.500 வழங்கினார்.

### பெயர் சூட்டல்

சேலம் மாவட்டம் நங்கவள்ளி மா.அருள்குமார்-செல்வி இணையரின் ஆண் குழந்தைக்கு, காமராஜ் என்று கழகத் தலைவர் பெயர் சூட்டினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 8th May 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | மே 15, 2014 | புரட்சி 13 | முழக்கம் 18 | விலை: ரூ.3.00


## ஈரோட்டில் எழுச்சியுடன் தொடங்கியது

# ஜாதி மத மறுப்பு இணையர் பாதுகாப்பு இயக்கம்

ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், ‘ஜாதி மத மறுப்பு இணையர் பாதுகாப்பு இயக்கம் “ தொடக்க விழா ஈரோடு பேருந்து நிலையம் அருகிலுள்ள ரீஜென்சி ஹோட்டலில், 11.5.2014 காலை 11 மணிக்கு நடைபெற்றது

- ஜாதி, மத மறுப்பு இணையருக்கு சட்டரீதியானப் பாதுகாப்பு வழங்குவது
- ஜாதி, மத மறுப்புத் திருமண இணையரின் திருமணத்தைப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யும்போது, ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய உதவுவது
- ஜாதி, மதமறுப்புத் திருமண இணையருக்கு வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வழிகாட்டுவது
- ஜாதி, மத மறுப்பு இணையரின் வாரிசுகளுக்கு “ஜாதியற்றோர்” என்ற பிரிவில் தனி இடஒதுக்கீடு வழங்கக் கேட்டு அரசை வலியுறுத்துவது
- மத மறுப்புத் திருமணங்களைப் பதிவு செய்ய, விண்ணப்பித்த 30 நாட்கள் கழித்தே பதிவு செய்யப்படும் என்ற விதி இருப்பதால், பதிவுக்குள் இணையருக்கு உறவினர்களிடமிருந்து பாதிப்பு ஏற்படுவற்கு உள்ள வாய்ப்பைத் தடுக்க, மதத்துக்குள் நடக்கும் திருமணங்களைப் போல உடனே திருமணத்தைப் பதிவு செய்யுமாறு விதிகளைத் திருத்த அரசை வலியுறுத்துவது
- கருந்திணை தயாரித்து வெளியிட்டுள்ள அகமண முறையினால் விளையும் தீங்குகளை விளக்கும் “ ஆவணப் படத்தை பரவலாகக் கிராமங்கள்தோறும் திரையிடுவது...

போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இந்த அமைப்பு.

இந்த அமைப்பின் தொடக்க விழாவுக்கு சசிக்குமார் தலைமை வகித்தார். செல்வராசு வரவேற்புரையாற்றினார். செல்லப்பன், சிவானந்தம், ஆகியோர் உரையாற்றினர். அமைப்பின் நோக்கங்கள் பற்றி கொமராபாளையம் கலைமதி விளக்கினார்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் ஜாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டு, தற்போது கழகத்தில் இணைந்து பணியாற்றிவரும் சென்னிமலைப் பகுதியைச் சார்ந்த ஜோதி ரவிக்குமார், தான் திருமணம் செய்யும் போது தனக்கு ஏற்பட்ட இடையூறுகளையும் அதனால் தான் பட்ட வேதனைகளையும், அப்போது இதுபோன்று ஆதரவான இயக்கங்கள் பற்றி தங்களுக்குத் தெரியாமல் இருந்ததையும் பற்றிக் கூறியதோடு, தாங்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தில் பெரியாரியலை ஏற்றுக் கொண்டு இணைந்த விதம் பற்றியும், இயக்கத்தில் இணைந்த பிறகு தனது கணவர் தன்னை ஒரு தோழமை உணர்வோடு நண்பர் போல நடத்துவதையும், இயக்கத் தோழர்களின் முயற்சியால் தனது பெற்றோருடன் தான் இப்போது சேர்ந்துள்ள விதம் பற்றியும் கூறி பெருமிதம் கொண்டார்.

குமராபாளையம் பகுதியைச் சார்ந்த ஜாதிமறுப்பு இணையர் கார்த்தி-சுசீலா ஆகியோர் இருவரும் தங்களது திருமண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

(4 ஆம் பக்கம்)

### ஜாதி மறுப்புத் திருமணம்

நிகழ்வின்போது மேட்டூர் காவலாண்டியூர்ப் பகுதியைச் சார்ந்த கோபால், சின்னத்தம்பி ஆகியோரின் மகன் தோழர் மணிகண்டனுக்கும், அதே பகுதியை சார்ந்த நாகராஜ் - விஜயா ஆகியோரின் மகள் அமுதாவுக்கும் ஜாதி மறுப்புத் திருமணம் கழகத் தலைவரால் தோழர்கள் வாழ்த்தொலி முழங்க நிறைவேற்றி வைக்கப்பட்டது.



திருமண இணையர் சார்பாக, கழகப் பரப்புரை வாகன நிதிக்கு ரூ.10,000/- மணவிழா மகிழ்வாக வழங்கப்பட்டது

### வினா – விடை!

✦ சமூகத்தில் நான் பிற்படுத்தப்பட்ட ஜாதியிலிருந்து வந்தவன். இதன் காரணமாக எனது வார்த்தையை தரம் தாழ்ந்த அரசியல் என்று கூறுகிறார்கள். – **மோடி**

ஆகவே, சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட ஜாதி, தாழ்த்தப்பட்ட ஜாதிகளை உருவாக்கிய இந்து மதத்தை வெறுத்து ஒதுக்கி மோடி தனது சுயமரியாதையைக் காப்பாற்ற உறுதி ஏற்பாராக!

✦ உச்சநீதிமன்றம் ‘ஜல்லிக் கட்டு’ தடை செய்துள்ளது குறித்து – கருத்து கூற விரும்பவில்லை. – **கி.வீரமணி**

நியாயமான பேச்சு. அது குறித்து காளைகள் தானே கருத்து கூற வேண்டும். அவைகளின் கருத்துரிமையை நாம் பறிப்பது நியாயம் அல்ல.

✦ உடுப்பி கிருஷ்ண மடத்தில் ‘பிராமணர்’களுக்கு தனி இடத்தில் சாப்பாடும் போடும் ‘பங்கி பேதா’ முறையை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம். – **செய்தி**

‘ஓசி’ சாப்பாடுன்னாலும் ‘ஆச்சாரத்தை’ விட்டுடப்படாது, ஓய்! புகாரி, அஞ்சப்பர், பொன்னுசாமி ஓட்டல்களிலும் ‘பிராமணர்’களுக்கு தனி இடம் கேட்டு ‘குல தர்மத்தை’க் காப்பாத்துங்கோ!

✦ அண்ணா உயிரியல் பூங்காவில் புதிதாகப் பிறந்த மூன்று புலிக் குட்டிகளுக்கு ஜெயலலிதா பெயர் சூட்டினார். – **செய்தி**

அய்யய்யோ, புலி குட்டிகளா? சுப்ரமணியசாமி இதை சும்மா விடமாட்டாரு! ஆட்சியை டிஸ்மிஸ் செய்யக் கோரி உச்சநீதிமன்றம் வரை போவாரு, பாருங்க!

✦ மோடி பேசிய மேடையில், ‘ராமன்’ படம்; தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டு நோட்டீஸ். – **செய்தி**

அது ‘ராமன்’ படம் இல்லைங்க; என்.டி.ராமாராவ் படம். ‘ராமன்’ காலத்துல கேமிராவே கிடையாதுங்க! சொன்னா கேளுங்க!

✦ பூரி ஜெகநாதன் ரதயாத்திரைக்கு தேர்களை தயாரிக்க ஆண்டுதோறும் 862 வகையான 1000 மரங்கள் வெட்டப்படுகின்றன. சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு. – **‘தினமணி’ செய்தி**

கைவசம் ஒரு யோசனை இருக்கு! தேர் மரம் தீட்டுப்படாமல் இருக்க தேரில் வரும் புரோகிதர்களே – இனி மரங்களை வெட்ட வேண்டும் என்று ஒரே ஒரு சட்டம் போட்டால் போதும்! முடிஞ்சுது பிரச்சினை!

✦ ‘முல்லைப் பெரியாறு’ அணையில் தமிழ் நாட்டுக்கு சாதகமாக தீர்ப்பு வர எந்த ஆட்சி காரணம்? கலைஞர்-ஜெயலலிதா, போட்டா போட்டி அறிக்கை! – **செய்தி**

போதும் நிறுத்துங்க! உங்க வழக்கை எல்லாம் உச்சநீதிமன்றம் கொண்டு போக முடியாது. இதைக் காட்டி, கேரளாக்காரன் மீண்டும் தடை வாங்கிடப் போறான்!

✦ செவ்வாய் கிரகத்துக்குப் போக 44 இந்தியர்கள் தேர்வு; அவர்கள் மீண்டும் பூமிக்கு திரும்ப மாட்டார்கள். –**செய்தி**

இந்தியர்களாக இருப்பதைவிட கிரகவாசிகளாக இருப்பதையே பெருமையாகக் கருதும் இந்த நல்ல மனிதர்களை வாழ்த்தி வழியனுப்புவோம்!

✦ தமிழக காங்கிரசின் ரூ.10,000 கோடி மதிப்பு சொத்துக்களை அகில இந்திய காங்கிரஸ் அறக்கட்டளையில் சேர்க்க மேலிடம் முயற்சி; தமிழக காங்கிரசார் கடும் எதிர்ப்பு. – **‘தினமலர்’ செய்தி**

விடக்கூடாது. எப்படி எடுக்கலாம்? தமிழர்களின் உரிமைப் பிரச்சினைன்னா, தொலைந்து போகட்டும்னு விட்டுவிடலாம்; சொத்துப் பிரச்சினைங்க... விட முடியாது!

✦ இந்தப் போராட்டத்தில் நான் தோற்றுப் போனால், எனது ‘கூஜா’ தயாராக இருக்கிறது. டீ விற்கக் கிளம்பிடுவேன். – **மோடி**

ஆத்திரத்துல வாய்க்கு வந்தபடி பேசிடாதீங்க மோடி. ஹெலிகாப்டரில் போய் டீ விற்றா, யார் வாங்குவா? சொல்லுங்க!

✦ தமிழர்களின் பாரம்பர்ய பெருமை கொண்ட விளையாட்டான ஜல்லிக்கட்டை – உச்சநீதி மன்றம் தடை செய்ததை ஏற்க முடியாது. – **தமிழக கட்சித் தலைவர்கள்**

போட்டிக்கோ, சண்டைக்கோ வராத ‘கால்நடை’களை அச்சுறுத்தி ஓட வைப்பதும், அதை – உடல் வலிமையைக் காட்டி மனிதர்கள் அடக்கி, ஒடுக்கி வைப்பதும்தான் தமிழர்கள் பெருமைப்படக்கூடிய பாரம்பர்யமோ?

✦ கூடங்குளம் அணுஉலை பாதுகாப்புக்காக தனியாக குழு எதையும் நியமிக்கத் தேவை இல்லை. – **உச்சநீதிமன்றம்**

அணுஉலைகளே பாதுகாப்பைக் கவனித்துக் கொள்ளும்போல!

தலையங்கம்

## கால்டுவெல் தந்த கருத்தியல் (1814–2014)

1814ஆம் ஆண்டில் அயர்லாந்து நாட்டில் பிறந்த இராபர்ட் கால்டுவெல், 200 ஆம் ஆண்டுகளில் நினைவு கூரப்படுகிறார். மதம் பரப்புவதற்குத்தான் அவர் இந்தியா வந்தார். ஆனால், அவரது தொண்டு திராவிட மொழிகளின் ஆய்வுகளை நோக்கித் திரும்பியது. 'திராவிடம்', 'திராவிட இயல்' என்ற கருத்தியலை தனது ஆய்வு மூலம் நிறுவிக் காட்டிய பெருமைக்குரியவர் கால்டுவெல்!

கால்டுவெல்லுக்கு முன்பு பிரிட்டிஷ் புலமையாளர்கள் பலரும் 'இந்தியா' எனும் நிலப் பகுதி மக்கள், 'இந்தோ–ஆரிய' மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்றும், இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளும் சமஸ்கிருதத்திலிருந்தே உருவானவை என்றும் தங்கள் கருத்துகளை முன் வைத்தனர்.

வில்லியம் ஜோன்ஸ், ஹீம் போல்ட் போன்ற "புலமையாளர்கள்" சமஸ்கிருதத்தையும், அதன் பார்ப்பன பண்பாட்டையும் உயர்த்திப் பிடித்தனர். ஆரியப் பார்ப்பனர்கள், அய்ரோப்பிய பண்பாட்டுடன் தங்களை இணைத்து பெருமை பாராட்டிய காலத்தில், கால்டுவெல் முன் வைத்த 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வு' – ஆரிய மொழிக் குடும்பம் வேறு, திராவிட மொழிக் குடும்பம் வேறு என்பதை உறுதிப்பட நிலைநாட்டியது.

'திராவிட'மான தென்னகத்தில் பல் மொழி பேசும் இனத்தையும் மொழியையும் ஆய்வுக்கே எடுத்துக் கொள்ளாத காலகட்டம் அது. இந்தப் புரட்டைத் தகர்த்து பிரான்சிஸ் வைட் எல்லீஸ், ஏ.டி. காம்பெல், தாமஸ் ட்ரவுமன் போன்ற புலமையாளர்கள் தென்னக மொழிக் குடும்பத்தின் தனித்துவத்தை முதன்முறையாக வெளிக் கொண்டு வந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து அன்ட்ரிக் அடிகள், இராபர்ட் டி. நொபிலி, வீரமா முனிவர், சீகன்பால்கு போன்ற புலமையாளர்கள் தமிழ்மொழி குறித்து வெளிப்படுத்திய சிந்தனைகள் உருவாக்கிய வெளிச்ச பின்புலத்தில் கால்டுவெல் 1838இல் சென்னைக்கு வருகிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மொழிகளைக் கற்று கால் நடையாகவே தமிழகத்தைச் சுற்றி மக்களின் வாழ்க்கைக் கூறுகளை ஆய்ந்தார். நெல்லை மாவட்டம் இடையான் குடியில் நிரந்தரமாகத் தங்கி, மதப் பணிகளைத் தொடர்ந்தார். உடல்நலப் பாதிப்பால் 1854இல் மீண்டும் அயர்லாந்து திரும்பி, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலை எழுதி முடித்து 1856 இல் லண்டன் நகரத்தில் அச்சிட்டு வெளியிட்டார்.

இந்த முதற் பதிப்பை மேலும் விரிவாக்கி, 1875இல் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு உள்ளிட்ட 22 மொழிகளை திராவிட மொழிக் குடும்பம் என்று அழைத்ததோடு, அம்மொழிக் குடும்பத்தில் மூத்தது, தமிழ் என்று வரையறுத்தார்.

ஆரிய, சமஸ்கிருத பார்ப்பன மொழி பண்பாட்டுக்கு நேர் எதிரான 'திராவிடம்' – 'திராவிடர்' என்ற கருத்தாக்கம் வேர் பிடித்து, இனஉரிமைக்கான சிந்தனைகள் முகிழ்விடத் தொடங்கியதற்கு கால்டுவெல் ஆய்வு அடித்தள மிட்டது என்று கூறலாம்.

மொழி ஆய்வையும் தாண்டி, தமிழ் இலக்கிய உருவாக்கப் போக்குகளில் சமூகப் பார்வையை அவர் முன் வைத்தார். இது மிகவும் முக்கியமானது. பார்ப்பனிய எதிர்ப்புகளி லிருந்து தமிழ் இலக்கியம் உருவாக்கம் பெற்றதையும், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களான "பறையர்", "சாணார்" குறித்த சமூக நிலையையும் இந்து மதம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இருப்பதையும் கால்டுவெல் சுட்டிக்காட்டத் தவறவில்லை. 1913இல் அவரது ஒப்பிலக்கண நூலை பாடத் திட்டமாக ஏற்ற சென்னை பல்கலைக்கழகம், அவரின் இந்த பார்ப்பனிய ஜாதி எதிர்ப்பு கருத்துகளை நீக்கி விட்டது. தமிழ் மரபாக சைவத்தை முன்னிறுத்திய சைவர்கள், வடமொழி எதிர்ப்பை மட்டும் எடுத்தாண்டனர். கால்டுவெல் எடுத்துக் காட்டிய பார்ப்பனிய இந்துமத ஜாதி ஒடுக்குமுறைகளோடு சமஸ்கிருதப் பண்பாட்டை எதிர்த்து நின்றது – அச்சூழலில் பெரியாரின் சுயமரியாதை இயக்கம்தான் என்று நெஞ்சு நிமிர்த்தி கூற முடியும்.

'திராவிட' எதிர்ப்பாளர்கள் பலரும் இப்போதும் திராவிட மொழி வழி அடிப்படையிலான முரண்பாடுகளை மட்டுமே முன்னிறுத்துகிறார்கள்.

பெரியாரியலுக்கு அதில் மாறுபாடு இல்லை. ஆனாலும், பார்ப்பனிய–சமஸ்கிருத பண்பாடு வலியுறுத்தும் ஒடுக்கு முறைக்கு எதிரான குறியீடாக 'திராவிட'த்தை அவர்கள் பார்க்க மறுக்கிறார்கள்.

மொழியியலை – சமூகப் பார்வையோடு இணைத்து ஆய்ந்தவர் என்ற பார்வையில் கால்டுவெல்லை நன்றியோடு நினைவு கூர்வோம்!

## 'அகமண முறை' பாதிப்புகளை விளக்கிடும் 'தீவரைவு' ஆவணப்படம் திரையீடு





கருந்திணை தயாரிப்பில் தோழர் பூங்குழலி இயக்கத்தில் உருவான "தீவரைவு" ஆவணப் படத்தின் திரையிடல் கடந்த 9-05-2014, வெள்ளிக் கிழமை மாலை 6.30 மணிக்கு, சென்னை பனுவல் புத்தகக் கடை அரங்கில் நடைபெற்றது.

நமது பண்பாட்டில் உறவுகளை நிலை நிறுத்துவதற்கும், புதிய உறவுகளை உருவாக்கு வதற்கும் திருமணம் ஒரு முக்கிய களமாக இருக் கிறது. இந்த திருமணமுறையானது உறவுகளை மட்டுமல்ல, ஜாதியையும் நிலைநிறுத்தி வருகிறது. பல நூற்றாண்டுகளாக ஜாதிக்குள் நாம் ஏற்படுத்திக்கொள்ளும் மண உறவுகள், சமுதாயத்தில் உடல் ஊனம், மன ஊனம், மருத்துவ ஊனங்களை அதிகமாக்கி வருகிறது.

தொடர்ச்சியாக ஜாதிக்குள் நடைபெற்று வரும் திருமண முறையால், உருவாகும் அடுத்தத் தலைமுறை, உளவியல், உடலியல் ரீதியாக எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதை மருத்துவ, மரபணு மற்றும் மானுடவியல் அறிஞர்களின் மூலம் விளக்குகிறது இந்த ஆவணப்படம்.

கருந்திணையும் பனுவலும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இத்திரையிடல் நிகழ்வில் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் துணைத் தலைவரும், இந்த ஆவணப் படத்தில் பங்கேற்று கருத்து உரைத்தவருமான தீபக், வேலூர் பேராசிரியர் அய். இளங்கோவன், பேராசிரியர் சரசுவதி, இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலத் துணைச் செயலாளர் மகேந்திரன், 'தீக்கதிர்' ஆசிரியர் குமரேசன், 'தலித் முரசு' ஆசிரியர் புனிதபாண்டியன், கவிஞர் தமிழச்சி தங்க பாண்டியன், ஊடகவியலாளர்கள் கவிதா முரளிதரன், டி.எஸ்.எஸ். மணி, விகடன் செந்தில், நடிகை ரோகிணி, நாடக இயக்குநர்கள் பிரசன்னா, சிரீஜித், சேவ் தமிழ்ஸ் இயக்கத்தின் செந்தில், இளைஞர் பெருமன்றத் தலைவர் திருமலை, மாணவர்கள் இயக்கத்தின் தினேஷ், ஜோ பிரிட்டோ, வழக்கறிஞர் கயல், திருமலை மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தபசி குமரன் மற்றும் தோழர்களும் சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

திரையிடல் முடிந்ததும் படத்திற்கு ஒளிப்பதிவு செய்த திண்டுக்கல் பீட்டர், உதவி செய்த மேட்டூர் பாலு, எடிட்டிங் செய்த ராஜா, ஒருங்கிணைப்பு செய்த தி. தாமரைக்கண்ணன் ஆகியோர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். பின்னர் வந்திருந்தவர்கள் தங்கள் கருத்தினை பரிமாறிக் கொண்டனர். வந்திருந்தவர்களின் சந்தேகங்களுக்கு இப்படத்தில் பங்கெடுத்த மரபணு ஆராய்ச்சியாளர் டாக்டர் அரவிந்த் இராமநாதன் விளக்கங்கள் அளித்தார்.

தீபக், தமிழகமெங்கும் நடக்கும் மாற்றுத் திறனாளிகள் சுயம்வரத்தில் முதலில் இப் படத்தைப் போடப் போவதாகவும் இது மாற்றுத் திறனாளிகளுக்கு கிடைத்திருக்கும் ஆயுதம் என்றும் பதிவு செய்தார்.

அனைவருமே இப்படம் காலத்திற்கு தேவை யானது என்பதை கூறி, இதனை பரப்புவதற்கு தங்களால் ஆன அனைத்தையும் செய்வதாக உறுதி கூறினர்.

## வெளிநாடுகளுக்கு ஓடும் பார்ப்பன அதிகார வர்க்கம்!

டெல்லியில் அதிகார மய்யங்களில் அதிகார சக்திகளாக செயல்பட்ட பார்ப்பன உயர்ஜாதி அதிகாரக் கும்பல், ஆட்சி மாற்றம் வரப் போவதை உணர்ந்து, உலக வங்கி, சர்வதேச நிதியம், வெளிநாட்டுத் தூதரகங்களில் தங்கள் பதவியை உறுதி செய்து கொண்டுள்ளன. அதற்கான முயற்சிகளைத் தொடங்கி விட்டார்கள். இது குறித்து 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (மே 9, 2014) வெளியிட்டுள்ள செய்தி:

மத்திய அமைச்சகங்கள் இப்போது வெறிச்சோடிக் காணப்படுகின்றன. உயர் அதிகாரப் பொறுப்பில் இருந்தவர்கள், கூடு தாவும் பறவைகளாகி விட்டனர். உதாரணமாக, பிரதமரின் தனிச் செயலாளராக இருந்த இந்து சேகர் சதுர்வேதி, இப்போது வாஷிங்டனில் அய்.எம்.எப். எனும் சர்வதேச நிதியத்தில் ஆலோசகர் பதவிக்குப் போய்விட்டார். அன்னிய முதலீட்டு ஆலோசனை துறையின் கூடுதல் செயலாளராக இருந்த அஞ்சலி பிரசாத், ஜெனிவாவில் உள்ள உலக வர்த்தக நிறுவனத்தின் தூதர் பதவிக்குப் போய்விட்டார். அரசாங்கத்தின் தலைமைச் செய்தி தொடர்பாளராக இருந்த நீலம் கபூர், லண்டனில் உள்ள நேரு மய்யத்தில் முக்கிய பதவியை ஏற்கிறார். மத்திய அமைச்சர் ஆனந்த் சர்மாவின் தனிச் செயலாளர் அஷிஷ் குந்ரா லண்டனிலுள்ள இந்திய தூதரகத்துக்கு போகிறார். அதே அமைச்சரிடம் 'சிறப்புப் பணி'க்கான அதிகாரியாக இருந்த அயூஷ்மணி திவாரி, பிரஸ்ஸலில் உள்ள இந்திய தூதரகத்துக்கும் ப.சிதம்பரம் அமைச்சகத்தில் சிறப்பு அதிகாரியாக இருந்த விஜய்சிங் சவுகான், வாஷிங்டனில் உள்ள உலக வங்கியின் நிர்வாக இயக்குனராகவும் பதவி ஏற்கவிருக்கிறார்கள்.

2009 ஆம் ஆண்டிலும் மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்கு வராது என்று நம்பி, பல அதிகாரிகள் வேறு உயர் அதிகாரப் பதவிக்கு பறந்து விட்டார்கள். அப்போது பிரதமர் அலுவலக செயலாளராக இருந்த புலோக் சட்டர்ஜி, வாஷிங்டனில் உலக வங்கி நிர்வாக இயக்குனராகிவிட்டார். அதேபோல் பிரதமர் மன்மோகன் சிங் அலுவலகத்தில் அதிகாரியாக இருந்த டி.பி.எஸ். சந்து, வாஷிங்டனில் வேறு பதவிக்கு பறந்து விட்டார். வாஜ்பாய் ஆட்சி ஒரு ஓட்டு வித்தியாசத்தில் கவிழ்ந்தபோது அவரது நம்பிக்கைக்கு உரியவராக இருந்த சக்திசின்கா எனும் அதிகாரி உலக வங்கியில் உயர் பொறுப்புக்கு ஓடி விட்டார். அதேபோல், மத்திய அமைச்சர்களும் அதிகாரிகளுக்கு நட்சத்திர ஓட்டல்களில் விருந்து வைத்து விடை பெறும் நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

ஆட்சி மாற்றம் வரும் என்று நம்பி, வெளிநாடுகளுக்கு ஓடும் இந்த பார்ப்பன உயர்ஜாதி அதிகார வர்க்கத்துக்கு உலக வங்கி, சர்வதேச நிதியம் மற்றும் தூதரகங்கள் கதவைத் திறந்து வைத்துக் காத்திருக்கின்றன என்பது கவனிக்கத் தக்கது.

# நாகம்மையார் மறைவும் பெரியார் நடத்திய தடையை மீறிய திருமணமும்

*பெரியாரின் வாழ்க்கைத் துணையாகவும் அவரது காங்கிரஸ் கால போராட்டங்களான கள்ளுக்கடை மறியல், வைக்கம் போராட்டம் ஆகியவற்றில் ஏராளமான பெண்களையும் உடன் இணைத்துக் கொண்டு வீதியில் இறங்கி ஆவேசமாகப் போராடிய கொள்கைத் துணையாகவும் விளங்கியவர் நாகம்மையார்.*

*பெரியாரின் சுயமரியாதை இயக்கக் காலகட்டத்திலும் சுயமரியாதை இயக்கத் தோழர்களுக்கு உணவும், உபசரிப்பும் கொடுத்துப் பேணிய தாயாகவும், பல சுயமரியாதை, சாதிமறுப்பு, மறுமணங்களை முன்னின்றும், தலைமையேற்றும் நடத்தியும் பெரியாருக்கு கொள்கைத் துணைவராக விளங்கியவர் அவர்.*

*அவர் 11-5-1933 அன்று இறந்து போனார். அதற்கு அடுத்த நாளே திருச்சிக்கு புறப்பட்டுப் போய், 144 தடை உத்திரவையும் மீறி, கிருத்துவர்களின் சுயமரியாதை திருமணத்தை நடத்தி வைத்தார். அதற்காக கைது செய்யப்பட்டாலும், இரவு 11 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார் என்று பெரியாரின் வாழ்க்கை குறிப்புகள் நமக்கு கூறுகின்றன.*


*அவ்வாறு பெரியார் தலைமையில் மணம் முடித்துக் கொண்ட அந்த கிருத்துவ இளைஞர் எம்.ஏ.சவுந்திர ராஜன். 46 ஆண்டுகள் கழித்து 27-5-1979 இல் பெரியார் நூற்றாண்டின்போது, அந்த செய்திகளை நினைவுகூர்ந்து அவர் எழுதி வைத்திருந்த ஒரு பதிவையும், அவரது தந்தையார் அச்சிட்ட திருமண அழைப்பிதழையும் அவர்கள் திருமணம் குறித்து* "Self Respect Marriages – Are they valid in Law ?" *என்ற தலைப்பிட்டு பெரியாரின் நண்பரும் வைக்கம் போராட்ட வீரரும், பாரிஸ்டருமான ஜார்ஜ் ஜோசப் ஒரு ஆங்கில நாளேட்டில் மணமக்களின் புகைப்படத்தோடு, எழுதியிருந்த கட்டுரை வெளிவந்திருந்த நாளேட்டையும் அவரது குடும்பத்தினர் கழகத் தலைவரிடம் ஒப்படைத்துள்ளனர். எம்.ஏ. சவுந்தர ராஜன் எழுதியுள்ள அப்பதிவில் சில சொற்றொடர்கள் முற்று பெறாமலும், பொருள் குழப்பத்தோடும் இருப்பினும் அதை அப்படியே வெளியிடுகின்றோம்.*

தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசில் நடக்கும் அக்கிரமங்களையும், ஜாதிக் கொடுமைகளையும் பார்த்து சகிக்காமல் அதிலிருந்து விலகி சுமார் 50 வருடத்திற்கு முன்பு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதன் முக்கிய கருத்து தீண்டாமை ஒழிப்பு, மதங்களில் நடக்கும் ஊழல்களை எடுத்து பேசிவந்தார்கள். அக்காலத்தில், ஜாதி வெறிபிடித்தவர்களும் மத பற்றுள்ளவர்களும் சுயமரியாதை இயக்கத்தை நசுக்கப் பார்த்தார்கள். சுயமரியாதை கூட்டங்கள் நடக்கும் இடங்களிலெல்லாம் கலாட்டாவும், கல்லடியும் சாணி அடியும் நடந்துவந்தது. அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களாகிய நாம் பண்டை காலம் தொட்டு குருமார்களாலும், கன்னியர்களாலும், ஜாதி கிறிஸ்தவர்களாலும் கோவில்களில் கிராதி வைத்துக்கொண்டு மேல்ஜாதி கிறிஸ்தவர்களுக்கு தனி இடமும், பள்ளு பறையர்களுக்கு தனியிடமும் தெய்வ சன்னிதியில் நடந்து வந்தது. நம் முன்னோர்களும் எவ்வளவோ பாடு பட்டும் முடியவில்லை. பெரியாருடைய பேச்சு நம் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு வெகு பிடித்தமாக இருக்கவே 100 க்கு 90 பேர் அவரை வரவேற்று பின்பற்றத் தொடங்கினார்கள். எங்கு கூட்டம் நடந்தாலும் நம் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் தக்க பாதுகாப்புடன் உயிரையும் கொடுக்க தயாராக இருந்தார்கள். நம்முடைய ஒத்துழைப்புக் கண்டு கிறிஸ்து மதங்களில் குருமார்களாலும், கன்னியர்களாலும் நடக்கும் கொடுமைகளை, மேடைகளிலும், பத்திரிகைகளிலும் பேசியும் எழுதியும் வந்தார். சிலர் இஸ்லாம் மதத்தை பின்பற்ற துவங்கினார்கள், சிலர் கோவிலில் தாலிக் கட்டாமல் ரிஜிஸ்டர் திருமணங்கள் செய்து பார்த்தோம் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களாகிய எங்களை திரும்பி கூட பார்ப்பதில்லை. கிறிஸ்து மதத்தில் ஒருவன் பிறந்து ஞான ஸ்நானம் கொடுப்பதிலிருந்து அவனை கல்லறையில் கொண்டு வைக்கும் வரை ஜாதி வித்தியாசம்.

பெரியார் கூட்டமென்றால் எங்கு நடந்தாலும் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களாகிய நாங்கள் அதை திருவிழா கோலமாக நடத்தி வந்தோம். பிறகு சுயமரியாதை இயக்கத்தில் எல்லா மக்களும் பங்கு கொண்டு மகாநாடுகளும், கூட்டங்களும் நடத்தி வந்தார்கள். தாழ்ந்து கிடந்த ஒவ்வொருவனுக்கும் மனிதன் என்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அது சமயம் எனக்கு திருமண ஏற்பாடுகள் நடந்தது. அதாவது எனது சொந்த தாய்மாமன் மகளையே என் பெற்றோர் முடிவு செய்தார்கள். என் மாமன் சுயமரியாதை இயக்கத்தில் அதிதீவிரவாதி. நாங்கள் குருமாரிடம் போய், எங்கள் திருமணம் நடு ஹாலில் நாற்காலி போட்டு நடத்தவேண்டுமென்று கேட்டோம்; அது முடியாது என்று சொல்லி விட்டார்கள். உடனே பெரியாரிடம் போய் எங்கள் பிள்ளைகளுக்கு சுயமரியாதை திருமணம் செய்ய வேண்டும், எங்கள் குருமார்கள் ஜாதி கிறிஸ்தவர்களுக்கு ஒரு மாதிரியும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு மாதிரியும் நடத்திவருகிறார்கள் என்ற காரணங்களை எடுத்துச் சொல்லவே பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி எடுத்துக்கொண்டு ஒப்புக் கொண்டார்கள்.

கல்யாண பத்திரிகையில் 1933 ஆம் வருடம் மே மாதம் 14 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை ராகுகாலம் 4½ லிருந்து 6 மணிக்குள் திருச்சி தேவர் மன்றத்தில் சுயமரியாதை கத்தோலிக்க திருமணம் பெரியார் முன்னிலையில் நடைபெறும் என்று போட்டு இருந்தோம்; குடி அரசு பத்திரிகையிலும் வெளிவந்து இருந்தது. அப்பொழுது வெள்ளையர் ஆட்சியாயிருந்தபடியால், குருமார்களுக்கு சாதகமாக இருந்தது. எப்படியும் இந்தத் திருமணத்தை நடக்க ஒட்டாமல்


திருமண அழைப்பு.

தோழர்! நாளிது 14—5—33-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு திருச்சி பாலக்கரை பருப்புக்கார தெரு 10-ம் நெம்பர் இல்லத்தில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில்


| | |
|---|---|
| திருச்சி பாலக்கரை தோழர் M. A. சௌந்தரராஜனுக்கும், | திருச்சி பாலக்கரை தோழர் S. A. மேரிக்கும், |

சுயமரியாதை முறைப்படி மண உடன்படிக்கை நிகழும். அதுசமயம் பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். அவ்வமயம் தோழர்களுடன் வரவேண்டுகிறோம்.

ச. ம. சி. பரமசிவம், தங்கள்,
என். ஆரோக்கியசாமி, டி. வி. சோமசுந்தரம் B. A., B. L.,
காரியதரிசிகள், தலைவர்

தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம்,
உறையூர் திருச்சி.

**('குடிஅரசு' இதழில் வெளிவந்த திருமண அழைப்பு)**


Mr. M. Arokiasamy
S. I. Ry. GUARD,
PALAKARAI, TRICHINOPOLY.
Presents his best Compliments to and invites
M. R. Ry. ____________ Avl.
with family and friends at the marriage of his son
MR. M. A. SOUNDARARAJAN
with
MISS. S. A. MARY
daughter of
MR. S. ANTONISAMY, Fuel Store Keeper, TANJORE.
on Sunday the 14th May 1933 at 5 p. m.
at the Municipal Public Hall. Trichy.

**(திருமண அழைப்பிதழ்)**

ஏற்பாடுகள் செய்து வந்தார்கள். அது சமயம் எங்கள் கல்யாணத்திற்கு முன் இரண்டு நாட்கள் இருக்குமென்று நினைக்கிறேன், பெரியாரின் அருமை பத்தினி நாகம்மை இறந்துவிட்டார்கள். தமிழ்நாடே துக்கத்தில் ஆழ்ந்து இருந்தார்கள். எங்கள் வீட்டில் யாவரும், பெரியார் வரமுடியாத நிலைக்கு ஆளாகி விட்டார் என்று கவலையோடு இருந்தோம். எப்படியும் நாளை வந்துவிடுவேன் என்று தந்தி எங்களுக்கு பெரியார் கொடுத்து அதைபோல் வந்த உத்தமர்.

13 ஆம் தேதி சனிக்கிழமை இரவு புறப்பட்டு நீலாவதி அம்மையார் வீட்டில் இறங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது. ஞாயிற்றுக்கிழமை 14 ஆம் தேதி பிற்பகல் எங்கள் வீட்டில் யாவரும் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டு இருந்தோம்.


குருமார்களை எதிர்த்து திருமணம் செய்யப் போவதால் பிற்பகல் இரண்டு மணிக்கே பொது ஜனங்கள் மேல புலிவலம் ரோட்டில் லட்சகணக்கில் கூடி விட்டார்கள். இது தான் முதல் சுயமரியாதை கிறிஸ்துவ திருமணம். பொது ஜனங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது Reserve Police வந்து தேவர் ஹாலுக்குள் பொது ஜனங்கள் நுழையாவண்ணம் முற்றுகையிட்டு விரட்டிக் கொண்டு இருந்தார்கள். இவ்விஷயம் பெரியாருக்கு தெரிந்ததும் தோழர் பிரான்சிசை, தேவர் ஹாலுக்கு அனுப்பி பொது ஜனங்களுக்கு நீலாவதி அம்மையார் வீட்டில் திருமணம் நடப்பதாக அறிவிக்கும்படி சொல்லச் சொல்லி காரை எடுத்துக் கொண்டு 4½ மணிக்கெல்லாம் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார். அவர் முன்னிலையில் நாங்கள் மோதிரம் மாற்றி திருமணம் இனிது முடிந்தது.

பொது ஜனங்களும், போலீசும் நீலாவதி அம்மையார் வீட்டிற்கு போய் அங்கு யாரும் இல்லாததைக் கண்டு எங்கள் வீட்டிற்கு (4, அந்தோனியார் தெரு, பாலக்கரை, திருச்சி) வந்தார்கள். அப்பொழுது மணி 6½ இருக்கும். போலீஸ் சர்க்கில், சப் இன்ஸ்பெக்டர்கள், பெரிய பெரிய ஆபீஸர்களெல்லாம் எங்கள் வீட்டு மாடிக்கு வந்து, பெரியாரையும் மணமக்களையும், எங்கள் தாய் தந்தையையும் அரெஸ்ட் செய்கிறோம் என்றார்கள். அதற்கு பெரியார் எந்த உத்தரவின் படி என்று கேட்டார்கள். உடனே சர்கிள் Obey the Law and Order அதற்கு Yes I Will Obey என்று கீழ் இறங்கி போலீஸ் படை சூழ பொது ஜனங்கள் மத்தியில் கொட்டும் மழையில் பாலக்கரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து செல்லப்பட்டோம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கொட்டும் மழையையும் சட்டை பண்ணாமல் வெளியில் நின்று கொண்டு இருந்தார்கள். அப்பொழுது சுவாமிமார்கள் தரப்பில் து. ரெத்தினசாமி வக்கீல் பெரியாரை ஆங்கிலத்தில் கேள்விக் கேட்டுக்கொண்டு இருந்தார். பெரியாரும் ஆங்கிலத்திலேயே பதில் சொல்லி வந்தார். அப்பொழுது வக்கீல் கேட்டார் Are You Solemnising the Marriage? இதற்கு பெரியார் What is the meaning of Solemnising? சரி நான் தமிழிலேயே பதில் சொல்லுகிறேன் என்று சொல்லி தமிழில் பேசினார், அவர் சொன்னதின் முக்கிய கருத்து எனக்கு திருமண பத்திரிகை வந்தது, என் தலைமையில் நடத்துவதாக பார்த்தேன், என் முன்னிலையில் பெண்ணும் பிள்ளையும் மோதிரம் மாற்றிக்கொண்டார்கள். இதற்கு சாட்சியாக இருந்தேன்,

உடனே என் தாயார் நாயிலும் கேடாக கோவிலில் எங்களை மதிக்கிறார்கள் அவர்களுக்கு அறிவு புகட்டவே இப்படி செய்ய வேண்டியதாயிற்று, இதை சர்கார் கேட்டு நியாயம் வழங்க இருக்க, இப்படி நீங்கள் செய்வது நியாயமா?, திருடவில்லை சர்க்காருக்கு விரோதமா என்ன செய்தோம் அம்மா, நீங்க சும்மா இருங்களென்று அடக்கிவிட்டார்கள். பிறகு எங்களை பெரியார் தாலி எடுத்துக் கொடுத்தார் என்று ஒவ்வொன்றுக்கும் நடந்த உண்மையை அப்படியே கூறினோம்.

பிறகு இரவு 11 மணிக்கு வெளியில் வந்ததும் பொதுஜனங்கள் பெரியார் வாழ்க, சவுந்தரராஜன் மேரி வாழ்க என்று கோஷமிட்டனர் வீடு வந்து சேர்ந்தோம். பிறகு ஒருவாரம் கழித்து எங்கள் வீட்டிற்கு வந்தார். அவரிடம் சுவாமிமார்கள் Canon - Law பிரகாரம் (பைபிள் அடிப்படையிலான மதச் சட்டம்) எங்களை நாடு கடத்துவோம் என்கிறார்களே, கலியாணத்தை நடத்விடாமல் செய்துவிட்டார்களே என்று கேட்டதற்கு, உங்கள் திருமணம் போட்டோ உள்பட லண்டன், அமெரிக்கா வெளிநாடெல்லாம் போய்விட்டது,

எல்லோரும் காறி துப்புகிறார்கள், இவர்கள் இதில் முட்டாள்தனமாக இறங்கி விட்டார்கள். இவ்விஷயம் கிராமத்து மக்களும், மற்றவர்களும் மதம் மாறினார்கள், பெரியாரை கேட்டதற்கு இதை விட இந்துகளாக மாறினால் பிற்காலத்தில் உங்களுக்கு நன்மையாயிருக்குமென்று சொல்லி வந்தார். இத்துடன் முடிக்கிறேன்.



M.A.Soundharajan
*27-05-1979*

*இவை தொடர்பான மேலதிகமான செய்திகள் அடுத்த இதழில் வெளிவரும்.*

DATE OF PUBLICATION 14.05.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# காந்தி தேசத்தில் மோடியின் 'தீண்டாமை'

குஜராத்தில் 'நவஸ்ராஜன்' என்ற சமூகத் தொண்டு நிறுவனத்தை நடத்தி வருபவர் மார்ட்டின் மக்வான். 2001 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் அய்.நா.வின் இன வெறி எதிர்ப்பு மாநாடு நடந்தது. ஜாதிப் பாகுபாட்டையும் இனப் பாகுபாடாக அய்.நா. ஏற்கக் கோரி இந்தியாவிலிருந்து பங்கேற்ற 200க்கும் மேற்பட்ட அமைப்புகள் வலியுறுத்தி, அதற்கு ஆதரவாக உலக நாடுகளில் கருத்துகளை உருவாக்கின.

இந்தியாவிலிருந்து பங்கேற்கச் சென்ற மனித உரிமை அமைப்புகளின் கூட்டியக்கத்துக்கு தலைவராக செயல்பட்டவர் மார்ட்டின் மக்வான். குஜராத்தில் மனித மலத்தை கைகளாலேயே 'தீண்டப் படாத' மக்கள் துடைத்துக் கழுவும் அவலத்தை படமாக்கி, அவர் சர்வதேச பிரதிநிதிகளிடம் போட்டுக் காட்டியபோது - அது அதிர்ச்சி அலைகளை உருவாக்கிற்று. கடந்த 2007 ஆம் ஆண்டு குஜராத்தில் நிலவும் மிக மோசமான தீண்டாமை கொடுமைகள் பற்றி விரிவான ஆய்வு ஒன்றை மக்வான் மேற் கொண்டார். பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் கொண்ட உலக நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு குஜராத்தில் 1589 கிராமங்களைத் தேர்வு செய்து, 2 ஆண்டுகாலம், விரிவான ஆய்வுகளை நடத்தி, அறிக்கையைத் தயாரித்தது. அதன்படி குஜராத்தில் நிலவும் மோசமான தீண்டாமைக் கொடுமைகள் புள்ளி விவரத்துடன் பட்டியலிடப்பட்டன.

அதன் விவரம்:

- ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 98.4 சதவீத கிராமங்களில் வெவ்வேறு ஜாதிகளுக்கிடையே திருமணம் தடை செய்யப்பட்டுள்ளது. மீறி திருமணம் செய்தவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி, ஊரை விட்டே வெளியேறுகிறார்கள்.
- 98.1 சதவீத கிராமங்களில் தலித் அல்லாத மக்கள் குடியிருப்புப் பகுதியில் தலித் மக்களுக்கு வாடகைக்கு வீடு எடுக்க முடியாது.
- 97.6 சதவீத கிராமங்களில் தலித் மக்கள், தலித் அல்லாதவர்களின் குடிநீர் பானையையோ பாத்திரங்களைதேயா தொட்டால் தீட்டாகிவிடும் என்று கருதுகிறார்கள்.
- 67 சதவீத கிராமங்களில் தலித் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு டீக்கடைகளில் டீ வழங்குவதில்லை. அப்படியே வழங்கினாலும் தனிக் குவளையில்தான்! (மோடி தேநீர் விற்ற காலத்திலிருந்து இதுதான் நிலைமைபோல)
- 56 சதவீத கிராமங்களில் டீக்கடைகளில் தலித் மக்களுக்கு 'தனிக் குவளை'தான். அவர்களே அதைக் கழுவி வைக்க வேண்டும். இதற்கு 'ராமன் குவளை' என்று பெயர்.
- 53 சதவீத கிராமங்களில் மதிய உணவுத் திட்டத்தில் தலித் குழந்தைகளுக்கு தனி இடத்தில் உட்கார வைத்து உணவு தரப்படுகிறது. உணவுக்குப் பிறகு அவர்கள் தண்ணீர் குடிப்பதற்கு வீட்டுக்குத்தான் போக வேண்டும். 45 சதவீத கிராமங்களில் தலித் மக்கள் கடைகளுக்கு உள்ளே சென்று பொருட்களை வாங்க முடியாது. வெளியே நின்றுதான் வாங்க வேண்டும்.
- 99.1 சதவீத கிராங்களில் உட்சாதிகளுக்குள் திருமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. வெவ்வேறு ஜாதிகளிடையே விதித்துள்ள தடையைவிட இந்த உட் ஜாதித் தடை மிகக் கடுமையாக பின்பற்றப்படுகிறது.
- தலித்துகளிலே தங்களை உயர் ஜாதியாகக் கருதும் குழுக்கள், கழிவுப் பொருட் களை அகற்றுவதை தங்களுக்குக் கீழாக உள்ள உட்ஜாதிப் பிரிவினரிடம் கட்டாயப்படுத்துகிறார்கள். 95.8 சதவீத கிராமங்களில் இதுதான் நிலை.
- தலித் மக்களுக்கான சுடுகாட்டில் சில தலித் உட் பிரிவினரின் பிணங்களை எரிப்பதற்கு 92.4 சதவீத கிராமங்களில் தடை செய்யப்பட்டுள்ளது.
- தலித் பிரிவினரிடையே கீழ் ஜாதியாகக் கருதப்படும் குழுவினர், சுடுகாட்டில் கழற்றி வீசப்படும் உடைகளை சேகரித்து அதை அவர்கள் அணிந்து கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.
- 96 சதவீத கிராமங்களில் தலித் வேலையாட்களுக்கு மதிய சாப்பாடு - தனி இடத்தில். பிற ஜாதி ஆட்களோடு சேர்ந்து சாப்பிட முடியாது. தலித் வேலையாட்கள் சாப்பிட்டு எஞ்சியதை பிற ஜாதியினர் தொடாமல் இருக்க தூக்கி குப்பையில் வீசப்படுகிறது.
- தலித் மக்கள் வாழும் பகுதிக்கு - மதச் சடங்குகளை செய்வதற்கு தலித் அல்லாதவர்கள் 96 சதவீத கிராமங்களில் வருவது கிடையாது.
- பொது கோயில்களில் 90 சதவீத கிராமங்களில் தலித் மக்கள் நுழைவதற்கு தடை.
- பொதுக் குளம், பொதுக் கிணற்றில் தலித் அல்லாதவர் மீது தலித் மக்கள் புழங்கும் தண்ணீர் பட்டுவிடுமானால், அது அவமதிப்பு தீட்டாக கருதப்படுகிறது.
- 87 சதவீத கிராமங்களில் தலித் வீட்டு திருமணங்களில் உணவு தயாரிக்க வாடகைக்கு பாத்திரங்கள் மறுக்கப்படுகிறது. இது தவிர தலித்துகள் உள்ளூர் சலூன்களில் முடிவெட்ட முடியாது (73 சதவீத கிராமங்களில்); உடை தைக்க முடியாது (33 சதவீத கிராமங்களில்); பானை, சட்டி வாங்க முடியாது (61 சதவீத கிராமங்களில்);
- தலித் பிரிவினரிடையே கீழ் ஜாதியாக கருதப் படும் உட்ஜாதியினரை மேல்ஜாதியாகக் கருதும் 'தலித்'துகள் பல்வேறு தீண்டாமைக்கு உள்ளாக்குகிறார்கள்.

இதுதான் குஜரத்தின் 'வளர்ச்சி'! இந்த உண்மைகளை மறைத்து அப்பட்டமாக மோடிக்கு ஜால்ரா போடுகிறது, ஒரு கூட்டம்!

**தகவல்: 'பிரன்ட் லைன்' மே 16, 2014**

## அந்தோ! பெரியார் சாக்ரடீஸ் முடிவெய்தினாரே!

சுயமரியாதை வீரர் காரைக்குடி என்.ஆர். சாமியின் பேரனும், தோழர் சாமி. திராவிட மணியால் கொள்கை ஊட்டி வளர்க்கப்பட்ட அன்பு மகனுமான பெரியார் சாக்ரடீஸ், சென்னையில் மே 3 ஆம் தேதி சாலை விபத்தில் தலையில் அடிபட்டு 12 ஆம் தேதி மரணமடைந்தார் என்ற செய்தி சொல்லொண்ணா வேதனையில் ஆழ்த்துகிறது. திராவிடர் கழகத்தில் சுறுசுறுப்பாக பணியாற்றிய துடிப்பான இளைஞர். தமிழ்நாடு அரசின் 'தமிழரசு' பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டு, 'உண்மை', 'பெரியார் பிஞ்சு' பத்திரிகைகள் பொறுப்பையும் ஏற்றார். 'உண்மை' இதழை வெகு மக்கள் படிக்கும் வகையில் உள்ளடக்கத்தை மாற்றிக் காட்டியவர். கழகம் என்ற எல்லை கடந்து, பெரியாரியல்வாதிகளிடம் தோழமை பேணியவர். கலை–இலக்கியவாதி களிடம் தோழமை பேணி, திராவிடர் கழக மேடைக்குக் கொண்டு வந்த சிறந்த மக்கள் தொடர்பாளர். 'மணிமகன்' என்ற பெயரில் கட்டுரைகள் எழுதியவர். சுறுசுறுப்பும் துடிப்பும், பத்திரிகை அனுபவமும் நிறைந்த பெரியார் இயக்க இளைஞர் விடைபெற்றுக் கொண்டுவிட்டார்.

திராவிடர் விடுதலைக் கழகம், இந்த துயரத்தில் பங்கேற்கிறது. இது தாங்கவியலாத துயரம்!

## ஈரோட்டில் நினைவு நாள் படத்திறப்பு

ஈரோடு மரப்பாலம் பகுதியைச் சார்ந்த கழகத் தோழர் சத்தியமூர்த்தி தாயாரின் படத்திறப்பு நிகழ்வு 11.5.2014 மதியம் 2 மணியளவில் நடை பெற்றது..

முன்னதாக, ஈரோடு மரப்பாலம் பகுதியிலுள்ளக் கழகக் கொடிக் கம்பத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். அங்கிருந்து மேளதாளம் முழங்க, தலைவர் மற்றும் தோழர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

தோழர் சத்தியமூர்த்தியின் இல்லத்திற்கு சென்றுவிட்டு, அருகிலுள்ள சமுதாயக் கூடத்தில் படத்திறப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கழகத் தலைவர் கொளத்தூர்மணி, படத்தினை திறந்து வைத்தார். சுமார் 60 க்கும் மேற்பட்ட தோழர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தற்போது ஈரோட்டில் பணிபுரிந்து வரும் கிருஷ்ணன் தங்கள் ஜாதி மறுப்புத் திருமணத்துக்கு எதிராக தங்கள் வீடு சூறையாடப்பட்டதையும், கழகம் அதற்காக ஈரோட்டிலும் மேட்டூரிலும் நடத்திய போராட்டங்களைப் பற்றியும், தற்போது கழகத்தில் இணைந்து பணியாற்றி வருவதையும் விரிவாகக் கூறினார்.

தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ப.சிவக்குமார், கழகப் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். தனது உரையில், வேதங்களின் கருத்துப்படி இருந்த 4 வகை ஜாதிகள் எப்படி இன்று நாலாயிரம் ஜாதிகளாக உருவெடுத்தன என்பது பற்றி மனுசாஸ்திரமும் பிற மத நூல்களும் குறிப்பிட்டுள்ளதை விளக்கிக் கூறினார். இவ்வாறு ஜாதிக் கலப்பால் உருவான சாதிகளிடையே, இப்போது மட்டும், மேலும் கலப்பு உருவாகாமல், ஜாதி மறுப்புத் திருமணம் செய்ய விடாமல் தடுப்பது ஏன்? என்றும் கேள்வி எழுப்பினார்.

இந்நிகழ்வில், யாருடைய உந்துதலும் இன்றி, தன்னெழுச்சியாக "பெரியார் கிரிக்கெட் கிளப்" என்று பெயர் வைத்துக்கொண்டும், பெரியார் படம் பொறித்த பனியன்களை அணிந்துகொண்டும் உள்ள அந்தியூர் ஆப்பக்கூடல் பகுதியைச் சார்ந்த 11 இளைஞர்கள், தோழர் வெங்கட் முயற்சியால் நிகழ்ச்சிக்கு வந்திருந்து, தாங்களும் பெரியார் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள், ஜாதிமறுப்பில் ஆர்வம் உள்ளவர்கள் என்று கூறி மேடையில் பேசியது அனைவரையும் வியப்படைய வைத்தது.


## ஆதி–தீந்தமிழ் இணையருக்கு இரட்டை மகவுகள்!

உடுமலைப்பட்டை பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறையின் அமைப்பாளரும், 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழின் அன்பருமான கொழுமம் ஆதி–தீந்தமிழ் இணையருக்கு 24.04.2014 வியாழக்கிழமை நண்பகல் இரு பெண் மகவுகள் பிறந்துள்ளனர். எதிர்காலத்தில் இரு மகவுகளுக்கும் பெயர் சூட்டும் முன்பாக, நிகழ்காலப் பெயர்களாக அ, ஆ என்று உலக மொழிகளுக்குத் தாயான தமிழின் முதல் இரண்டு உயிரெழுத்துகளைப் பெயராகச் சூட்டியுள்ளனர், பெற்றோர்!

மகவுகள் பிறந்ததையொட்டி மகிழ்வுக் கொடையாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு ரூ.500 வழங்கியுள்ளனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 16th May 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | மே 22, 2014 | புரட்சி 13 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00


# குமரியில் மதம்; தர்மபுரியில் ஜாதி

***தேர்தல் குறித்த சில தகவல்கள்:***

- *மொத்த வாக்குகளில் 31 சதவீதத்தைப் பெற்ற பா.ஜ.க. 282 தொகுதிகளையும் 19.3 சதவீத வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ், 44 தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளது. தமிழகத்தில் பதிவான வாக்குகளில் 43.3 சத வீதத்தைப் பெற்றுள்ள அ.இ.அ. தி.மு.க. 37 இடங்களைக் கைப்பற்றி யது. 23.6 சதவீத வாக்குளை பெற் றுள்ள தி.மு.க. ஒரு இடத்தில்கூட வெற்றி பெறவில்லை.*
- *80 தொகுதிகளைக் கொண்ட உ.பி.யில் முஸ்லிம்கள் - 19 சதவீதம் இருந்தும், போட்டியிட்ட 55 முஸ்லிம் வேட்பாளர்களில் ஒருவர் கூட வெற்றி பெறவில்லை. இங்கு பா.ஜ.க. நிறுத்திய வேட்பாளர்களில் ஒருவர் கூட முஸ்லிம் இல்லை. முஸ்லிம் ஓட்டுகளை பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி, காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகள் பிரித்துக் கொண்டதே இதற்குக் காரணம்.*
- *428 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க. 7 தொகுதிகளில் மட்டும் முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்தியது. ஒருவர்கூட வெற்றி பெறவில்ல. பா.ஜ.க.வில் வெற்றி பெற்ற 282 பேரில் ஒருவர்கூட முஸ்லிம் இல்லை.*
- *இந்தத் தேர்தலில் அறிமுகமான நோட்டா (எவருக்கும் ஓட்டளிக்க விருப்பமில்லை) தமிழகத்தில் தனது செல்வாக்கைப் பதிவு செய்துள்ளது. நோட்டா பெற்ற வாக்குகள் 5,54,389 (1.4 சதவீதம்). நீலகிரி ரிசர்வ் தொகுதியில் மிக அதிகமாக 46,559 வாக்காளர்களும் சிவகங்கை தொகுதியில் மிகக் குறைவாக 4,748 வாக்காளர்களும் ‘நோட்டா’வை தேர்வு செய்துள்ளனர். ‘படகர்’ சமூகத்தின் வேட்பாளர் எவரும் நீலகிரி தொகுதியில் போட்டியிடாதது ‘நோட்டா’வை தேர்வு செய்ய வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தியா முழுவதிலும் ‘நோட்டா’வுக்கு கிடைத்த வாக்கு 59 லட்சத்து 97 ஆயிரத்து 54.*
- *ஒரு இடத்தைக்கூட பிடிக்க முடியாத 1,652 கட்சிகளில் பகுஜன் சமாஜ், தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் தேசியவாத காங்கிரஸ், ராஷ்டிரிய லோக்தளம் உள்ளிட்ட கட்சிகளும் அடங்கும்.*
- *தமிழகத்தில் கன்னியாகுமரியில் மதவாத அடிப்படையில் பா.ஜ.க.வும் தர்மபுரியில் ஜாதிவாத அடிப்படையில் பா.ம.க.வும் வெற்றி பெற்றுள்ளன. ‘தர்மபுரி ஜாதிய வெற்றி’ தாங்கள் போட்டியிடும் தொகுதிகளில் கிடைக்கும் என்று நம்பியிருந்த பா.ம.க.வுக்கு ஏமாற்றமே கிடைத்தது.*
- *தமிழ்நாட்டில் பா.ஜ.க. 7 தொகுதிகளிலும், ம.தி.மு.க. 5 தொகுதிகளிலும், பா.ம.க. 4 தொகுதிகளிலும் தே.மு.தி.க. 3 தொகுதிகளிலும் டிபாசிட் இழந்துள்ளது. காங்கிரஸ் கன்னியாகுமரி தவிர, 38 தொகுதிகளில் டெபாசிட் இழந்தது. சிவகங்கை பா.ஜ.க. பார்ப்பன வேட்பாளர் எச்.ராஜா டெபாசிட்டை இழந்துள்ளார். மற்றொரு பார்ப்பன பா.ஜ.க. வேட்பாளர் இல. கணேசனும் தென் சென்னையில் தோல்வியடைந்தார்.*
- *61 பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். ‘சுதந்திர’ இந்தியாவில் பெண் உறுப்பினர்கள் அதிகம் இடம் பெற்றுள்ளது இந்த முறைதான். (11.3 சதவீதம் பேர்) 33 சதவீத உரிமைப் போராட்டத்துக்கு கிடைத்திருப்பது 11.3 சதவீதம்தான்.*

# பெண்கள் - பார்ப்பனரல்லாதார் அர்ச்சகராகலாம்: உச்சநீதிமன்றத்தின் அதிரடி தீர்ப்பு

*மகாராஷ்டிரா மாநிலத்தில் வித்தோபா கோயில் வழக்கில் பார்ப்பனர்களல்லாத தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் உள்பட அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.*

*“பார்ப்பனர்” மட்டுமே கோயில் அர்ச்சகராகலாம் என்ற ஆதிக்கத்திற்கு உச்சநீதிமன்றம் மரண அடி கொடுத்துள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், பெண்களும் அர்ச்சகராகலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.*

*மகாராட்டிர மாநிலத்தில் சோலாப்பூரை அடுத்த பந்தர்பூரில் 900 ஆண்டுகள் பழமை வாய்ந்த வித்தோபா கோயில் உள்ளது. புனித நகராகக் கூறப்படும் இந்நகரில் உள்ள கோயிலின் வரலாற்றிலேயே முதன்முதலாக பூசை செய்வதற்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு அர்ச்சகராகப் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் பழமையான ஆண் ஆதிக்கம் முடிவுக்கு வந்துள்ளது.*

*வித்தல் (உ)ருக்குமணி கோயில் அறக்கட்டளையின் தலைவர் அன்னா டாங்கே இது குறித்து கூறும்போது இரு நூற்றாண்டுகளாக பார்ப்பனர் மட்டுமே கோயில் பூசை, சடங்குகள் செய்யப்பட்டு வந்ததை மாற்றி, நாட்டிலேயே முதல் முயற்சியாக கோயில் அறக்கட்டளை மூலமாகவே பழைய முறை உடைத்து நொறுக்கப் பட்டுள்ளது.*

*(4 ஆம் பக்கம்)*

## வினா–விடை!

✦ *நாட்டை தூய்மைப்படுத்தும் பணியை வாரணாசியிலிருந்து தொடங்குவோம்.* – **மோடி**

*நேர்மையான பேச்சு; உலகிலேயே அதிக சுகாதாரக் கேடு கொண்ட நகரம் அது தானே!*

✦ *எதிர்க்கட்சியாகும் தகுதியைக்கூட பெறாமல் காங்கிரஸ் தோல்வி அடைந்துள்ளது.* – **செய்தி**

*இருக்கலாம். ஆனால், காங்கிரசையே கலைக்கச் சொன்ன காந்தியின் லட்சியத்தை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார்களே! இது சாதனை தானே?*

✦ *தமிழகத்தில் ஒவ்வொரு கட்சிகளும் பெற்ற வாக்குகளின் சதவீதக் கணக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.* – **செய்தி**

*இது யாருக்குப் பயன்படாவிட்டாலும் அடுத்த தேர்தலில் ‘வெற்றிக் கூட்டணி’க்கு கணக்குப் போடுவதற்கு தோழர் தமிழருவி மணியனுக்கு நிச்சயம் பயன்படும்.*

✦ *தில்லை நடராசன் கோயில் நிர்வாகத்தில் அரசு தலையீட்டை எதிர்த்து வெற்றி பெற்ற தீட்சதர்கள், தங்களுக்கு பாதுகாப்பு கேட்டு தில்லை காவல் நிலையத்தில் புகார்.* – **தினமலர் செய்தி**

*இதுக்கு மட்டும், அரசு தலையிடு வேண்டுமா? தில்லை நடராசனிடம் நேரடியாக ‘பாதுகாப்பு’ அர்ச்சனை செய்ய வேண்டியது தானே?*

✦ *பெரியாறு அணை நீர் மட்டத்தை கேரள அரசு குறைத்த நாளிலிருந்து நீரில்லாத வைகை ஆற்றில்தான் கள்ளழகர் நீராடி வந்தார்.* – **‘தினமலர்’ செய்தி**

*நீராடுவதோ ஆண்டுக்கு ஒரு முறை; அதுவும் நீரில்லாத ஆற்றில். ‘புளுகு’க்கு அளவே இல்லையா?*

✦ *கூடங்குளம் முதலாவது அணு உலையில் நீராவி – வெப்ப நீர் செல்லும் குழாய் உடைந்து 6 பேர் காயம்.* – **செய்தி**

*தொழிலாளர்கள் பாதுகாப்புடன் மீட்கப்பட்டு பாதுகாப்புடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பாதுகாப்புடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள். இதற்குப் பிறகும் கூடங்குளத்தில் பாதுகாப்பு இல்லை என்று வாய்க்கு வந்தபடி பேசக் கூடாது.*

✦ *தமிழ்நாட்டில் 5.82 லட்சம்பேர் (1.4 சதவீதம்) ‘நோட்டாவுக்கு வாக்களித்துள்ளனர்.* – **செய்தி**

*‘நோட்டா’வே கட்சியாகி ஆட்சியைப் பிடித்துவிடும் போல!*

✦ *தமிழகத்தில் போட்டியிட்ட 835 வேட்பாளர்களில் 734 பேர் ‘டெப்பாசிட்’ இழப்பு.* – **செய்தி**

*பாவம்! ஓட்டுக்கு பணமே கொடுக்காத இந்த வேட்பாளர்களின் ‘டெப்பாசிட்’ தொகையையும் தேர்தல் ஆணையம் பறிக்கலாமா?*

✦ *முடிந்த வரை சிறப்பாக சேவை செய்ய முயற்சித்தேன்.* – **பிரதமர் மன்மோகன் சிங் கடைசி உரை**

*அந்த முயற்சி இறுதி வரை வெற்றி பெறவே இல்லை என்ற நிலையிலும் முயற்சித்துக் கொண்டே இருந்த, உங்கள் முயற்சியைப் பாராட்ட வேண்டும்!*

✦ *சிதம்பரம் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் தோல்வி அடைந்த அதிர்ச்சியில் காங்கிரஸ் தொண்டர் தற்கொலை.* – **செய்தி**

*இந்த செய்தி அறிந்த காங்கிரஸ் வேட்பாளர் அதிர்ச்சியடையாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!*

✦ *முதன்முறையாக ‘நாசா’ விண்வெளி ஆய்வு மய்ய விஞ்ஞானிகள் செயற்கை நட்சத்திர துகள்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.* – **செய்தி**

*ப்பூ... இது ஒரு சாதனையா? எங்கள் நாட்டில் நட்சத்திரங்களை ஆய்வு செய்யும் ஜோதிடர்களை நாங்கள் இயற்கையாகவே உருவாக்குகிறோம், தெரியுமா?*

✦ *காங்கிரஸ் கட்சியின் தோல்வி ஆய்வுக்குரியது கவலைக்குரியது அல்ல.* – **தமிழக காங். தலைவர் ஞான தேசிகன்**

*அதெல்லாம் இல்லை; தோல்வி கவலைக்குரியதே தவிர, ஆய்வுக்குரியது அல்ல என்று ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் எதிர்க்காமல் இருந்தால் சரி!*

✦ *தேர்தல் வெற்றிக்கு திருவள்ளூர் அ.தி.மு.க.வினரும், தோல்விக்கு திண்டுக்கல் தி.மு.க.வினரும் கோயிலில் மொட்டை அடித்துக் கொண்டனர்.* – **செய்தி**

*‘லஞ்சம்’ வாங்குவதில் கடவுள் எப்போதுமே பாகுபாடு காட்டமாட்டார். ‘ஆண்டவன்’ சன்னதியில் அனைவரும் சமம்!*

✦ *14 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க. 11 இடங்களில் டெபாசிட் இழந்தது.* – **செய்தி**

*மூன்று இடங்களில் எப்படி டெபாசிட் கிடைத்ததுன்னு மறு வாக்குப் பதிவு நடத்த முடியாதுங்க! தேர்தல் ஆணையத்தில் வேலை முடிஞ்சு போச்சு!*

**தலையங்கம்**

# அதிகார மாற்றம்

‘இந்து இராஷ்டிரத்தை’ உருவாக்கும் கொள்கையைக் கொண்டவர்களிடம் அரசியல் அதிகாரம் போய்ச் சேர்ந்து விடக்கூடாது என்பதை மக்களிடம் உணர்த்த விரும்பியதால்தான் திராவிடர் விடுதலைக் கழகம் - இடதுசாரி கட்சிகள், இஸ்லாமிய அமைப்புகள், தலித் அமைப்புகளை ஆதரிக்கும் முடிவை எடுத்தது. எந்தக் கட்சி வெற்றி பெற வேண்டும் என்பதைவிட எந்தக் கொள்கை வெற்றி பெற வேண்டும் என்ற பார்வையில் கழகம் எடுத்த முடிவு இது.

இப்போது ‘இராஷ்டிரிய சுயம் சேவக் சங்’ என்ற ‘இந்து இராஷ்டிரத்தை’ அமைக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ். ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துவிட்டது. அந்த அமைப்பு களமிறக்கிய நரேந்திர மோடி, நாட்டின் பிரதமராகிறார். நாடாளுமன்றம், வாக்குரிமை என்ற “ஜனநாயக” வழிமுறைகளில் ‘இராம இராஜ்யத்தை’ அமைக்கும் முயற்சி என்பதேகூட ஒரு விசித்திர முரண்பாடுதான். பார்ப்பன அதிகாரம் மட்டுமே இராமஇராஜ்யத்தை வழி நடத்தியதாக இராமாயணங்கள் கூறுகின்றன.

இந்தியா, இறையாண்மை கொண்ட சோஷலிச மதச்சார்பற்ற குடியரசு என்று வலியுறுத்தும் அரசியல் சட்டத்துக்கு உண்மையாக இருக்க வேண்டியவர் ஒரு நாட்டின் பிரதமர். மோடி இதையே பதவி ஏற்பில் உறுதி கூற வேண்டும். ஆனால், ‘இந்தியா’ என்ற சொல்கூட மோடி ஏற்றுக் கொண்டுள்ள தத்துவத்துக்கு’ எதிரானது தான்! இந்துக்கள் அல்லாத பிற மதத்தினரையும் இணைத்து வாழ்வதற்காக சூட்டப்பட்ட ‘இந்தியா’ என்ற பெயரை, ஆர்.எஸ்.எஸ். ஒரு போதும் ஏற்பது இல்லை. மாறாக, ‘பரதன்’ வழி வந்த இந்துக்களைக் கொண்ட பாரதம், ‘பாரதியம்’ என்ற பெயரையே ஆர்.எஸ்.எஸ். வலியுறுத்துகிறது. அதனால்தான் ‘பாரதிய ஜனதா’ என்று கட்சிக்கு பெயர் சூட்டினார்கள். இந்த ‘பாரதியம்’, ‘இந்தியா’வுடன் எந்தப் புள்ளியில் இணையப் போகிறது? இதுவும்கூட ஒரு முரண்பாடுதான்!

“இராமர் கோயில் கட்டுதல் - பொது சிவில் சட்டம் - காஷ்மீர் தனி உரிமை ரத்து” என்ற “பாரதிய” அடையாளங்களை ஒதுக்கிவிட்டு, “இந்தியாவுடன் சமரசம் செய்து கொள்ள முன் வந்தார், வாஜ்பாய்! அந்த சமரசத்துக்கு தாங்கள் தயாராக இல்லை என்று இப்போது பாரதிய - பா.ஜ.க.வினர் தேர்தல் அறிக்கையில் தெளிவாக்கி விட்டனர்.

வெற்றி செய்தி கிடைத்தவுடன், மோடி ஆர்.எஸ்.எஸ். தலைவர்களை நோக்கி ஓடுகிறார். கங்கையில் ‘ஆரத்தி பூஜை’ நடத்துகிறார். தன்னுடைய ‘இராஷ்டிரிய சுயம் சேவக்’ அடையாளத்தை பெருமையுடன் வெளிப்படுத்துகிறார். பொய் முகம் காட்ட மோடி தயாராக இல்லை. இது வரவேற்கப்பட வேண்டியதுதான்!

பல்வேறு கலாச்சார அடையாளங்களை ‘இந்து’, ‘இந்தியன்’ என்ற ஒற்றைச் சிமிழுக்குள் அடக்கிட நடக்கும் முயற்சிகள் குறித்து பெரியார் இவ்வாறு கூறுகிறார்:

> “அகில இந்திய மக்கள், பல நாடு, பல சாதி, பல இனம், பல மதம், பல கலாச்சாரமுடைய மக்களாவார்கள். இவர்களை ஒரு நாடு, ஒரு சாதி, ஒரு இனம், ஒரு மதம், ஒரு கலாச்சார மக்களாகக் கொண்டு ஒன்றுபடுத்தி ஆளுவது என்பது மக்கள் மடையர்களாய், மானமற்றவர்களாய், அடிமைகளாய் இருக்கும் வரைதான் முடியும். அல்லது ஆட்சியாளர் தேர்ச்சியுள்ள, யோக்கியமற்ற ஆட்சி வெறியர்களாக இருக்கும்வரை தான் முடியும்”. **(‘விடுதலை’ 27.1.1959)**

பெரியார் கூற்று எவ்வளவு சரியானது என்பதற்கு நாட்டு நடப்புகளே உணர்த்துகின்றன. “ஊழல் ஒழிப்பு பொருளாதார வளர்ச்சி - வலிமையான தேசம்” என்ற சொல்லாடல்களுக்குள் “இந்து கலாச்சாரம் - பார்ப்பனியப் பெருமை - மதவெறுப்பு - பாரதியம்” என்ற நச்சுகள் பதுங்கிக் கிடக்கின்றன. இவைகள் ஒரு புறமிருக்க, ஆட்சி மாற்றத்துக்கு திரைமறைவில் தீவிரப் பணியாற்றிய ‘கார்ப்பரேட்’ நிறுவனங்கள், தங்களின் பொருளாதார சுரண்டலுக்கு ஏற்ற கொள்கைகளை மேலும் தொடருவதற்கு தயாராகி வருகிறார்கள். தேர்தல் முடிவுகள் வெளிவந்தவுடனேயே அம்பானி - அதானியின் பங்குகள் பல மடங்கு உயரத் தொடங்கியது எதைக் காட்டுகிறது? ‘இராம இராஜ்யம்’ அமைக்கப் போகும் கட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் அம்பானி-அதானி பங்கு வர்த்தகம் ஏன் உயருகிறது? இரண்டுக்கும் உள்ள நெருக்கமான தொடர்புகள் என்ன?

இந்து மதத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள பார்ப்பனர்கள், இந்திய பொருளாதாரத்தை தங்களது சுரண்டல் வர்த்தகத்துக்குள் கொண்டு வந்துள்ள கார்ப்பரேட்டுகள், இவர்களின் இணைப்புப் பாலமாக அதிகாரத்தைக் கட்டமைக்க வந்துள்ள நரேந்திர மோடிகள், இவர்களுக்கிடையிலான பரிமாற்ற உறவுகளில்தான் இந்தியா “வளரப்” போகிறது. இதுதான் உண்மை. இந்த ஆபத்துகளை எப்படி எதிர் கொள்ளப் போகிறோம்?

இதற்கான சமுக - அரசியல் மாற்றங்கள், அரசியல் அதிகாரத்திலோ அல்லது ஆட்சி மாற்றங்களிலோ நிகழப் போவதில்லை. மக்களிடம் உருவாக்கும் கருத்துப் புரட்சி, அதன் வழிப்பட்ட போராட்டங்களில்தான் அடங்கியிருக்கின்றன.

சுயமரியாதைக்கும் சமுக சமத்துவத்துக்கும் நேரடி சவால்கள் வெளிப்படும் போதுதான் இந்தக் கொள்கைகளை மேலும் வலிமையாக முன்னெடுக்க முடியும் என்பதே பெரியார் விட்டுச் சென்ற செயல் முறை - அணுகுமுறை!

ஆட்சி மாற்றத்துக்காக காத்திருப்பதும் அடுத்து ஆட்சிக்கு வர விரும்பும் கட்சிகளின் நிழல்களில் பதுங்கிக் கொள்வதும் பெரியாரியல் அணுகுமுறையாகாது.

சமுதாய மாற்றத்துக்கு - மக்கள் மன்றத்தில் களங்களை தயார் செய்வதே பெரியாரியம் காட்டும் வெளிச்சம்!

பெரியாரியத்தை மேலும் உறுதியாக முன்னெடுப்போம்!

புதிய ஆட்சிக்கு வாழ்த்துச் சொல்லும் போலி சடங்குகளில் நமக்கு நம்பிக்கை இல்லை; அது தேவையும் இல்லை.

# ‘நோக்கியா’ சுரண்டலுக்கு துணை போகும் ஆட்சிகள்

இந்தியாவில் அந்நிய முதலீடு நுழைய முடியாத துறையை காண்பது இன்று அபூர்வம். தொழில்துறை, நிதித் துறை, சில்லரை வர்த்தகம் என எல்லா முக்கியத் துறைகளிலும் தனது ஆக்டோபஸ் கரங்களை நுழைத்து கொள்ளையடித்து வருகிறது அந்நிய முதலீடு. இப்போக்கு வளர்ச்சியின் குறியீடாக இங்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஏராளமான சலுகைகள், அடிமாட்டு விலைக்கு நிலம், வரிச் சலுகைகள் என இந்திய மக்களின் செல்வ வளம் வாரியிறைக்கப்படுகிறது. அந்நிய முதலீடுகள் மீது கட்டுப்பாடற்ற சுதந்திர போக்கு மத்திய, மாநில அரசுகளால் கையாளப்படுகிறது. இவர்களின் எதிர்பார்ப்பின்படி இம் முதலீடுகள் நாட்டை வளமாக்கவில்லை. மாறாக இந்திய அரசு அளிக்கும் அத்துனை சலுகைகளையும் அனுபவிப்பதோடு, சட்ட விரோதமான வழிகளிலும் நாட்டின் வளங்களை கொள்ளையடிக்கிறார்கள் என்பதை “பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பதை போல நோக்கியா இந்தியா நிறுவன விவகாரங்களை கொண்டே விளங்க முடியும்.

### தமிழக அரசின் ஒப்பந்தம்

ஏப்ரல் 2005இல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நோக்கியாவிற்கும் மாநில அரசுக்குமிடையே ஸ்ரீ பெரும்புதூரில் ஒரு சிறப்பு பொருளாதார மண்டலத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. 2006இல் தி.மு.க. பதவியைப் பிடித்தது. ஒப்பந்தத்தை பொது மக்களின் பார்வைபடாதவாறு காத்தது. “சிட்டிசன்ஸ் ரிசர்ச் கலெக்டிவ்” என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் தகவல் உரிமை சட்டத்தின் கீழ், மூன்றாண்டு போராட்டத்திற்கு பின் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை வெளியுலகின் பார்வைக்கு கொண்டு வந்தது. நோக்கியா என்ற ஆக்டோபஸின் கரங்களில் தமிழகம் சிக்கியுள்ளது அம்பலமானது.

இந்த ஒப்பந்தத்தின்படி ஏக்கருக்கு ரூ.3.75 லட்சம் என்ற கணக்கில் 210.87 ஏக்கர் சிப்காட் நிலம் 99 ஆண்டுகள் குத்தகைக்கு நோக்கியாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் தமிழக அரசின் சிப்காட் நிறுவனத்திற்கு ஏக்கருக்கு ரூ.2.25 லட்சம் வீதம் கிட்டத்தட்ட ரூ.480 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த குத்தகையை பதிவு செய்வதற்கான 4 சதவீத முத்திரைத்தாள் கட்டணத்தையும் தள்ளுபடி செய்ததுடன், தனது தேவைக்குப் போக மீதமுள்ள நிலத்தை பிற நிறுவனங்களுக்குக் கூடுதல் விலைக்கு குத்தகைக்கு விடுவதற்கான உரிமையையும் நோக்கியாவிற்கு வழங்கியது தமிழக அரசு.

நோக்கியா தனது செல்பேசியை உள்நாட்டில் விற்பனை செய்வதன் மூலம் செலுத்தும் வாட் வரியையும், மத்திய விற்பனை வரியையும், தமிழக அரசு திருப்பி செலுத்தும் என்பது ஒப்பந்தத்தின் முக்கிய சலுகை. செல்பேசி வாங்கும் இந்திய குடிமக்கள் செலுத்தும் வரிப்பணம் அரசின் கஜானாவுக்குப் போகாமல், நோக்கியாவிற்கே திருப்பி விடப்பட்டுள்ளது. இச்சலுகையின் கீழ் 2005 முதல் 2011 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ ரூ.850 கோடிகளை தமிழக அரசு நோக்கியாவிற்கு தாரை வார்த்துள்ளது. மற்ற சலுகைகளையும் கணக்கில் சேர்த்தால் இதுவரை ரூ.2500 கோடி அளவுக்கு மக்கள் பணத்தை தமிழக அரசு நோக்கியாவிடம் இழந்துள்ளது.

### மைய அரசின் சலுகைகள்

தமிழக அரசின் சலுகைகள் ஒருபுறமிருக்க நோக்கியா நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக செயல்பட்டு வருவதால் மைய அரசு இந்நிறுவனத்திற்கு சுங்கவரி, உற்பத்தி வரி விலக்குகளை அளித்துள்ளது. இந்த வரி விலக்குகளின் மூலம் 2005-06 மற்றும் 2006-07 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் ரூ.681.38 கோடிகளை மைய அரசு இழந்துள்ளது. இவை தவிர வருமான வரிச் சலுகை, ஏற்றுமதி வரிச் சலுகைப் போன்ற நேரடி சலுகைகளால் நோக்கியா தனது முதல் ஐந்தாண்டுகளில் மட்டும் அடைந்த மொத்த லாபம் ரூ.10 ஆயிரம் கோடிகளுக்கும் மேல். நோக்கியா ஸ்ரீபெரும்புதூரில் தொழில் துவங்க போட்ட மொத்த முதலீடு வெறும் 650 கோடிகள்தான் என்பதனை இச்சலுகைகளோடு ஒப்பிட்டால் நோக்கியா அடித்திருக்கும் பகற்கொள்ளையின் பரிமாணம் நமக்கு பிடிபடும். இந்தக் கொள்ளையில் நோக்கியா தனது தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி கொள்ளையடித்ததை கணக்கில் கொள்ளவில்லை.

சாதாரண ஒரு சிறு வியாபாரியிடம் இருக்கும் வர்த்தக நேர்மைகூட நோக்கியாவிடம் இல்லை. இங்கு உற்பத்தி செய்யப்படும் கைப்பேசிகளில் 50 சதவீதத்தை ஏற்றுமதி செய்யவுள்ளதாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டுள்ள நோக்கியா, உற்பத்தியின் 80 சதவீதத்தை இங்கேயே சந்தைப்படுத்தியது. இந்த வர்த்தக பித்தலாட்டத்தால் ரூ.681.36 கோடி சுங்க வரியாக வரவேண்டியது நோக்கியாவால் ஏமாற்றப்பட்டு மைய அரசு இழப்பை ஏற்படுத்தியது.

### வரி ஏய்ப்பு

நோக்கியா நிறுவனம் ரூ.21 ஆயிரம் கோடி அளவுக்கு வரி ஏய்ப்பு செய்திருப்பது தற்போது அம்பலமாகியிருக்கிறது. இங்கு தயாரிக்கப்படும் செல்பேசிகளுக்கான மென்பொருளை பின்லாந்திலுள்ள தனது தாய் நிறுவனமான நோக்கியா கார்ப்பரேஷனிடமிருந்து இறக்குமதி செய்து வருகிறது. இந்தியா, இப்படி இறக்குமதி செய்யும் மென்பொருளுக்கு அதற்கான விலையோடு ராயல்டி தொகையும் செலுத்தி வருவதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. இந்த ராயல்டி தொகை மட்டும் ரூ.25 ஆயிரம் கோடிகள், இதில் பத்து சதவீதம் வரியாக செலுத்தப்பட்டிருக்க வேண்டும். கடந்த 8 ஆண்டுகளாக இந்த வரியை நோக்கியா கட்டவே இல்லை.

இந்த ராயல்டி வரிமட்டுமின்றி வெவ்வேறு இனங்களில் இந்திய அரசுக்கு சேர வேண்டிய ரூ.21 ஆயிரம் கோடிகளை வரி ஏய்ப்பு செய்து பின்லாந்திற்கு கடத்தியுள்ளது நோக்கியா. இந்த வரி ஏய்ப்பு விவகாரம் தொடர்பாக மைய அரசுக்கும், நோக்கியா இந்தியாவுக்கும் இடையே சட்ட போராட்டம் நடந்து

(4 ஆம் பக்கம்)

# கத்தோலிக்கர்கள் மிரட்டலை சந்தித்த ‘குடிஅரசு’

***15–05–2014 ஆம் நாளிட்ட `புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் 14–05–1933 அன்று பல தடைகளை மீறி, பெரியார் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்ட தோழர் எம்.ஏ.சவுந்தரராஜன், 27–05–1979 இல் எழுதி வைத்திருந்த நினைவுக் குறிப்பு வெளி வந்துள்ளது.***

***`குடிஅரசு’ ஏட்டின் பதிப்பாளராய் இருந்துவந்த நாகம்மையார் 11–05–1933 அன்று காலமாகிப் போனதால், புதிய பதிப்பாளரின் பெயருக்கு பத்திரிக்கையை மாற்றுவதற்காக அந்த இதழோடு (மாலை–9; மலர்–3) `குடிஅரசு’ நிறுத்தப்பட்டது.***

***பெரியாரின் தங்கை சா.ரா.கண்ணம்மாள் அவர்கள் பதிப்பாளராக பதியப் பெறுவதற்கு இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன.***

***அடுத்த `குடிஅரசு’ இதழ் (மாலை–9; மலர்–4) 16–07–1933 அன்று தான் வெளிவந்தது. அவ்விதழின் 9ஆம் பக்கத்தில் “கத்தோலிக்கர்களே, இனி பலிக்காது” என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம்.***

***“எவனெழுதினாலென்ன?” என்ற புனைப் பெயரில் இக்கட்டுரை வெளி வந்துள்ளது.***

திருச்சியில் மே மாதம் 14 ந் தேதி நடந்த ஒரு சுயமரியாதைத் திருமணத்தை முன்னிட்டு தோழர் ஈ.வெ.ராமசாமியும், மணமகனும் மணமகளும் இருவருடைய தந்தைமாரும் ஆகிய ஐவர்களை இரண்டு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள், பல போலீஸ் ஏட்டுகள், கான்ஸ்டேபிள்கள் ஆகியவர்கள் திருமணம் நடந்த இடத்துக்கு, துப்பாக்கி சகிதம் வந்து அரஸ்ட் செய்து, பாலக்கரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றதும் அங்கு போலீஸ் ஸ்டேஷனில் மாலை 5-30 மணி முதல் 10-30 மணி வரையில் வைத்திருந்து ஸ்டேட்மெண்டுகளும் முச்சலிக்காக்களும் (ஒப்பந்தம்) எழுதி வாங்கிக்கொண்டு விடுதலை செய்ததும் யாவரும் அறிந்ததேயாகும்.

மற்றும் திருமண ஒப்பந்தம் நடந்த இடத்தின் முன்வாசலில் தோழர் ஈ.வெ.ராமசாமியை போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் பல கேள்விகள் கேட்டபோது தோழர் ராமசாமி இன்ஸ்பெக்டரைப் பார்த்து, “நீங்கள் என்ன முறையில் எந்த ஆதாரத்தின் மீது இந்தக் கேள்விகள் கேட்கின்றீர்கள்?” என்று கேட்டதற்கு “மிஸ்டர் ராமசாமி நாய்க்கரே உங்களை அரஸ்ட் செய்து இருக்கிறோம். நீங்கள். கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும்” என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தக் கூட்டத்தில் சுமார் 200, 300 பேர்கள் அறிய கர்ச்சனையோடு சொன்னார். அதற்கு தோழர் ராமசாமி என்ன ஆதாரம் என்று கேட்க, “நீங்கள் செய்துவைத்த கல்யாணம் சட்ட விரோதமானது செஷன்சுக்கு கமிட்டி செய்யக் கூடிய கேசு, 10 வருஷ தண்டனைக்கு உட்பட்டது, வாரண்டில்லாமல் அரஸ்ட் செய்யக்கூடியது, ஆதலால் ஆதாரம் தேவை இல்லை” என்றும் சொன்னார்.

இப்படியிருக்க இன்றைய தினம் அதே போலீசார் தோழர்களான ஈ.வெ.ராமசாமியையும், மணமக்களையும், பெற்றோர்களையும் போலீசார் அரஸ்ட் செய்யவில்லை என்றும், ஸ்டேட்மெண்டோ, முச்சலிக்காவோ வாங்கவில்லை என்றும், கலகம் நடக்குமோ என்கின்ற சந்தேகத்தின் மீது (கல்யாணத்தை நடத்திக்கொடுப்பதற்காக) கல்யாண வீட்டுக்குப் போனதாகவும் சொல்லுகின்றார்கள் என்றால், இதற்கு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

திருச்சி போலீசாரும் கத்தோலிக்க பாதிரிகளும் தோழர் ராமசாமி மீது கிறிஸ்தவ கல்யாணச் சட்டப்படி கேசு செய்வதற்கு அவர்கள் பட்டபாட்டை திருச்சி பொது ஜனங்கள் கண்டு சிரிப்பாய் சிரித்து விட்டார்கள்.

திருச்சி கத்தோலிக்க பாதிரிகள் சென்னையில் பல பாதிரி குருக்களையும் பல பாரிஸ்டர்களையும் மேதாவி வக்கீல்களையும் போய் அபிப்பிராயம் கேட்டும் பார்த்து விட்டார்கள். திருச்சி பப்ளிக் பிராசிக்கூட்டரையும் அதிகாரிகளையும் கெஞ்சியும் பார்த்து விட்டார்கள். எங்கு போய் அழுதும் ஒரு பயனும் ஏற்படாததால் உப்புக் கண்டம் பறி கொடுத்த பாப்பாத்தி போல் வாயை மூடிக்கொண்டார்கள்.

இந்த லட்சணத்தில் இந்த பித்தலாட்ட தடபுடலுக்கு பிறகு திருச்சியிலும் சுற்றுப் பக்கங்களிலும் இது போன்ற பல திருமணங்கள் நடந்தும் ஆய்விட்டது. கிறிஸ்தவர்களுக்குள்ளாகவே ஒரு மனைவி இருக்க மற்றொரு மனைவியை மணக்கும் திருமணமும் சிலது நடந்தாய் விட்டது.

இவற்றின் பயனாய் திருச்சி ஜில்லாவில் இப்போது அனேகர் தங்களை கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப்படும்படியான நிலைமை வந்து விட்டது. பாதிரிமார்களுக்கும் தனியாய் வழியில் நடக்க பயம் ஏற்பட்டு விட்டது. அவ்வளவு தூரம் போவானேன் உலக கிறிஸ்தவ சமூகத்துக்கே தலைமையான ரோம்நகரில் உள்ள சர்ச்சுக்கே வெடிகுண்டு போட்டு சேதம் விளைவித்து விட்டார்கள். என்பதோடு போப்பரசர் என்று சொல்லப்படுபவரும் “கடவுளுக்கு” சமானமாய் கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் மதிக்கப்படுவருமான ரோம் பிரதம குருவுக்கே, கட்டடத்தை விட்டு வெளியில் வரவேண்டுமானால் போலீசு ஒற்றர்கள் (சி.ஐ.டி) பந்தோபஸ்து இல்லாமல் வரமுடியவில்லை என்று கத்தோலிக்க பத்திரிகைகள் கூக்குரல் இடுகின்றன.

நிலைமை இப்படி இருக்க - இதற்கெல்லாம் காரணம் தங்கள் மதத்தின் போலித்தனமும், பாதிரிகளின் பித்தலாட்டமும், சூட்சிகளுமே காரணம் என்று எண்ணாமல், குடிஅரசின் மீதும் சு-ம (சுயமரியாதை) இயக்கத்தின் மீதும் பழி கூறுவதும், குடிஅரசை ஒழிப்பதற்காக கமிட்டி போட்டு பணம் வசூலிப்பதும், குடிகாரன் வெறிகாரன் போல் கண்டபடி இழி வார்த்தைகளால் வைவதும், சில குடிகாரர்களை ஏவி விட்டு கலகம் செய்யச் செய்வதுமான காரியங்களால், தங்கள் மத வியாபாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று பாதிரிகள் நினைத்தால் இந்த 20வது நூற்றாண்டில் செல்லுமா என்று தான் கேட்கின்றோம்.

குடிஅரசு பத்திரிகை செத்துப் போகலாம், சு-ம இயக்கமும் மறைந்து போகலாம். என்றாலும் அவைகளுக்கு பதில் உடனே அவற்றை விட வேகமானதான பத்திரிக்கையும் இயக்கமும் அவைகள் புதைபட்ட இடத்திலிருந்தே தோன்றி விடும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் கத்தோலிக்க கிறிஸ்தவ மத இயக்கம் மாத்திரம் வெகு சீக்கிரத்தில் அழுவாரற்ற பிணமாக சாகப் போகின்றது. என்பதற்கு பந்தயம் கட்டத் தயாராய் இருக்கிறோம்.

இன்றைய தினம் திருச்சி தஞ்சை இரண்டு ஜில்லாக்களிலும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்துவர்களை “இந்து மதக்” காரர்கள் சேர்த்துக் கொள்வதாய் இருந்தால் 100 க்கு 75 பேர் ‘இந்து’ க்களாக தயாராய் இருக்கிறார்கள். கத்தோலிக்க கிறிஸ்துவர்களுக்கு உள்ள சர்க்கார் சலுகை “இந்து” க்களுக்கு இருந்து அதன்மூலம் மதம் மாறுகின்றவர்களுக்கு ஏதாவது பிழைப்புக்கு வழி செய்வதாய் இருந்தால், பாக்கி 24 பர்செண்டும் மன்னிப்பு கேட்டுக்கொண்டு “மனந்திரும்ப”த் தயாராய் இருக்கிறார்கள்.

நம்மைப் பொருத்தவரை கிறிஸ்துவரானாலும், இஸ்லாமியரானாலும், இந்துவானாலும் மற்றும் யாரானாலும், மதத்தையே அடியோடு விட்டு விடுவதானால் விட்டு விடட்டும். அப்படிக்கில்லாமல் ஒரு மதத்தை விட்டு மற்றொரு மதத்துக்கு போவது என்பது (வாழ்க்கை சௌகரியத்தைத் தவிர) யாதொரு காரியத்துக்கும் பயன்படாது என்றும், புத்திசாலிதனமாகாது என்றும் தான் கருதுகிறோம். உலகில் உள்ள மதங்களில் சில மதங்களுக்கு நல்ல கொள்கைகள் உண்டு புத்தி இல்லை. சில மதங்களுக்கு புட்தியுண்டு கொள்கையில்லை. சில மதங்களுக்கு புத்தியுமில்லை கொள்கையுமில்லை, என்கின்ற முறையில் உலகில் உள்ள மதங்களை எல்லாம் பிரித்துப் பார்ப்போமேயானால்; இந்த கத்தோலிக்க கிறிஸ்துவ மதமானது, கொள்கையும் இல்லை புத்தியும் இல்லை, என்கின்ற கூட்டத்தில் தான் சேர்க்கக் கூடியதாயிருக்கிறது. இந்தக் காரணத்தால் தான் இப்படிப்பட்ட மதங்கள் இந்தக் காலத்தில் வாழ முடியாது என்று சொல்ல வருகின்றோம்.

இந்த மதங்களுக்கு தாய் வீடுகளாய் இருக்கும் மேல் நாடுகளில், உதாரணமாக ஸ்பெயின், ஜர்மனி, ருஷியா, முதலிய தேசங்களில் கோயில்கள் இடிபடுவதும், கோவில் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதும், பாதிரிமார்கள் போலீஸ் பந்தோபஸ்தில் வாழ்வதும், மத ஆதாரங்களைத் தூள் தூளாக்கி எரிப்பது போல் எதிர்ப் பிரசார புஸ்தகங்கள், துண்டு விளம்பரங்கள் ஆகியவைகளைப் பதிப்பித்து வெளியிடுவதுமான காரியங்கள், இன்று அளவிட முடியாதபடி நடந்துவருவதை, எவ்வளவு அசத்திய சாமர்த்திய பாதிரியும் மறுக்க முடியாதபடி விளங்குகின்றன. இதற்காக குடிஅரசையும் சு-ம வையும் வைவதால் பயனென்ன? கிறிஸ்துவ மார்க்கம் ஒழிவதற்கும் பழிக்கப்படுவதற்கும் காரணம், மனிதர்களுக்கு அறிவு வளர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும், பெருகிவருவது தான் காரணமே ஒழிய வேறல்ல.

ஆகையால் கிறிஸ்தவ மதம் மாத்திரமல்லாமல், உலகில் இனி எந்த மதம் வாழவேண்டுமானாலும் மக்களை மூடர்களாக வைத்திருக்க முயற்சித்து வெற்றி பெற்றால் மாத்திரம் ஒரு சமயம் முடியுமே ஒழிய, மற்றபடி குடிஅரசையும், சு-ம இயக்கத்தையும், இராமசாமியையும், வைது பழித்து தூற்றுவதன் மூலம், தங்கள் மதத்தைக் காப்பாற்றிவிடலாம் என்று நினைப்பது, இனி பலிக்காது என்பதை உணர வேண்டுமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### “குடி அரசை” ஒழிக்க பண வசூலாம்

“குடி அரசை” எதிர்த்துப் போராட கத்தோலிக்கர்கள் நிதி என்ற பெரிய தலைப்பின் கீழ் “கத்தோலிக்க லீடர்” என்ற ஆங்கில பத்திரிகையில் ஒரு முறையீடு காணப்படுகிறது.

கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரிகள் சு.ம. இயக்கத்தின் மீதும், ‘குடி அரசின்’ மீதும், ஆத்திரங் கொண்டு, அவைகளை அழிப்பது என்கிற முடிவு கொண்டு நிதி வசூல் செய்து வருகிறார்கள். அவர்களின் வேண்டுகோளின் பிரகாரமே இது வரையிலும் ரூ. 250க்கு மேல் பணம் சேர்ந்திருப்பதாகவும் நமக்குத் தெரியவருகிறது.

சபாஷ்! கத்தோலிக்கர்களே!! மெச்சினோம் புத்திசாலித்தனத்தை !!!

## எல்.அய்.சி. பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பின் மண்டல மாநாடு

தென்மண்டல எல்.அய்.சி. பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் கூட்டமைப்பின் 5 ஆவது தென் மண்டல மாநாடு 4.5.2014 காலை 11 மணியளவில் தென்மண்டலத் தலைவர் இராஜசேகரன் தலைமையில் என்.கோட்டீசுவரன் முன்னிலையில் கோ.சுந்தரமூர்த்தி வரவேற்புரையுடன் தொடங்கியது. சென்னை - வருமான வரித்துறை கூட்டுறவு சங்க கட்டிடத்தில், பெரியார்-அம்பேத்கர் படங்களுக்கு - ஒலி முழக்கங்களுடன் மாலைகள் அணிவித்து தொடங்கிய மாநாட்டில் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் அன்பு தனசேகர், எஸ்.சி/எஸ்.டி. ஊழியர் நலச் சங்கத்தைச் சார்ந்த து.பாரதிதாசன், அகில இந்திய தலைவர் கி.விசுவநாதன் மற்றும் மண்டலப் பொறுப்பாளர்கள் உரையைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். கழக ஏட்டின் வளர்ச்சிக்கு ரூபாய் ஆயிரம் நன்கொடை வழங்கப்பட்டது.

## பெரியார் சாக்ரடீசுக்கு கழக சார்பில் இறுதி மரியாதை

மறைந்த பெரியார் சாக்ரடீசுக்கு மே 13 பிற்பகல் 12 மணியளவில் கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சென்னை மாவட்ட தலைவர் ஜான், பொருளாளர் வேழவேந்தன், விழுப்புரம் அய்யனாா, திருவல்லிக்கேணி பகுதி தலைவர் பிரகாசு, அமைப்பாளர் செந்தில், உமாபதி, வீரா, கேட்டரிங் மோகன், ஜேம்ஸ் உள்ளிட்ட தோழர்கள் பெரியார் திடல் சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

பெரியார் சாக்ரடீசு தந்தை திராவிட மணிக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆறுதல் கூறினார்.


“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

DATE OF PUBLICATION 21.05.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மேட்டூரில் சேலம் மண்டல கலந்துரையாடல்

17-05-2014 காலை 11-00 மணி முதல் மாலை 5-30 வரை, மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில், சேலம் மண்டல திராவிடர் விடுதலைக் கழக கலந்துரை யாடல் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. சேலம் மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மாநகரம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழகங்களின் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். பொறுப்பாளர் களும் தோழர்களுமாக சுமார் 80 பேர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். கழக அமைப்பு முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டு, தோழர்களின் விவாதத்திற்கு பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. பெரியாரிய கருத்துக்களை தமிழ் நாட்டிலும், வெளிநாடுகளிலும் பரப்பிய பேச்சாளாரும், மூத்த பெரியார் தொண்டரும், தலை சிறந்த எழுத்தாளரும், நாடக ஆசிரியருமான, தோழர் திருவாரூர் தங்கராசு அவர் களுடைய மறைவிற்கும், சேலம் மாவட்டம் மல்லிகுந்தம் கழகத் தோழர் தம்புசாமி, உக்கம் பருத்திக்காடு தோழர்கள் ஆ.மணி, மு.குமாரசாமி ஆகியோர் மறைவிற்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப் பட்டது.
2. வருகிற ஜூன் 14,15 ஆகிய நாள்களில் சேலம் மண்டல பொருப்பாளர்கள் பயிற்சி வகுப்பு ஏற்காட்டில் நடத்துவது என முடிவுசெய்யப்பட்டது.
3. கழகப் பரப்புரை வாகனத்தைப் பயன்படுத்தி சேலம் மண்டலத்தில் நான்கு மாவட்டங்களிலும் பகுத்தறிவுப் பரப்புரை கூட்டங்கள் நடத்துவது என தீர்மானிக்கப் பட்டது.



4. கழகத்தின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு, இடை நீக்கம் செய்யப்பட்டிருந்த தோழர்கள் நங்கவள்ளி பொ. கிருஷ்ணன், மா.அருள்குமார், சேலம் ப.அம்பிகாபதி ஆகியோர் அளித்த விளக்கங்களை ஏற்றுக் கொண்டு, அவர்களை மீண்டும் கழகத்தில் இணைந்து பணியாற்ற அனுமதித்து முடிவு செய்யப் பட்டது.
5. சேலம் மண்டல பெண் தோழர்களுக்கான இரண்டாம் நிலை பயிற்சி வகுப்பு விரைவில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

# மல்ல சமுத்திரத்தில் கழகத்தின் ஒரு நாள் பயிற்சி வகுப்பு

11-05-2014 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10-00 மணி முதல் 6-00 மணி வரை, நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம் ஒன்றியம் வெங் கடேசபுரி சமுதாய நலக் கூடத்தில், புதிய தோழர்களுக்கான ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. ஜாதியம் பற்றி மேட்டூர் ஜஸ்டின்ராஜ், பொதுவுடமை பற்றி தோழர் ஜவஹர் (பழனி-திண்டுக்கல்), கழக அமைப்பு முறை பற்றி கழக அமைப்புச் செயலாளர் தி.தாமரைக்கண்ணன் ஆகியோர் வகுப்பு எடுத்தனர். மல்லசமுத்திரம் ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வகுப்பில், மல்ல சமுத்திரம், காளிப்பட்டி, திருச்செங் கோடு, பள்ளிப்பாளையம், குமார பாளையம், மின்னக்கல், சங்ககிரி ஆகிய பகுதிகளில் இருந்து மூன்று பெண்கள் உட்பட 50 தோழர்கள் கலந்துகொண்டனர். அனைவருக்கும் மதியம் அசைவ உணவு வழங்கப் பட்டது. மாவட்ட செயலாளர் வைர வேல், மல்லசமுத்திரம் ஒன்றிய செய லாளர் பெரியண்ணன், அமைப்பாளர் கண்ணன், கோபி, இரமேஷ் ஆகி யோர் நிகழ்ச்சிக்காக பணியாற்றினர்



# இந்தியாவை சூறையாடுவதற்கு உரிமம்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்க, கம்பெனியை மைக்ரோ சாஃப்ட் என்ற பன்னாட்டு பகாசுர நிறுவனத்திற்கு மடைமாற்றி விற்றுவிட்டு கம்பீ நீட்ட தயாரானது நோக்கியா.

கடந்த டிசம்பரில் நோக்கியாவின் இந்த ஆலையை மைக்ரோ சாப்ட் நிறுவனத்திற்கு கைமாற்றிவிட வேண்டுமென முடிவாகியிருந்த நிலையில், வருமான வரித் துறை தில்லி உயர்நீதிமன்றத்தின் ஒப்புதலோடு நோக்கியா இந்தியா நிறுவன சொத்துக்களை முடக்கியது. இதற்குப் பின்னரும் வரிபாக்கியை கட்ட நோக்கியா தயாராக இல்லை. ஒரு சொத்து என்ற முறையில் சென்னை ஆலைக்கு எந்த மதிப்பும் கிடையாது. நாங்கள் அந்த ஆலையின் பயன்பாட்டு உரிமையைத்தான் மைக்ரோ சாப்ட்டுக்கு விற்கிறோம். அதனை பயன்படுத்துவதோ, கைவிடுவதோ மைக்ரோ சாப்ட்டின் விருப்பம், எங்கள் சொத்துக்களை விற்க எங்களுக்கு உரிமையுள்ளது. தடைகளை விலக்கினால் தான் சொத்துக்களை விற்க முடியுமென வாதிட்டது. இறுதியில் தீர்ப்பு அதற்குச் சாதகமாகவே அமைந்தது.

முடக்கப்பட்ட நோக்கியா நிறுவன சொத்துக்களை விடுவித்ததும் இடைக்கால தொகையாக ரூ.2 ஆயிரத்து 250 கோடிகளை மத்திய அரசுக்கு செலுத்துவதோடு, முழுத் தொகையைச் செலுத்துவதற்கான வாக்குறுதியை அளிக்க வேண்டும் என உத்தரவிட்டு தில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இப்படியொரு சமரச ஏற்பாட்டை செய்யாவிட்டால் தொழிலாளர்களின் வாழ்க்கை பறிபோய்விடுமென சாக்கும் சொல்லப்படுகிறது. வரி ஏய்ப்பு, வியாபார பித்தலாட்டம், சுரண்டல், கொத்தடிமைத்தனம், கொலை, விபத்து என பலவிதமான கிரிமினல் குற்றங்களை செய்துள்ள நோக்கியா இந்திய கைப்பேசி சந்தையில் 50 சதவீதத்தைத் தன்னகத்தே கொண்டிருந்தது என்பதுதான் உண்மை. ஏய்த்த வரியை கட்டச் சொன்னவுடன் இந்தியாவில் தனக்கு நீதி மறுக்கப்பட்டதாக வாதாடுகிறது. இந்தியாவும் - பின்லாந்தும் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தத்தின்படியும், இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தத்தின்படியும் இந்த வரியை இந்திய தேசத்திற்கு கட்டத் தேவையில்லையென வாதிடுகிறது. இந்த சூழலில்தான் மைக்ரோ சாப்ட் என்ற பகாசுர நிறுவனத்திற்கு நோக்கியாவை 5.44 பில்லியன் யூரோ (சுமார் 48 ஆயிரம் கோடி ரூபாய்)வுக்கு மடைமாற்றிவிடப்பட்டுள்ளது. பெரும் நிறுவனங்கள் லாப நோக்கில் ஒன்றையொன்று விழுங்குவது உலகமய நிகழ்ச்சி நிரலில் வெகு சாதாரணம். ஸ்டேட் வங்கி, எல்.ஐ.சி. போன்ற நிதியாதாரங்களை அதிகமாகக் கொண்ட இந்திய பொதுத் துறை நிறுவனங்கள் பிற கம்பெனிகளையும், பங்குகளையும் வாங்குவதற்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகளையும், தடைகளையும் போடும் மைய அரசு மைக்ரோ சாப்ட் போன்ற பன்னாட்டு பகாசுரர்களுக்கு மட்டும் பட்டுக் கம்பளம் விரித்து தாராளம் காட்டுகிறது.

பன்னாட்டு தொழற் குழுமங்களையும், அந்நிய முதலீடுகளையும் பட்டுக் கம்பளம், ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கும் மத்திய அரசு, இரட்டை வரி தவிர்ப்பு, இருதரப்பு முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தம், விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் என புதுப்புது பெயர்களில் முதலீட்டு ஒப்பந்தங்களை ஏறத்தாழ 80 நாட்டு நிறுவனங்களுடன் போட்டு வைத்திருக்கிறது. இந்த ஒப்பந்தங்கள் இந்தியாவின் எல்லா வகையான பாதுகாப்புச் சட்டங்களையும் நீர்த்துப் போகச் செய்யுமளவுக்கு ஷரத்துக்களை உள்ளக்கியது. அந்நிய முதலாளிகள் இந்தியாவை சூறையாட கொடுத்த லைசென்சாகவும் உள்ளது. நோக்கியா போன்ற நிறுவனங்கள் இந்தளவுக்கு தில்லுமுல்லுகளில் ஈடுபட்டதை அரசு கைகட்டி வேடிக்கையே பார்த்துள்ளது.

**நன்றி: 'தீக்கதிர்' நாளேடு**

குறிப்பு : ரூ.2400 கோடி தமிழக அரசுக்கு செலுத்த வேண்டிய 'வாட்' வரியை செலுத்தக் கோரி, நோக்கியா மீது தமிழக அரசு தொடர்ந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் அண்மையில் தள்ளுபடி செய்து ரூ.240 கோடி மட்டும் 'டிபாசிட்'டாக கட்டினால் போதும் என்று கூறிவிட்டது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் மிகுந்த ஆர்வத்துடன் கோயில் பூசைகள், சடங்குகள் ஆகியவற்றை அனைத்துச் சாதியினரும், குறிப்பாக பார்ப்பனரல்லாதோர் செய்ய வேண்மென்று விரும்பினோம். அதற்கேற்ப உச்சநீதிமன்றத் தீர்ப்பு கிடைத்துள்ளது என்றார்.

40 ஆண்டுகாலமாக நடந்த வழக்கு இது. பாத்துவே, உத்பத்து ஆகிய பார்ப்பன குடும்பங்களின் ஏகபோக உரிமையை கடந்த ஜனவரியில் உச்சநீதிமன்றம் ரத்து செய்தது. இதன் தொடர்ச்சியாக, இப்பொழுது தாழ்த்தப்பட்ட வர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் பெண்களும் அர்ச்சகராகலாம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 22nd May 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2045 மே 29, 2014 புரட்சி 13 முழக்கம் 20 விலை: ரூ.3.00

# ராஜபக்சே வாழ்த்து; சாமியார்கள் ஆசி; கார்ப்பரேட் முதலாளிகள் மகிழ்ச்சி!

- 45 அமைச்சர்களுடன் (23 பேர் கேபினட் அமைச்சர்கள்; 22 இணை அமைச்சர்கள்) மோடி பிரதமராக மே 26 அன்று பதவி ஏற்றார். தமிழகத்தைச் சார்ந்த ஒருவர்கூட 'கேபினட்' அமைச்சராகவில்லை. வெற்றி பெற்ற ஒரே பா.ஜ.க. வேட்பாளர் பொன். இராதாகிருஷ்ணன் இணை அமைச்சராகியுள்ளார்.
- திருச்சியில் படித்து, டெல்லியில் தங்கிவிட்ட நிர்மலா சீதாராமன் (பார்ப்பனர்) தேர்தலில் போட்டியிடாமலேயே இணை அமைச்சராகி விட்டார்.
- சுஷ்மா சுவராஜ், மேனகா, நஜ்மா ஹெப்துல்லா, ஹர்ஸ்மிரத் கவுர் பதல், உமாபாரதி, ஸ்மிருதி ராணி என 6 பெண்கள் கேபினட் அமைச்சர்களாகி யுள்ளனர்; மேலே குறிப்பிட்ட பெண் இணை அமைச்சர்.
- பா.ஜ.க. வைச் சார்ந்த அன்புமணிக்கு அமைச்சர் பதவி கிடைக்கவில்லை. மருத்துவ கவுன்சில் அங்கீகாரம் இல்லாமலேயே இந்தூரில் மருத்துவக் கல்லூரி தொடங்க, அமைச்சராக இருந்தபோது அன்புமணி அனுமதித்ததற்காக அவர் மீது சி.பி.அய். வழக்கு உள்ளது. அதன் காரணமாகவே பதவி வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.
- பதவி ஏற்பு நிகழ்வில் காவி உடை தரித்த 'சாமி யார்கள்' முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர். ஒருவர் கையில் தண்டத்துடன் அமர்ந்திருந்தார். முகேஷ், அனில் அம்பானி, கவுதம் அதானி, குமார் மங்கலம் பிர்லா, ஆனந்த் மகிந்த்ரா உள்ளிட்ட தொழிலதிபர்கள் விழாவில் பங்கேற்றனர். காங்கிரஸ் ஆட்சியைவிட மோடி ஆட்சி கார்ப்பரேட்டுகளுக்கு நெருக்கமான ஆட்சியாக இருக்கும் என்பதை விழா உணர்த்தியதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.
- உ.பி.யைச் சார்ந்த 9 பேரும், மகாராஷ்டிராவைச் சார்ந்த 6 பேரும், பீகார், மத்திய பிரதேசம், கருநாட கத்தைச் சார்ந்த தலா 4 பேரும் அமைச்சராகி யுள்ளனர். கேரளா, மேற்கு வங்கம், நாகாலாந்து, மிசோராம், மணிப்பூர், இமாச்சல், உத்தரகாண்ட், சிக்கிம், திரிபுராவைச் சார்ந்த ஒருவருக்குக்கூட அமைச்சரவையில் இடமில்லை. அத்வானி, முரளி மனோகர் ஜோஷிக்கும் அமைச்சரவையில் இடமில்லை.



- "என்ன காரணத்தினாலோ, என்னை அமைச்சராக்கவில்லை; அது மோடிக்கு உள்ள தனித்த உரிமை" என்று தனது வலைதளத்தில் புலம்பியுள்ளார் சுப்ரமணியசாமி.
- ஆர்.எஸ்.எஸ். தத்துவத்துக்கு உயிர்ப் பலியான காந்தியின் நினைவிடத்தில் ஆர்.எஸ்.எஸ். வளர்ப்பான மோடி மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.
- ராஜபக்சே - மோடியின் அழைப்பை ஏற்று பதவி ஏற்பு நிகழ்வில் பங்கேற்றார். இனப் படுகொலை செய்த ராஜபக்சே பங்கேற்கக் கூடாது என்று தமிழ்நாட்டில் மூண்டெழுந்த கடும் எதிர்ப்பை மோடி அலட்சியப்படுத்திவிட்டார். மோடிக்கு புகழாரம் சூட்டி வந்த வைகோ., டெல்லியில் ராஜபக்சே வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி கைதானார்.
- ராஜபக்சே வருகையை மோடி அரசு தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிக்கை விட்டுள்ளது தமிழ்நாடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி! ஞானதேசிகன் - ராஜபக்சே வருகையை ஆதரிக்க அதே கட்சியைச் சார்ந்த ஜி.கே. வாசன் எதிர்த்துள்ளார். தமிழர்கள் எதிர்ப்புக் காரணமாக நடிகர்கள் ரஜினி, விஜய் டெல்லி போகவில்லை என்று செய்திகள் கூறுகின்றன.
- ராஜபக்சே வருகையை எதிர்த்து, ஏற்கனவே தமிழக சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை சுட்டிக் காட்டி, தமிழக முதல்வர் பதவியேற்பு விழாவை புறக் கணித்தார். தனது பிரதிநிதியையும் அனுப்பவில்லை. அமைச்சர் பதவியை எதிர்பார்த்த பா.ம.க. எதிர்ப்பை அடக்கி வாசித்தது. ராஜபக்சேயை மட்டும் அழைத்திருந்தால் எதிர்க்கலாம் என்று விஜயகாந்த் போலி சமாதானம் கூறி டெல்லி போனார்!
- உ.பி.யில் அமைச்சராகியுள்ள பஸ்வான் - தலித் தலைவர், ராஜ்நாத் சிங் தாக்கூர், உமாபாரதி லோத் எனும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர், கல்ராஜ் மிஸ்ரா (பார்ப்பனர்), மேனகா (சீக்கியர்), கங்வார் (குர்மி எனும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்) பாலியான் (ஜாட் சமூகம்) - அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள 74 வயது நிறைந்த நஜ்மா ஹெப்துல்லா மட்டுமே ஒரே முஸ்லீம் பிரதிநிதி.
- மோடியின் பிரதம செயலாளராக நியமிக்கப் பட்டுள்ள நிர்பேந்திர மிஸ்ரா, ஓய்வு பெற்ற பார்ப்பனர். அய்.எம்.எப். உலக வங்கியுடன் தொடர்பு கொண்டு நிதியமைச்சகத்தில் பணி யாற்றியவர். கார்ப்பரேட் நிறுவனங்களுடன் நெருக்கமானவர். தயாநிதி மாறன் தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்தபோது நிர்வாக செயலாளராக இருந்தவர். ஆம் ஆத்மி கட்சியை கடுமையாக விமர்சித்து கட்டுரைகளை எழுதியவர்.

# தூக்குத் தண்டனையை ஒழிக்க சட்ட வாரியம் கருத்து கேட்கிறது

இந்தியாவில் 'தூக்குத் தண்டனை'யை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று சட்ட ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இது குறித்து கடந்த மே 23 ஆம் தேதி சட்ட ஆணையம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தூக்குத் தண்டனைக் குறித்து விரிவான ஆய்வுகள், விவாதங்கள் தேவை. இந்த விவாதங்களும் ஆய்வுகளும் சட்டத்தை உருவாக்குவோருக்கும் நீதித்துறைக்கும் பயன்பெறத்தக்க வகையில் உதவிட வேண்டும். தூக்குத் தண்டனைக்கு எதிராக உருவாகி வரும் சர்வதேசப் போக்கினைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

கடந்த பத்தாண்டுகளில் தூக்குத் தண்டனைக் குறித்து உச்சநீதிமன்றம் தீவிரமாக கவனம் செலுத்தி வருவதை சுட்டிக் காட்டும் இந்த அறிக்கை, இந்த தண்டனையை வழங்குவதில் ஒரே சீரான அணுகுமுறை மேற்கொள்ளப்படாததை சுட்டிக் காட்டியுள்ளது. சட்ட ஆணையம் இது குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று பல நேரங்களில் உச்சநீதிமன்றமே பரிந்துரைத்துள்ளது. கருணை மனுக்களை பரிசீலிப்பதில் நீண்ட காலதாமதம் செய்வது உயிர் வாழும் அடிப்படை உரிமைக்கு எதிரானது என்ற அடிப்படையில் 15 பேர் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்சநீதிமன்றம் அண்மையில் குறைத்துள்ளது.

தூக்குத் தண்டனையை சட்டத்தில் வைத்துள்ள 59 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. தூக்குத் தண்டனை தவறாக விதிக்கப்படும் நிலையில் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள கருணை காட்டும் அதிகாரம் போதுமான பாதுகாப்பாக இருக்க முடியுமா? கருணை மனுவை நீண்டகாலம் கிடப்பில் போடுவது அடிப்படை உரிமைக்கு எதிரானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தப் பிறகு கருணை காட்டும் அதிகாரத்தின் பாதுகாப்பு - தவறான தூக்குத் தண்டனைகளை தடுத்து நிறுத்தப் பயன்படுமா? என்பது குறித்து விவாதங்கள் நடத்தப்பட வேண்டும் என்று ஆணையத்தின் அறிக்கை கூறுகிறது. உலகில் 140 நாடுகளில் தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டுள்ளன. 20 நாடுகளில் சட்டத்தில் இந்தத் தண்டனை இருந்தாலும் 10 ஆண்டுகளாக அதைப் பயன்படுத்தாமல் நிறுத்திவிட்டன. இது குறித்து 30 நாட்களில் மக்கள் தங்கள் கருத்துகளை ஆணையத்துக்கு அனுப்பலாம் என்று ஆணையத்தின் அறிக்கை கூறுகிறது.

## மூட நம்பிக்கையால் பாழாகும் தாமிரபரணி

'நெல்லை தாமிரபரணி கல்யாண தீர்த்தம் தூய்மை அறக்கட்டளை'யும் ஐந்திணைத் தொண்டு நிறுவனமும், ஊர்க்காவல் படையினருடன் இணைந்து பாபநாசம் தாமிரபரணி ஆற்றைச் சுத்தம் செய்தபோது ஆற்று மணலில் புதையுண்டுக் கிடந்த சுமார் 125 டன் அழுக்குத் துணிகளை வெளியே எடுத்திருக்கிறார்கள். இவையெல்லாம் நேர்த்திக் கடனுக்காக பக்தர்கள் வீசி எறிந்தவை. இதில் பட்டுச் சேலை, வேட்டிகளே அதிகம். இதுபோன்ற அழுக்குத் துணி மற்றும் பூஜைப் பொருட்களால் ஆற்று நீர் கடுமையாக மாசுபடுகிறது என்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

திதி கொடுக்கும்போது புதிய வேட்டி, சேலைகளை ஆற்றில் போட்டால் அது முன்னோர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடும் என்பது நம்பிக்கை. இதனால் தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் மாசுபட்டு பிற உயிரினங்கள் வாழ லாயக்கற்றதாகப் போய் விட்டது. நீரின் மேல் எண்ணெய்ப் படலம் தேங்கி நிற்பதால் ஆக்சிஜன் குறைவு ஏற்பட்டு மீன், தவளைகள் அழிந்து போகின்றன. தண்ணீருக்குள் கிடக்கும் உடைந்த பாட்டில்களால் தினமும் பத்து பேருக்காவது ரத்தக் காயம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி இருக்கிறது என்று கூறுகிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

### அடக்குமுறைகளை எதிர்கொண்ட சுயமரியாதை இயக்கம்

# நாகம்மையார் மறைவு ; கிறிஸ்துவ திருமணம் ; நிலவிய சூழல்

***15–05–2014, 22–05–2014 ஆகிய நாள்களிட்ட 'புரட்சிப் பெரியார் முழக்கத்தில்' நாகம்மையார் மறைவு – அடுத்து தடையை மீறி நடத்தப்பட்ட கிறிஸ்துவர் சுயமரியாதைத் திருமணம் – அதன் தொடர்ச்சியாக வெளிவந்த 'கத்தோலிக்கர்களே, இனி பலிக்காது' என்ற கட்டுரை ஆகியவற்றை வெளியிட்டிருந்தோம்.***

***இவை தொடர்பான வேறு சிலவற்றையும், அதாவது அந்த நாட்களில் நிலவி வந்த சமூக, அரசியல் சூழல்களையும் சற்று நோக்குவோம்.***

அப்போது நாட்டை ஆண்டு வந்த ஆங்கில அரசு சில ஆண்டுகளாகவே பொதுவுடைமைக் கருத்துப் பரவலுக்கு எதிரான அடக்குமுறைகளைத் தொடங்கியிருந்தது.

1929 ஆம் ஆண்டே எஸ்.ஏ.டாங்கே, அதிகாரி, தேசாய் முதலிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் 32 பேர்கள் மீது "இந்தியாவில் பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சியைக் கவிழ்க்க" சதி செய்ததாக வழக்குத் தொடுத்திருந்தது. "மீரட் கம்யூனிஸ்ட் சதி வழக்கு" என்று அறியப்பட்ட அவ்வழக்கு ஏறத்தாழ நான்காண்டுகள் நடைபெற்று, அவ்வழக்கில் இருந்தோரில் 5 பேர்களை விடுதலை செய்தும் மீதி 27 பேருக்கும் மூன்று ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரையிலான சிறை தண்டனை வழங்கி 1933 ம் ஆண்டின் தொடக்கத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இது குறித்து 22-01-1933 நாளிட்ட 'குடிஅரசு' தலையங்கத்தில் "இந்த 27 பேர் மாத்திரமல்ல; இன்னும் 270 பேர்களையும் சேர்த்து தூக்கில் போட்டிருந்தாலும் சரி, நாம் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை" என்றும் இதனால் "பொதுவுடைமைக் கொள்கை என்பது, அதாவது முதலாளிகளின் ஆட்சியை சிதைத்து நசுக்கி, சரீரத்தால் பாடுபடுகின்ற மக்களுடைய ஆட்சிக்கு உலக அரசாங்கங்களையெல்லாம் திருத்தியமைக்க வேண்டும் என்கிற கொள்கையோ, உணர்ச்சியோ அருகிப் போய்விடும் பயம் நமக்கில்லை" என்று அழுத்தமாகக் குறிப்பிட்டு பெரியார் எழுதியிருந்தார்.

1932 டிசம்பர் 28, 29 ஆகிய நாட்களில் ஈரோட்டில் சுயமரியாதை இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் அனைவரையும், தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று அறியப்படும் தோழர் மா.சிங்கார வேலரையும் அழைத்து செயல் திட்டக் கூட்டம் ஒன்றை நடத்தினார். அதில் சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் பிரிவாக 'சுயமரியாதை சமதர்மக் கட்சி' என்ற ஒன்றையும் உருவாக்கினார்.

மேலும் அக்கூட்டத்தில் "பிரிட்டிஷ் முதலிய எவ்வித முதலாளித் தன்மை கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவை பூரண விடுதலை அடையச் செய்வது" என்ற முதல் தீர்மானத்தையும் நிறைவேற்றியிருந்தார்.

அதற்கு முன்பாகவே, ஈரோட்டில் 10-5-1930 அன்று நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் "எந்த பொதுக் கூட்டங்களிலும் ஆரம்பத்திலாவது முடிவிலாவது ராஜ வணக்கம், கடவுள் வணக்கம், தலைவர் வணக்கம் ஆகியவைகள் செய்யும் காரியத்தை விட்டுவிட வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது" என்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதுவரை நடந்துவந்த எல்லா காங்கிரஸ் மாநாடுகளிலும்கூட மாநாட்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் அரசரை வாழ்த்தியும், அவராட்சித் தொடர கடவுளைப் பிரார்த்தித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டே வந்துள்ளது என்பதை இணைத்துப் பார்த்தால் தான் மேற்கண்ட தீர்மானத்தின் தாக்கம் புரியும்.

அதோடு நின்றதா ? 1931 ஆகஸ்டில் விருதுநகரில் நடைபெற்ற சுயமரியாதை வாலிபர் மாநாட்டின் முதல் தீர்மானமே, "சமதர்ம தத்துவமும் பொதுவுடைமைக் கொள்கையும் நாட்டில் ஓங்க வேண்டும் என்பதே நமது இலட்சியமாய் இருக்கிறபடியால், விதி, கடவுள் செயல் என்பன போன்ற உணர்ச்சிகள் மக்கள் மனதிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும்" என்பதே முதல் தீர்மானமாக இருந்தது.

அதுமட்டுமல்லாமல், சுயமரியாதை இயக்கத் தலைவரான பெரியார் 1931 டிசம்பர் முதல் 1932 நவம்பர் வரையிலான ஏறத்தாழ ஓராண்டு காலம் உலக சுற்றுப்பயணம் செய்துவிட்டு, அதிலும் சோவியத் ரஷ்யாவில் மட்டும் மூன்று மாதம் தங்கியிருந்து சோசலிச அரசின் கூட்டுப் பண்ணைத் திட்டங்கள், கல்வி முறை, சுகாதார முறை என அனைத்து செயல்பாடுகளையும் நுணுகிப் பார்த்தறிந்ததோடு, 1932 ஆம் ஆண்டின் மே தின விழாவிலும் அரசின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று விட்டு திரும்பியிருந்தார்.

அவை மட்டுமில்லை. 1848 லேயே வெளியிடப் பட்டிருப்பினும், மார்க்சும் எங்கல்சும் எழுதி சமர்ப்பித்திருந்த, முதலாம் அகிலம் ஏற்றுக்கொண்டிருந்த 'கம்யூனிஸ்ட் கட்சி' அறிக்கையை இந்திய மொழிகளில் எதிலும் அதுவரை மொழிபெயர்த்து வெளியிடப்படாதிருந்த சூழலில் 4-10-1931 முதல் தொடர்ச்சியாக 'குடிஅரசு' இதழில் மொழிபெயர்த்து வெளியிட்டு வந்திருந்தார் பெரியார்.

அது போலவே 30-4-1933 நாளிட்ட 'குடிஅரசி'ல் 'குடிஅரசு ஒன்பதாம் ஆண்டு' என்ற தலைப்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல், முன் அட்டையிலேயே வெளியிடப்பட்டிருந்தது.

" .............................................

*கண்கலங்கும் ஏழ்மைக்கு விடைகொடுக்கத்*
*தலை நிமிர்ந்து சமதர்மப் போரில் ஏறி*
*சக முழங்கும் குடிஅரசே நீயும் உன்றன்*
*உலவு சுயமரியாதைப் புலிக் குழாமும்*
*ஒன்பதாம் ஆண்டினிலே வெல்க நன்றே !*

*போர் முகத்தில் அணிவகுக்க இன்றழைத்தாய் !*
*பொதுவுடைமை முரசறையக் கோலெடுத்தாய் !*
*ஓர் முகத்தில் சந்தோஷம் ஓர் முகத்தில் வாட்டம்*
*உண்டாக்கும் அரசியலை விழிநெறித்தே*
*ஊர்முகத்தில் நிற்காதே என முழங்க*
*ஒன்பதாம் ஆண்டிலேயே உயர்ந்தாய் இந்நாள் !*
*பார் முகத்தை சமப்படுத்த ஓகோ கோ கோ*
*பரந்தோதுகின்றாய் நீ வாழி நன்றே !"*

என்று பொதுவுடைமையை வரவேற்று, அதைப் பரப்பும் குடிஅரசை வாழ்த்தும் பாடலே அது.

**பொதுவுடைமை கொள்கைகளை ஆதரித்ததாலும், கிறிஸ்தவ மதத்தை எதிர்த்ததாலும் கடும் அடக்குமுறைகளை பெரியாரும் 'குடிஅரசு'ம் எதிர் கொண்டன.**

**இக்கட்டுரை, நாகம்மையார் மறைவைத் தொடர்ந்து பெரியார் நடத்தி வைத்த புரோகித மறுப்பு கிறிஸ்தவ திருமணம் நடந்த வரலாற்றுச் சூழலை விளக்குகிறது.**

இவ்வாறு அரசினர் அடக்கி ஒடுக்க எண்ணும் பொதுவுடைமைக் கொள்கைகளை உயர்த்திப் பிடிக்கும் செயல்பாடுகள் ஒரு புறம்; அரசினர் மதமான கிறிஸ்துவத்தைக் கடுமையாக விமர்சிக்கும் மத எதிர்ப்பு செயல்பாடுகள் மறு புறம்.

அதே 'குடிஅரசு' இதழின் 12 ஆம் பக்கத்தில் "பாதிரிகள் கோபம் 'தமிழ்நாடு' தலையங்கக் குறிப்புகள்" என்ற தலைப்பில் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்க, ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவ பாதிரிகள் முன்வந்திருப்பது தென்னிந்திய சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க விஷயமாகும் என்று தொடங்கி, "ஹிந்துக்களும், ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவர்களும் நீதியுள்ள சமத்துவ தர்மத்தை ஏற்றுக்கொண்டு, அதை அமுலுக்குக் கொண்டு வருவதே சிறந்த - சமயோஜிதமான முறையாகும். அதை விட்டு குறுக்கு வழியில் சென்று 'சுயமரியாதை' மீதில் பாய்வதில் பிரயோஜனமில்லை" என்று அத் தலையங்கம் முடியும், பெரியாரின் நண்பரான டாக்டர் வரதராஜுலுவின் 'தமிழ்நாடு' இதழில் வெளிவந்திருந்த தலையங்கத்தை 'குடிஅரசு' வெளியிட்டது.

அதே பக்கத்தில் "மதமும் வாழ்க்கையும் 'மெயில்' பத்திரிக்கை தலையங்கக் குறிப்புகள்" என்ற தலைப்பில் ஒரு செய்திக் குறிப்பு இடம் பெற்றிருந்தது. "சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் மதத்தைக் கண்டனம் செய்து பேசிய ஒருவர், மக்களிடமிருந்து மத சம்பந்தமான எண்ணங்களை வேரோடு கல்லி எறிய வேண்டும் என்று கூறிய பொழுது யாதொரு குழப்பமும் செய்யாமல் ஜனங்கள் பொறுமையாய்க் கேட்டுக் கொண்டிருந்ததை" என ஆதங்கத்தோடு 'மெயில்' எழுதியிருந்ததையும் 'குடிஅரசு' வெளியிட்டிருந்தது.

அதே இதழின் 14 ஆம் பக்கத்தில் 'குடிஅரசு ஒன்பதாவது ஆண்டு' என்று தலைப்பிடப்பட்டு வெளியாகியுள்ள தலையங்கத்தில் "இந்த நிலையில் எட்டாம் ஆண்டைக் கடந்து 9ஆம் ஆண்டில் பிரவேசிக்கின்றது. ஆரம்பம் வெகு உக்கிரமான எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டிய பொறுப்புகள் அதன் தலைமீது விழுந்து கிடக்கின்றது என்பதை "இந்து, முஸ்லீம், கிறிஸ்துவ வருணாசிரமக்காரர்களும், சனாதனதர்மிகளும் உறுமும் உறுமலைப் பார்த்தாலே தெரியவரும்" என்று எழுதியிருப்பதிலிருந்து கிறிஸ்துவ மதவாதிகளின் எதிர்ப்பைப் புரிந்துகொள்ள முடியும்.

அதே இதழின் 16 ஆம் பக்கத்தில் ஈரோடு டெய்லர் எம். ஆரோக்கியசாமி என்பவர் "கத்தோலிக்க வாலிபர்களே! எழுந்திருங்கள் ! முன்வாருங்கள் !" என்ற தலைப்பில் ஒரு பதிவிட்டுள்ளார். அதில் "..நம்மைப் போல் பிறரையும் நேசி என்பதை வாயில் சொல்லிக்கொண்டு காரியத்தில் மாறாய் நடக்கின்றோம். சர்வேசுவரனுடைய தேவாலயத்தில் மேல் ஜாதி வேறாகவும் கீழ் ஜாதி வேறாகவும் சர்வேசுவரனைப் பிரார்த்திப்பது நம் மதத்திற்கு நியாயமா?" என்று எழுதியிருப்பதும் கவனிக்க வேண்டிய ஒன்றாய் உள்ளது.

அதே இதழின் (30-04-1933) 19ஆம் பக்கத்தில் "பக்திக்கு லஞ்சம்" என்ற தலைப்பில் அமெரிக்காவில் ஒரு மாதாகோவில் பிரார்த்தனைக்கு வருவோர் மோட்டார் (கார்)களுக்கு இனாமாக பெட்ரோல் அடிக்கப்படும் என்று அறிவித்திருப்பதைக் கேலி செய்து "ஏசுவின் சீடர்கள் மேல் நாடுகளில் இப்படி இருக்கும் போது, இங்கு சர்க்காரை ஆதரிக்க பதவிகளைக் கொடுப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது ?" என்று குத்தலாகக் கேட்டிருப்பதும் வெளியிடப்பட்டுள்ளது.

அதே இதழின் 20 ஆம் பக்கத்தில் "மத வரிக் கொள்ளை கத்தோலிக்க கிறிஸ்து மத தேவத்திரவிய அனுமானங்களும் அக்கிரம வரிகளும்" என்ற தலைப்பில் தோழர் யோ.அ.தாஸ் என்பவர் கத்தோலிக்க மதத்தைக் கண்டித்து விரிவான கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

அவ்விதழின் பிறிதொரு பக்கத்தில் "9-4-33 அன்று சென்னை 'கத்தோலிக்க லீடர்' பத்திராதிபர் தாமஸ் சுவாமியார் தலைமையில் நடைபெற்ற கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களின் போலிக் கூட்டத்தைக் கண்டித்து, கத்தோலிக்க கிறிஸ்துவ அங்கத்தினர்களைக் கொண்டே ஒரு கண்டனக் கூட்டத்தை நடத்துவது" என சென்னை சுயமரியாதை சங்கம் தீர்மானித்திருக்கும் செய்தியும் அவ்விதழில் வெளியாகியுள்ளது.

அதே இதழின் 4ஆம், 25ஆம் பக்கங்களில் "பாதிரிகளும், பெண்களும், பாவமன்னிப்பும்" என்ற தலைப்பில் செனிக்யூ பாதிரியாரின் தொடர்க் கட்டுரையும்,

5ஆம், 23ஆம் பக்கங்களில் தோழர் குத்தூசி குருசாமி "கத்தோலிக்கர்களின் ஆவேசம்" என்ற தலைப்பில் ஏப்ரல் 17ஆம் தேதி, ஜார்ஜ் டவுன் செயிண்ட் மேரீஸ் ஹாலில் சென்னை ஆர்ச் பிஷப் தலைமையில் கூடிய கத்தோலிக்கர்களின் கூட்டம் சுயமரியாதை இயக்கத்தையும், குடிஅரசு இதழையும் ஒழிப்பதற்கு பிரயத்தனங்கள் செய்யவேண்டுமென தீர்மானம் இயற்றிய செய்தி மாலை செய்தி ஏடான 'மெட்ராஸ் மெயில்' பத்திரிக்கையின் 7ஆம், 8ஆம் பக்கங்களில் அன்றைய தினமே வெளி வந்திருப்பதைச் சுட்டிக் காட்டி "தனிப்பட்ட விரோதமின்றி, பொது நலன் நோக்கில் அனைத்து மதங்களையும் விமரிசித்து வரும்போது கத்தோலிக்கர்கள் மட்டும் ஏன் ஆவேசங்கொண்டு கிளம்புகிறார்கள்?" என்ற கேள்வியை எழுப்பி பெர்னாட் ஷா, பெட்ரண்ட் ரசல், பாதிரியாக இருந்து மனம் திருந்தி மூன்று தொகுதிகளாக கிறிஸ்துவ மத தத்துவம், நடைமுறை ஆகியவற்றை விமர்சனம் செய்து எழுதிச் சென்றுள்ள

(3 ஆம் பக்கம்)

# கிறிஸ்துவத்தை எதிர்த்ததற்காக ‘குடிஅரசு’ முடங்கியது ‘இஸ்லாமை’ எதிர்த்ததற்காக “புரட்சி” ஏடு நின்று போனது

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*ஜீன் மெஸ்லியர் ஆகியோரைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.*

*அதோடு “சில மாதங்களுக்கு முன்பு மைலாப்பூரில் சில கத்தோலிக்க மக்கள் புரோகிதத்தை ஒழித்து - தரகர் இல்லாமல் சில திருமணங்கள் நடத்தினார்கள். (திருச்சி ஜில்லாவிலும் தஞ்சை ஜில்லாவிலும் இது போல நூற்றுக்கணக்கான திருமணங்கள் நடந்திருக்கின்றன) இதனால் பாதிரிகளுக்குக் கோபமுண்டாகி கல்யாண தினத்தில் சர்ச்சில் ‘சாவு மணி’ அடிக்கும்படி செய்தார்களாம்” என்று எழுதியிருப்பதைப் படிக்கும் போதுதான் நாம் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கும் ‘எம்.ஏ.சவுந்திரராஜன்-எஸ்.ஏ.மேரி ஆகியோரின் கத்தோலிக்கக் கிறிஸ்துவ சுயமரியாதை திருமணத்துக்கு எவ்வளவு எதிர்ப்புகள் பாதிரிகளின் தரப்பிலிருந்து வந்திருக்கும் என்பதையும், அந்த கிறிஸ்துவ பாதிரிகள், அரசினரின் போக்குக்கு எதிராக சமதர்ம (பொதுவுடைமை)க் கொள்கைகளைப் பரப்பிவரும் சுயமரியாதை இயக்கத்தை நசுக்குவதற்கு சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியாரின் மீது காவல்துறையை நடவடிக்கை எடுக்க வைப்பதற்கு எவ்வளவு, முயன்றிருப்பார்கள் என்பதை உணர முடியும்.*

*அவ்வாறான பாதிரிகளின் முயற்சிகள் அரசினர் வழியாக வெற்றிகரமாக நிறைவேற்றியதன் அடையாளமாக சில மாதங்களில் ‘குடிஅரசு’ ஏடு நின்று போனது.*

*1933 நவம்பர் 26ஆம் நாளிலிருந்து புதிதாக ‘புரட்சி’ என்ற பெயரிலான ஏட்டில் தன் கருத்துக்களைத் தொடர்ந்து முன்வைக்கத் தொடங்கினார் பெரியார்.*

*‘புரட்சி’ ஏட்டின் முதல் தலையங்கத்தில் “ ..நமது முதலாளி வர்க்க ஆட்சியானது தனது காவலாளிகளாகிய பாதிரி வர்க்கத்துக்கு அடிமையாக இருக்க வேண்டியிருப்பதால் ‘குடிஅரசை’ அதன் முதுகுப் புறத்தில் குத்தி விட்டது” என்றும்,*

*“ஆதலால் நமது ‘புரட்சிஷயானது ‘குடிஅரசை’க் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாய் பாதிரி வர்க்கத்தை அதாவது மதப்பிரச்சார வர்க்கத்தை அடியோடு அழிப்பதையே கங்கணமாய்க் கொண்டு வெளிவர வேண்டியதாகி விட்டது” என்றும் எழுதியுள்ளார்.*

*அது போலவே ‘புரட்சி’ ஏடும் அரசால் முடக்கப்பட்டபோது பெரியார், ‘பகுத்தறிவு’ என்ற பெயரில் ஓர் ஏட்டினைத் தொடங்கி வெளியிட்டார்.*

*அவ்வாறு வெளிவந்த ‘பகுத்தறிவு’ ஏட்டில் ‘மதம் ஏன் ஒழிய வேண்டும்?’ என்ற தலைப்பில் எழுதிய முதல் தலையங்கத்தில் பெரியார், “கிறிஸ்துவ மதத்தைப் பற்றி எழுதினோம் என்பதற்கு ‘குடிஅரசு’ பத்திரிக்கை நிறுத்தப்பட்டுப் போயிற்று. மகமதிய மதத்தைப் பற்றி எழுதினதற்காக ‘புரட்சி’ப் பத்திரிக்கை நிறுத்தப்பட்டு போயிற்று.*

*இந்து மதத்தைப் பற்றி எழுதுகிறோம் என்பதற்காக தினம்தோறும், நிமிஷம் தோறும் அடைந்துவரும் தொல்லையும், நசுங்கு சேஷ்டை உபத்திரவங்களும் கணக்கு வழக்கில் அடங்காது” என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து நாம் குறிப்பிட்டுள்ள கத்தோலிக்க சுயமரியாதைத் திருமணம் கத்தோலிக்கப் பாதிரிகளாலும், அவர்கள் சொற்கேட்டு இயங்கும் ஆங்கில அதிகாரிகளாலும் சுயமரியாதை இயக்கத்துக்கும் அதன் தலைவர் பெரியாருக்கும் இழைத்திருக்கக் கூடிய தொல்லைகளை நம்மால் உய்த்துணரமுடியும்.*

*இப்போது மீண்டும் அந்த கத்தோலிக்க சுயமரியாதைத் திருமண செய்திக்கு வருவோம்.*

## அழைப்பிதழ்களில் நேரம், இடம் மாற்றம்-ஏன்?

*15-05-2014 நாளிட்ட ‘புரட்சிப் பெரியார் முழக்கத்தில்’ திருச்சியில் 14-05-1933 அன்று மாலை பெரியாரால் ஒரு கத்தோலிக்கர் சுயமரியாதை திருமணம் நடத்தி வைக்கப்பட்டது குறித்தும், அதன் தொடர்ச்சியாக காவல் நிலையம் விசாரணை - விடுவிப்பு குறித்தும், அத்திருமணத்தின் மணமகனான தோழர் எம்.ஏ.சவுந்திரராஜன், 27-05-1979 அன்று எழுதிய குறிப்பை வெளியிட்டிருந்தோம்.*

*அந்தக் குறிப்போடு அக்குடும்பத்தார் நம்மிடம் கொடுத்திருந்த அழைப்பிதழையும், ‘குடிஅரசு’ ஏட்டில் வெளிவந்திருந்த அழைப்பிதழையும் வெளியிட்டிருந்தோம்.*

*மணமகன் தோழர் எம்.ஏ.சவுந்திரராஜன் திருமணத்தின் போது தென்னிந்திய இரயில்வேயில் டிராப்ட்ஸ் மேனாக பணிபுரிந்து கொண்டிருந்தவர். அவர் இன்றளவும் நம்மிடையே வாழ்ந்து வரும் மதிப்பிற்குரிய தோழர் ஆசிட் தியாகராஜனின் ஒன்று விட்ட சகோதரர் ஆவார்.*

*மணமகனின் தந்தை எம்.ஆரோக்கியசாமி (தென்னிந்திய இரயில்வே கார்டு), மணமகளின் தந்தை எஸ்அந்தோணிசாமி ( தென்னிந்திய இரயில்வே பியூல் ஸ்டேஷன் கீப்பர்) ஆகிய இருவரும், இருவரது குடும்பத்தாரும் சுயமரியாதை இயக்கத்தவர்கள் ஆவர். அதுபோலவே தோழர் ஆசிட் தியாகராஜனின் தந்தையும், தனயனும் மணமகளின் அண்ணனும், தென்னிந்திய இரயில்வே பணியாளர்கள் ஆவர்.*

*இனி அழைப்பிதழ்கள் குறித்து பார்ப்போம் !*

*மணமகனின் தந்தையார் ஆங்கிலத்தில் அச்சிட்டுள்ள அழைப்பிதழில் “14-5-1933 ஞாயிறு அன்று பிற்பகல் 3-00 மணிக்கு நகராட்சிப் பொது மன்றத்தில் (Municipal Public Hall) திருமணம் நடைபெறும் என்று உள்ளது.*

*7-5-1933 ‘குடிஅரசு’ இதழின் 12ஆம் பக்கத்தில் திருச்சி, உறையூர், தமிழ்நாடு புரோகித மறுப்புச் சங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள அழைப்பிதழில் “திருச்சி, பாலக்கரை, பருப்புக்கார தெரு 10ஆம் நெம்பர் இல்லத்தில்” 14-5-1933 ஞாயிறு மாலை 6-00 மணிக்கு என்று உள்ளது.*

> ***“இந்து மதத்தைப் பற்றி எழுதுகிறோம் என்பதற்காக தினம்தோறும் அடைந்துவரும் தொல்லை கணக்கு வழக்கில் அடங்காது”***

*ஆனால் மணமகன் எம்.ஏ.சவுந்திரராஜன் எழுதி வைத்துள்ள குறிப்பில் “1933 ஆம் ஆண்டு, மே மாதம் பதினான்காம் தேதி ஞாயிற்றுக்கிழமை இராகு காலம் (பிற்பகல்) 4-30 மணி முதல் 6-00 மணி வரை திருச்சி, தேவர் மன்றத்தில் சுயமரியாதை கத்தோலிக்கத் திருமணம் பெரியார் முன்னிலையில் நடைபெறும் என்று குறிப்பிட்டிருந்தோம்” என்று குறிப்பிட்டுள்ளார். (நகராட்சி பொது மன்றத்தை, திருச்சி நகராட்சித் தலைவராக விளங்கிய இரத்தினவேல் தேவர் நினைவாக தேவர் ஹால் என்று குறிப்பிடுவதும் உண்டு) ஆனால் அவ்வாறு அச்சிடப்பட்டிருந்த அழைப்பிதழ் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.*

*மணமகன் குறிப்பிட்டிருப்பதைப் போல இராகு காலமான 4-30 6-00 மணிக்கு நடத்திட திட்டமிட்டிருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது - ஏனெனில், சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க காலகட்டமான 1926 இல் வெறும் பார்ப்பனப் புரோகிதரை விலக்குதல் என்பதாகத் தொடங்கி, காலப்போக்கில் வட மொழி மந்திர விலக்காக முன்னேறியது. 1929 ல் பெரியார், சுயமரியாதைத் திருமணம் நடைபெறுகிறது; மகிழ்ச்சி. ஆனால் ஜாதி மறுப்பு, விதவை மறுமணம் ஓரிரு விழுக்காடு தானே உள்ளது என்று எழுத, குருசாமி குஞ்சிதம் ஆகியோரின் சாதிமறுப்புத் திருமணம் சிவகாமி சாமி சிதம்பரனார் ‘விதவை’ மறுமணம் என தொடர்ந்தது. அடுத்ததாக, நல்ல நாள், நல்ல நேரம் என்ற மூடநம்பிக்கையை உடைக்கும் அடுத்த முன்னெடுப்புக் காலகட்டம். 1933 ஆம் ஆண்டு! எனவே 4-30 - 6-30 மணி என்பதே திருமண நேரமாக முடிவு செய்யப்பட்ட நேரமாக இருக்க வாய்ப்புகள் அதிகம்*

*எப்படி இருப்பினும் மணமகனும் அவரது தந்தையும் குறிப்பிடும் மண விழா நிகழ்விடம் ஒன்றே. ஆனால் மண விழா நேரத்தை 3-00 மணி என்றும், 4-30 மணி என்றும் இருவரும் மாற்றி மாற்றி போட்டிருப்பது எதனால்?*

*மணமகனின் தந்தை தனது இரயில்வேத்துறை நண்பர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கொடுக்கும் நோக்கத்தோடு அழைப்பிதழை ஆங்கிலத்தில் அச்சிட்டிருக்கக் கூடும். மண விழா நேரத்தை 3-00 மணி என்று அச்சிட்டிருப்பதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பது புலப்படவில்லை. ஒரு வேளை இயல்பாக தாமதமாக வரும் நம்மவர்களின் பழக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு, சற்று நேரம் தாமதமாக வந்தாலும் முழு சொற்பொழிவுகளையும் கேட்கட்டும் என்பதற்காக அவ்வாறு முன்நேரம் குறிப்பிட்டு அச்சிட்டிருக்கலாம்; அல்லது ஆங்கிலேய அதிகாரிகள் 3-00 மணிக்கே வந்து மணமக்களைச் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்துவிட்டு புறப்பட்டு செல்வதற்காக அவ்வாறு குறிப்பிட்டிருப்பார்களோ என்பதை உறுதி செய்ய முடியவில்லை.*

*ஆனால் திருமண நாளுக்கு (14-5-1933) சரியாக ஒருவாரம் முன்னதாக 7-5-1933 அன்று வெளியான ‘குடிஅரசில்’ திருச்சி, உறையூர், தமிழ்நாடு புரோகித மறுப்புச் சங்கத்தின் அழைப்பாக வெளிவந்துள்ள அழைப்பிதழிலோ ‘திருச்சி, பாலக்கரை, பருப்புக்காரத் தெரு, 10ஆம் நெம்பர் இல்லத்தில் 14-5-1933 ஞாயிறு அன்று மாலை 6-00 மணிக்கு நடைபெறும்’ என்று கூறப்பட்டுள்ளது.*

*ஒரு வேளை, திருமண நாள் நெருங்க நெருங்க, கிறிஸ்துவ பாதிரியார்கள், காவல் துறைக்கும் அரசு உயர் அதிகாரிகளுக்கும், காவல் துறை, நிர்வாகத் துறை உயர் அதிகாரிகள் கொடுத்த நெருக்கடிகளைப் புரிந்துகொண்டு, சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியாரையும், ‘குடிஅரசையும்’ கூர்மையாகக் கண்காணித்துக் கொண்டிருந்த உளவுத் துறையின் கவனத்தை திசை திருப்பும் நோக்கத்தோடு கூட அவ்வாறு மண நிகழ்விடமாக வேறு ஒரு இடத்தைக் குறிப்பிட்டதும், மணவிழா நிகழ்வு முடிவடையும் நேரமான மாலை 6-00 மணியை மண விழா நேரமாகக் குறிப்பிட்டதும் இருக்கக் கூடும் என்று கருத வேண்டியுள்ளது.*

*அது போலவே தான் மணமகன், அவரது தந்தையார் அழைப்பிதழ்களின் குறிப்பிட்டுள்ள நகராட்சி அரங்கத்தின் முன்பாக ஏராளமான காவல் படையை நிறுத்தி இருந்ததாக தோழர் சவுந்திரராஜன் அவர்களது குறிப்பு கூறுகிறது.*

*அதனால் தான் பெரியார் நகராட்சி மன்றத்தில் இருந்தவர்களிடம் தோழர் பிரான்சிஸ் வழியாக தோழியர் நீலாவதி (இராம சுபரமணியம்) வீட்டில் திருமணம் என்று தகவல் கூறச் சொல்லிவிட்டு, மணமகனும், அவரது தந்தையும் அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்த நகராட்சி பொதுமன்றம் - புரோகித மறுப்புச் சங்கத்தார் ‘குடிஅரசு’ அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்த, பாலக்கரை, பருப்புக்காரத் தெரு 10ஆம் நெம்பர் இல்லம் தோழர் பிரான்சிஸ் வழியாக நகராட்சி மன்றத்தில் குழுமியிருந்த தோழர்கள், நண்பர்கள், உறவினர்களிடத்தில் கூறப்பட்ட தோழியர் நீலாவதி அம்மையார் இல்லம் என்ற இந்த மூன்று இடங்களும் அல்லாத பாலக்கரை, அந்தோணியார் தெருவில் 4ஆம் கதவெண்ணில் உள்ள மணமகனின் இல்லத்தின் மாடியில் குறைந்த மக்கள் மத்தியில் திட்டமிட்டவாறு மண நிகழ்வை திட்டமிட்டிருந்த காலமான பிற்பகல் 4-30 முதல் 6-00 மணிக்குள்ளான நேரத்தில் நடத்தி முடித்து விட்டார் என்பதைத்தான் மணமகன் சவுந்திரராஜனின் பதிவு நமக்குக் கூறுகிறது.*

*காவல்துறை அதிகாரிகள் மாலை 6-30 மணிக்குத் தான் மணவிழா நிகழ்விடம் வந்து பெரியாரையும், மணமக்கள், அவர்களது பெற்றோர்கள் ஆகியோரைக் காவல் நிலையத்துக்கு அழைத்து சென்றதாகவும் தோழர் சவுந்திரராஜன் தனது குறிப்பில் கூறியுள்ளவாறு காவல்துறையினரும் எல்லாம் முடிந்த பின்பே அங்கு வந்துள்ளனர்.*

*ஆக இரு குடும்பத்தவரும் மனம் ஒப்பி நிகழ்த்திக் கொள்ள எண்ணினாலும், கிறிஸ்துவ மதவாதிகளும், கிறிஸ்துவ மதவாதிகளுக்கு துணை நிற்கும் காவல் துறையும் தடுக்க எடுத்த முயற்சிகளையும், முதல் கத்தோலிக்க சுயமரியாதை திருமணத்தைத் திட்டமிட்டவாறு நடத்தியே ஆக வேண்டும் என குடும்பத்தாரும், பெரியாரும் எடுத்த முயற்சிகளும் இரு தரப்பாரும் தங்கள் நிலைப்பாட்டில் பிடிவாதமாக இருந்ததைக் காட்டுகிறது..*

*மூன்று அழைப்பிதழ்களிலும் வெவ்வேறு நேரமும், வெவ்வேறு நிகழ்விடமும் குறிப்பிடப்பட்டிருந்ததற்கான காரணங்கள் இவை தாம்.*

*நாகம்மையார் மறைவு; அடுத்து நடந்த கத்தோலிக்கர் சுயமரியாதை திருமணம் ஆகியவை குறித்து உள்ள தேதி குழப்பம் குறித்து அடுத்த இதழில் காண்போம்.*

DATE OF PUBLICATION 28.05.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பேராவூரணியில் பெரியாரியல் பயிலரங்கம்






*24-05-2014* சனிக்கிழமை காலை 9-30 மணி முதல் மாலை 6-00 மணி வரை, தஞ்சை மாவட்டம் பேராவூரணி பேருந்து நிலையம் அருகே உள்ள எம்.எஸ் விழா அரங்கில், பெரியாரியல் பயிலரங்கம் நடைபெற்றது. பேராவூரணி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக நடைபெற்ற இந்த பயிலரங்கை, தமிழக மக்கள் புரட்சிக் கழகப் பொதுச்செயலாளர் அரங்க.குணசேகரன் தொடங்கி வைத்தார். பெரியார் பற்றிய அறிமுக வகுப்பை கழக பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரனும், கடவுள் - புராணங்கள் என்ற தலைப்பில் ஈரோடு மண்டல செயலாளர் இராம. இளங்கோவனும் வகுப்பெடுத்ததை தொடர்ந்து, பெரியாரியலின் இன்றைய தேவை என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வகுப்பெடுத்தார். மதிய உணவு இடைவேளைக்கு பிறகு ஜாதியின் தோற்றமும், வளர்ச்சியும் என்ற தலைப்பில் அரங்க.குணசேகரனும், இட ஒதுக்கீடு என்ற தலைப்பில் கழகத் தலைவரும் வகுப்பெடுத்தனர். பயிலரங்கில் கலந்துகொண்ட 100 க்கும் மேற்பட்டோரில் பெரும்பாலும் இளைஞர்கள் என்பதும், இதில் பாதிக்கும் மேற்பட்டோர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பேராவூரணி கழகத் தோழர்கள் திருவேங்கடம், சீனிகண்ணன், பெரியசாமி, ஜெயசந்திரன் ஆகியோர் நிகழ்ச்சிக்கான பணிகளை ஒருங்கிணைத்தனர்.

## சென்னையில் பகுத்தறிவு பெண்ணுரிமை விளக்கக் கூட்டம்




30.4.2014 புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் சென்னை இராயப்பேட்டையில் தோழர் பத்ரிநாராயணன் 10 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி "பெண்ணடிமை-பகுத்தறிவு" விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருவல்லிக்கேணி பகுதி கழகம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பொதுக் கூட்டத்தில், சுயமரியாதை கலை, பண்பாட்டுக் கழகக் கலைக் குழுவினரின் பறை ஆட்டம், வீதி நாடகம், இசை நிகழ்ச்சிகளோடு, காவை இளவரசனின் 'மந்திரமா? தந்திரமா?' அறிவியல் விளக்க நிகழ்ச்சியும் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்குரைஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன் முதலானோர் உரையாற்றினர். சரவணன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். அருண் நன்றி கூறினார்.

## ஈரோட்டில் ஆவணப் படம் வெளியீட்டு விழா

"இந்த நிலம் இராணுவத்துக்குச் சொந்தமானது" என்ற தமிழ்ப் படுத்தப்பட்ட ஆவணப்படத்தின் வெளியீட்டுவிழா, ஈரோடு சூரம்பட்டி 4 ரோட்டில் உள்ள ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலக மாடியில் உள்ள கூட்ட அரங்கில் 11.5.2014 ஞாயிறு மாலை 6 மணிக்கு நடைபெற்றது. ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கணேச மூர்த்தி ஆவணப்படத்தை வெளியிட, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர்மணி பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார். கி.வேபொன்னையன் தலைமை வகித்தார். இலங்கைக்குச் சென்று ஆவணப் படத்தை எடுத்த 23 வயதே ஆன இளம் ஊடகவியலாளர் மகா. தமிழ்ப் பிரபாகரனுக்கு தோழர் கண.குறிஞ்சி சிறப்பு செய்தார், மகா. தமிழ்ப் பிரபாகரன் ஏற்புரை வழங்கினார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

## பெங்களூரில் கழக சார்பில் முள்ளிவாய்க்கால் வீரவணக்க நாள்



21-05-2014 புதன்கிழமை மாலை 5-00 மணியளவில், பெங்களூர் பென்சன் ரோடு, இந்திய சமூகக் கழகம் (I.S.I) அரங்கில். கர்நாடக திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக, மே -18 முள்ளிவாய்க்கால் வீரவணக்க நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, உலகத் தமிழர் பேரமைப்பு பேராசிரியர் இராமமூர்த்தி, 'விடியல் நூலகம்' வில்லாளன், பாவாணர் பைந்தமிழ்ப் பாசறை தமிழடியான், கருநாடகத் தமிழ்மக்கள் இயக்கம் சீ.இராசன், கருநாடக மாநில கழகத் தலைவர் இராவணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். தி.வி.க கருநாடக மாநில அமைப்பாளர் இல.பழனி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கழகத் தோழர் இராமநாதன் நன்றி கூறினார்.

### பிழை திருத்தம்

15-05-2014 நாளிட்ட 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழின் முதல் பக்கத்தில் படத்துடன் வெளியாகியுள்ள திருமண செய்தியில் "ஜாதி மறுப்புத் திருமணம்" என்று பிழையாக வந்துள்ளது; அதை "சுயமரியாதைத் திருமணம்" என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.(ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 29th May 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN